# சுயம்பு

## சிறப்பு மலர் - 02



கலாசாரப் பேரவை

மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகம்

பட்டிப்பளை

- 2013 -

# நூல் விபரம்


பெயர் : சுயம்பு.

வெளியீடு : கலாசாரப் பேரவை,
மண்முனை தென்மேற்கு,
பட்டிப்பளை.

அட்டைப்படம் : திரு. M.வதனரூபன்
அம்பிளாந்துறை.

கணனி வடிவமைப்பு : அ.ஜெயலக்ஷ்மி (வணசிங்கா பிறிண்டர்ஸ்)

அச்சுப்பதிப்பு : வணசிங்கா பிரிண்டர்ஸ்,
இல. 126/1. திருமலை வீதி, மட்டக்களப்பு.
0652227170.


# SUYAMBU - 02

**SPECIAL PUBLICATION TO EXPRESS CULTURAL DAY - 2013.**

Conducted by Cultural Association,
Divisional Secretariat,
Manmunai South West, Paddipalai.

## EDITORIAL BOARD


| | |
|---|---|
| Mr. V.Selvarajah | Miss.T.Yasothini |
| Miss. N. Valarmathy | Mr.Y.Sukirtharajah |
| Mr. P.Neethidevan | Mr.T.Jeevanathan |
| Mr.S.Leanard Lorenzo | Mrs.S.Subashini |
| Miss. P.Thevaki | Mrs.N.Gunaledsumy |
| Mr.S.Kukan | Mrs.J.Jeevarathy |
| Miss.M.Jayantha | Miss.N.Yogamalar |

## ADVISOR

**Mrs.Shivapiriya Vilvaratnam,**
Divisonal Secretary,
Manmunai South West,
Paddipalai.



***Published by:***

*Divisional Secretariat,*
*Manmunai South West, Paddippalai.*

பொருளடக்கம்


- ஆசிச்செய்திகள் iii
- வாழ்த்துச்செய்திகள் iv
- அணிந்துரை viii
- கலாசார கீதம் ix
- கலாசார பேரவை உறுப்பினர்கள் ix
- மண்முனைப் பிரதேசத்தின் தொன்மை வரலாறு ........ 01
- கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரமும் நாடகத்தன்மை கொண்ட திருவேட்டைத் திருவிழாவும் ........ 06
- மண்முனை தென்மேற்குப் பிரதேசத்தின் சில கலை கலாச்சாரப் பாரம்பரியங்கள் மரபுகள் சம்பிரதாயங்கள், வழமைகள் - அன்றும் இன்றும் ........ 09
- விருந்தோம்பல் ........ 17
- படுவான்கரையும் பண்பாட்டுக் கோலமும் ........ 19
- படுவான்கரை மக்களும் பழமை பேசுகின்ற சொற்களும் ........ 20
- குடி மரபும் உறவு முறையின் தனித்தவத் தன்மையும் ........ 23
- படுவான்கரைப் பிரதேசத்தில் கூத்துக்கலையும் அதன் வளர்ச்சியில் பெண்களின் பங்கும் ........ 27
- ஒன்றுபடுவோம் உயர்வு காண்போம் ........ 31
- யதார்த்தம் ........ 32
- நாகரீக நாட்டு நடப்பு ........ 33
- மட்டக்களப்பு தமிழகத்தின் பாரம்பரிய கொம்பு விளையாட்டுக் கலை ........ 34
- பட்டிப்பளைப் பிதேசத்தில் மருவிச் செல்லும் கூத்துக்கலையும் இதை உயிர்ப்பிக்கும் இளைஞர் சமூகமும் ........ 38
- இப்படியும் ஓர் இடைவிலகல் ........ 40
- நானும் அகதி ........ 42
- மனித வாழ்க்கை விழுமியங்களில் நேரமுகாமைத்துவத்தைப் பேணுவதில் முன்னோர்களின் பங்கும் தற்கால நிலையும் ........ 44
- மனிதனாகு ........ 49
- மண்முனைத் தென்மேற்குப் பிரதேசத்தில் வழங்கும் பழமொழிகளை அடிப்படையாகக் கொண்ட சில பதிவுகள் ........ 51
- நாடகம் தோன்றிய வரலாறு ........ 56
- கொக்கட்டிச்சோலைப் பதியின் தொன்மை வரலாறு ........ 60
- கட்டாயக் கல்வி ........ 63
- அஸ்தமனத்தின் வாசலில் ........ 65
- போட்டி முடிவுகள் ........ 66
- கலைஞர் கௌரவிப்பு ........ 72
- நன்றி நவிலல் ........ 77
- விளம்பரங்கள் ........ 78


“ஆக்கங்களில் இடம்பெறும் கருத்துக்களுக்கு ஆக்கியவர்களே பொறுப்பாகும்”



# ஆசிச் செய்தி

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண குருதேவரின் திருவருளால் தாங்கள் அனைவரும் நலமாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்க எல்லாம் வல்ல பகவான் துணைபுரிவாராக.

மட்டக்களப்புத் தமிழகத்தின் மண்முனை தென்மேற்கில் அமைந்துள்ள பட்டிப்பளை பாரம்பரிய பண்பாட்டு மரபுகளும், சுவடுகளும் பதித்துள்ள முதிர்ந்த பிரதேசமாகும். இப்பிரதேச செயலகத்தின் கலாசாரப் பேரவையினால், கடந்த வருடத்தைப் போல் இவ்வருடமும் கலாசார விழாவும், அதனையொட்டி "சுயம்பு" என்னும் சிறப்பு மலர் வெளியீடும் இடம்பெறுவது பாராட்டுதலுக்குரியதாகும்.

நமது கலாசாரத்தில் உயர் மனித விழுமியங்கள் புதைந்து கிடக்கின்றன. இவற்றை நம் இளஞ் சந்ததியினர் அறிந்து கொள்ளும் விதத்தில், வெளிக்கொணர்வது கலாசாரப்பேரவை போன்ற அமைப்புக்களின் தலையாய கடமையாகும்.

தற்போதைய சூழ்நிலையில், நமது பாரம்பரிய பிரதேசத்திற்குரிய சமூக, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை பேணிப்பாதுகாத்து அவற்றை நமது இளைய தலைமுறைக்கூடாக எடுத்துச் செல்வது நமது பாரிய பணியாகும்.

அந்தவகையில், பட்டிப்பளை பிரதேசத்தில் ஆங்காங்கே இலைமறை காயாக இருக்கும் கலைகளையும், கலாசார விழுமியங்களையும் ஆவணப்படுத்தும் நோக்கோடும், கலைஞர்களையும், கவிஞர்களையும், எழுத்தாளர்களையும் கௌரவிக்கும் நோக்கம் கொண்டு வெளியிடப்படும் இச்சிறப்பு மலர் ஆண்டுதோறும் தவறாமல் வெளிவரவேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பாகும். தங்கள் பிரதேச கலாசாரப் பேரவை இத்தகைய விழாக்களை ஏற்பாடு செய்வதன் மூலம் அப்பகுதி மக்களின் கலாசார விழுமியங்கள் புதிய உத்வேகம் பெறும் என்பதில் ஐயமில்லை.

மேற்படிப் பேரவையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கலாசார விழாவும் சிறப்பு மலர் வெளியீடும் வெற்றிகரமாக நடந்தேற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். அத்துடன் இந்நிகழ்வுகளோடு தொடர்புடைய அனைவருக்கும் இறைவன் மேலும் அர்ப்பணிப்போடு கூடிய ஆர்வத்தையும் வழங்கவேண்டுமென பகவான் ஸ்ரீ ராமகிருஸ்ணரை இறைஞ்சுகின்றேன்.

SWAMI - IN - CHARGE
RAMAKRISHNA MISSION
RAMAKRISHNAPURAM,
BATTICALOA.

இறைபணியில்,
சுவாமி கபாலீசானந்தா
(சுவாமி கபாலீசானந்தர்)



# ஆசிச் செய்தி

சுயம்பு மூர்த்தியான தான்தோன்றீஸ்வரர் அமர்ந்து அருள்பாலிக்கும் மண்முனை தென்மேற்கு பிரதேசத்தில் எம்பெருமானின் நாமம் கொண்டு உருவாகும் "சுயம்பு" இவ்வருடம் இரண்டாவது மலராக வெளிவருவதையிட்டு மனமகிழ்வடைகிறேன்.

எம் மண்ணின் பெருமைகளையும் சிறப்புக்களையும் தனித்தன்மைகளையும் தாங்கி வருவதோடு எமது பிரதேச கலைஞர்களின் திறமைகளைத் தேடியறிந்து ஆவணப்படுத்தும் இச் செயற்பாட்டைப் பாராட்டி நன்றி கூறுவதோடு இம்மலர் சிறப்பாக வெளிவரவும் கலாசார நிகழ்வு மங்கலகரமாக நடந்தேறவும் எம் பெருமான் சுயம்பு மூர்த்தியைப் பாதம் பணிந்து ஆசியினை வழங்குகின்றேன்.

சிவஸ்ரீ. வ. சோதிலிங்கம்
பிரதம குரு,
திருத்தான்தோன்றீச்சரம்,
கொக்கட்டிச்சோலை.



# வாழ்த்துச் செய்தி

மண்முனை தென்மேற்குப் (பட்டிப்பளை) பிரதேச செயலக கலாசார பேரவையினால் கலாசார விழாவினை முன்னிட்டு நடாத்தப்படவிருக்கும் ''சுயம்பு'' எனும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு மிகவும் மனமகிழ்ச்சி அடைகின்றேன்.

ஒவ்வொரு சமூகமும் தங்களது கலாசாரங்களை பேணிப்பாதுகாப்பது மட்டுமல்லாது எதிர்கால சமூகங்களுக்கும் எடுத்துச் செல்வதில் மிகவும் அக்கறையுடையதாக இருக்கவேண்டும். இல்லாது போனால் மாற்றமடைந்து வரும் தற்கால சூழ்நிலையில் சமூகம் நலிவடைந்து போய்விடும்.

தனித்திறமை கொண்ட கலைஞர்களின் கலை இலக்கியப் பணிகளையும், அவர்களின் இலைமறை காயாக இருக்கும் சுய ஆற்றலையும், உள்ளக் கிடக்கைகளையும் ஆவணப்படுத்தும் முகமாக அவர்களது படைப்புக்களை தாங்கிவரும் "சுயம்பு" எனும் மலர் வெளியீட்டிற்கு முன்னின்று உழைத்த பிரதேச செயலாளருக்கும் ஒன்றியத்தின் அனைத்து ஊழியர்களுக்கும் எனது மனம் நிறைந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் இம்மலர் வெளியீடு சிறந்த ஓர் மலராக மிளிர வேண்டும் என்றும் எனது இதயம் கனிந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி. பி. எஸ். எம். சார்ள்ஸ்
அரசாங்க அதிபரும், மாவட்ட செயலாளரும்,
மட்டக்களப்பு மாவட்டம்.



# வாழ்த்துச் செய்தி

கிழக்கிலங்கையில் இயற்கை அழகும் வரலாற்றுத் தொன்மையும், பாரம்பரிய கூத்துக்கலையும் ஒருங்கே அமையப்பெற்ற இடமாக மட்டக்களப்பு மாவட்டம் திகழ்கின்றது. இம்மாவட்டத்தில் நீர் வளமும், நிலவளமும் மிக்க எழில் மிகு கிராமமாக பட்டிப்பளை விளங்குகின்றது. இங்கு வாழ்கின்ற மக்கள் மந்தை வளர்ப்பு, விவசாயம் போன்ற தொழில்களில் சிறந்து விளங்குகின்றனர். பாரம்பரிய கலையான கூத்துக் கலைகளும், கூத்துக் கலைஞர்களும் வாழ்கின்ற இடமாக பட்டிப்பளைப் பிரதேசம் விளங்குகின்றது.

பட்டிப்பளை பிரதேச மக்களின் வாழ்வியல் அம்சங்கள், கலை வடிவங்கள் என்பன அச்சமூகத்தின் எதிர்கால சந்ததியினருக்கு சிறந்த முறையில் கையளிக்கப்படல் வேண்டும் என்ற நோக்கோடு இப்பிரதேச செயலகம் கலாசார விழாவினையும், சுயம்பு - 02 எனும் மலரையும் வெளியிடவுள்ளது. அப்பிரதேசத்தின் கலை கலாசார பாரம்பரியங்களைத் தாங்கி வெளிவரவிருக்கும் இம்மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இம்மலரானது எதிர்கால சந்ததியினருக்கு எடுத்துக்காட்டும் ஒரு ஊடகமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

இவ்விழாவினை முன்னின்று நடத்துகின்ற பிரதேச செயலாளர், கலாசார உத்தியோகத்தர் மற்றும் கலாசாரப் பேரவையினர் அனைவருக்கும் எனது நன்றியினையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு.D.W.U.வெலிக்கல
பணிப்பாளர்
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
கல்வி அமைச்சு
கிழக்கு மாகாணம்



# வாழ்த்துச் செய்தி

பட்டிப்பளைப் பிரதேச கலாசாரப் பேரவையின் சமூக வாழ்வியல் அம்சங்கள் அடங்கிய களஞ்சியமாகத் திகழும் "சுயம்பு" எனும் சஞ்சிகை இவ்வாண்டும் இரண்டாவது இதழாக வெளிவருவதையிட்டு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரும் உவகை அடைகின்றேன்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஆன்மாவாக விளங்கும் படுவான்கரைப் பகுதிக்கென்றே தடம் மாறாத தடயங்களும் அடையாளங்களும் தனித்துவமாக உண்டு. இதில் பட்டிப்பளைப் பிரதேசத்தின் செழிப்பு நிலையை பறை சாற்றும் கொக்கட்டியப்பனின் பெயரில் உதித்த "சுயம்பு" எனும் சஞ்சிகையானது இப்பிரதேச மக்களின் கலை, கலாசார, பண்பாட்டு அம்சங்களை தாங்கியதாக வெளிவருவது சிறப்பானதாகும்.

நவீன யுகமும், நாகரீக மோகமும் கொண்ட இவ்வுலகில் நவீன தொடர்பு சாதனங்களின் ஆக்கியரமிப்புக்குள் அகப்பட்டுள்ள மனித இனத்தின் பாரம்பரியங்கள் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து கொண்டு போகின்ற நிலையில் எமது பட்டிப்பளைப் பிரதேசமும் விதிவிலக்கல்ல. இந்நிலையில் பிரதேச எழுத்தாளர்களை ஊக்குவித்து அவர்களின் எண்ணத்து உணர்வுகளில் ஊறித் தோய்ந்துபோன மரபு வழி பண்பாட்டம்சங்கள் ஒவ்வொன்றும் இவ் சஞ்சிகையின் ஆக்கங்களாக வெளிவருகின்றமை மற்றுமொரு சிறப்பாகும்.

அன்பு கொண்ட சமுதாயத்தை உருவாக்குவதும் மரணித்துப்போன மனிதநேயத்தை மாண்புறச் செய்வதும் மாறிவரும் உலகில் எதிர்கால சவால்களை எதிர்கொள்ளும் திறனை இப்பிரதேச மக்களிடம் விருத்தி செய்வதும் "சுயம்பு" சஞ்சிகையின் எதிர்கால உயரிய பணியாக அமைய வேண்டும் எனப் பாராட்டுவதோடு இச் சஞ்சிகை வெளியீட்டில் அயராது பங்காற்றிக் கொண்டிருக்கும் பிரதேச செயலாளர் உள்ளிட்ட மலர் குழுவினருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு.G.J.அனுராஜ்
முகாமையாளர்
வேள்ட்விஷன் லங்கா
பட்டிப்பளை –ADP



# அணிந்துரை

எமது பட்டிப்பளை பிரதேச செயலக கலாசாரப் பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் கலாசாரவிழா - 2013 இனை ஒட்டி வெளிவருகின்ற "சுயம்பு" சிறப்பு மலரினூடாக மீண்டும் உங்களை சந்திக்க வாய்ப்பு கிடைத்திருக்கின்றது. இது எமது வரலாற்றில் இரண்டாவது குழந்தை. எமது கன்னி முயற்சிக்கு கடந்த வருடம் கிடைத்த வரவேற்பும், ஆசீர்வாதமும் தான் தாமதமின்றி அடுத்த மலரையும் வெளியிட ஆர்வத்தினையும், எதிர்பார்ப்பினையும் அளித்திருக்கின்றது.

பட்டிப்பளையில் கொட்டிக்கிடக்கும் பழமைகளை, மரபுகளை, கலாசார பாரம்பரியங்களை எடுத்தியம்ப ஒரு மலருக்கு சாத்தியமில்லை. எண்ணற்ற சிறப்பு மலர்கள் மலர வேண்டும், வெவ்வேறு கோணங்களில், வித்தியாசமான தோற்றங்களில் அவை மிளிர வேண்டும்; "சுயம்பு"விற்கென ஒரு தனித்துவம் இருக்க வேண்டும் என்பது எனது அவா, எதிர்பார்ப்பு.

இம்மண்ணில் மலர்ந்த கவிஞர்கள், எழுத்தாளர்கள், மாணவர்களின் ஆக்கங்களை தாங்கியே இம்முறையும் "சுயம்பு" வெளியிடப்படுகின்றது.

இம்மலரை உருவாக்க அரும்பாடுபட்ட என் அலுவலக உத்தியோகத்தர்கள் கலாசார பேரவை உறுப்பினர்கள் அனைவரையும் பெருமையுடன் பாராட்டுகின்றேன்.

இம்மலருக்கு மீண்டும் அனுசரணை வழங்கி மிகக் காத்திரமான பங்களிப்பினை நல்கியிருக்கின்ற உலக தரிசன **(World Vision)** நிறுவன முகாமையாளர் உள்ளிட்ட அனைவருக்கும் நன்றிகள். இலைமறை காயாக இங்கு எத்தனையோ கலைஞர்கள் அத்தனை பேருக்கும் "சுயம்பு" மீண்டும் களம் அமைக்கட்டும். "சுயம்பு" சிறக்க எல்லாம் வல்ல இறைவன் துணை புரிய பிரார்த்திக்கின்றேன்.

திருமதி. சிவப்பிரியா வில்வரத்னம்
பிரதேச செயலாளரும் கலாசார பேரவை தலைவரும்,
மண்முனை தென்மேற்கு,
பட்டிப்பளை.

# கலாசார கீதம்



மண்முனை தென்மேற்கென்னும் பகுதி
மனம் மகிழ்ந்தே வாழின்ப வீடு

தண்ணருள் பொழியும் தான்தோன்றீசன்
தாந்தா முருகன் தலமிரு கண்ணாய்
பண்புயர் சைவமும் தமிழும் ஓங்கும்
பழமை மிக்க கலை வளர் பூமி

காடும் மலையும் சூழனியும் சேர்ந்தே
களப்பும் குளமும் வான் நிலம் நீர்தர
நாடு நுகர நெல் பிற தானியம்
நயமாய்ப் பாலும் தேனும் நல்கிடும்

வீரம் உழைப்பு ஊக்கம் கொண்டே
வீறுடை குலமாய் என்றுமே வாழ
தீர்த்துடனே கல்வி வளர்த்து
திருவை உயர்த்த வழியின்னும் காண்போம்

நெற்பயிர் செழிக்க நீர் வளம் பெருக்கி
நிலத்தினில் நிறையப் பயிர்வகை விதைப்போம்
பற்பல கைத்தொழில் பற்றியே மேலும்
பறவையும் கறவையும் இறாலும் வளர்ப்போம்

மதுமோடு சிறுமை வறுமைகள் போக்கி
மனத்தினை வெளுத்தே மாண்புற உயர்வோம்
புதுவழி கண்டு நாமெல்லாம் ஒன்றி
புத்துணர்வோடு ஈழத்தெழுவோம்

வாழிய மண்முனை தென்மேற்கு
வளமெல்லாம் பெருக்கி வளர்ந்தோங்கி
வாழியதெல்லாம் குறை வின்றி
வானகமொக்க யென்றும் வாழியவே



**மகிழை மகேசன்**

# கலாசார பேரவை உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திருமதி. சிவப்பிரியா வில்வரத்னம் (பிரதேச செயலாளர்) |
| உப தலைவர் | : | திரு. சி. கங்காதரன் |
| செயலாளர் | : | செல்வி. நாகராசா வளர்மதி (கலாசார உத்தியோகத்தர்) |
| உப செயலாளர் | : | திரு. ஆ. தனுஸ்கரன் |
| பொருளாளர் | : | திரு. கோ. தவகுமார் |
| இணைப்பாளர் | : | திரு. வ. செல்வராஜா (நிருவாக உத்தியோகத்தர்) |
| கணக்காய்வு உத்தியோகத்தர் | : | திரு. எஸ்புவனேஸ்வரன் (கணக்காளர்) |

உறுப்பினர்கள் :

| | |
|---|---|
| திரு. T. நடராஜா | (கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்) |
| திரு. S. ருசகுமார் | (சமுர்த்தி உத்தியோகத்தர்) |
| திரு. K. சிவகுருநாதன் | (கிராமசேவை உத்தியோகத்தர்) |
| செல்வி. P. தேவகி | (கிராமசேவை உத்தியோகத்தர்) |
| திரு. T. ஜீவநாதன் | (அலுவலக பணியாளர்) |
| திரு. G. பேரின்பம் | (கலாசார பேரவை உறுப்பினர்) |
| திரு. V. வல்லிபுரம் | (கலாசார பேரவை உறுப்பினர்) |
| திரு. I. யோகலிங்கம் | (கலாசார பேரவை உறுப்பினர்) |
| திரு. P. நல்லதம்பி | (கலாசார பேரவை உறுப்பினர்) |
| திரு. M. கேதீஸ்வரன் | (கலாசார பேரவை உறுப்பினர்) |
| திரு. P. புட்பேந்திரன் | (கலாசார பேரவை உறுப்பினர்) |
| திரு. S. அருளானந்தம் | (கலாசார பேரவை உறுப்பினர்) |
| திருமதி. S. நிர்மலாதேவி | (கலாசார பேரவை உறுப்பினர்) |
| செல்வி. T. பவநிதா | (கலாசார பேரவை உறுப்பினர்) |
| திரு. K. செதீஸ்கரன் | (கலாசார பேரவை உறுப்பினர்) |
| திரு. T. கனிவளன் | (கலாசார பேரவை உறுப்பினர்) |
| திரு. A. துரைராஜா | (கலாசார பேரவை உறுப்பினர்) |
| திரு. V. வாலசிங்கம் | (கலாசார பேரவை உறுப்பினர்) |
| செல்வி. M. ஜயந்தா | (பட்டதாரி பயிலுனர்) |
| செல்வி. T. மேகலா | (பட்டதாரி பயிலுனர்) |

மலர்க் குழு :

| | |
|---|---|
| திரு. V. செல்வராஜா | செல்வி. T. யசோதினி |
| செல்வி. N. வளர்மதி | திரு. Y. சுகிர்தராஜா |
| திரு. P. நீதிதேவன் | திருமதி. S. சுபாசினி |
| திரு. S.L. லொறன்ஸோ | திருமதி. N. குணலெட்சுமி |
| திரு. S. குகன் | திருமதி. J. ஜீவரதி |
| செல்வி. P. தேவகி | திரு. T. ஜீவநாதன் |
| செல்வி. M. ஜயந்தா | |

# கலாசார பேரவை உறுப்பினர்கள் – 2013



இடமிருந்து வலம் (அமர்ந்திருப்போர்)

திரு.S.புவனேஸ்வரன். திரு.V.செல்வராஜா. திருமதி.சிவப்பிரியா வில்வரத்னம். செல்வி.N.வளர்மதி. திரு.G.பேரின்பம்.

இடமிருந்து வலம் (முதலாம் வரிசையில் நிற்போர்)

திரு.S.கங்காதரன். திரு.T.நடராஜா. செல்வி.T.பவநிதா. திருமதி.S.நிர்மலாதேவி. செல்வி.T.மேகலா. செல்வி.M.ஜயந்தா. திரு.I.யோகலிங்கம். திரு.T.ஜீவநாதன்.

இடமிருந்து வலம் (இரண்டாம் வரிசையில் நிற்போர்)

திரு.A.தனுஷ்கரன். திரு.P.புட்பேந்திரன். திரு.S.ருசகுமார். திரு.K.தவகுமார். திரு.K.கனிவளன். திரு.S.அருளானந்தம். திரு.K.சிவகுருநாதன்.

இடமிருந்து வலம் (மூன்றாம் வரிசையில் நிற்போர்)

திரு.P.நல்லதம்பி. திரு.M.கேதீஸ்வரன். செல்வி.P.தேவகி. திரு.V.வல்லிபுரம்.

# மண்முனைப் பிரதேசத்தின் தொன்மை வரலாறு



செ. சற்குணம்
முதியோர்சங்கத் தலைவர்
அரசடித்தீவு (வடக்கு)

மட்டக்களப்பு பிரதேசத்தின் எல்லைகள் வடக்கே வெருகல் நதியும் தெற்கே குமுக்கன் ஆறும் கிழக்கே வங்கக் கடலும் மேற்கே அடர்ந்த காடும் அடங்கிய இவ் நான்கு பக்க எல்லைகளுக்கும் நடுவில் பரந்த நிலப்பரப்பினை தன்னகத்தே கொண்டுள்ள பெரும் நிலப்பரப்பு மட்டக்களப்பு.

இப்பரந்த நிலப்பரப்பினை வடக்குத் தெற்காக சுமார் 50 மைல் நீளமுள்ள மட்டக்களப்பு வாவி ஊடறுத்துச் செல்வதால் இப்பிரதேசம் இரு பெரும் பிரிவுகளாயின. இதன் கிழக்குப் புறத்தே சூரியன் எழுவதால் எழுவான் கரை என்றும் மேற்குப் புறத்தே சூரியன் படுவதால் படுவான் கரையெனவும் காரணப் பெயரிட்டும் அழைக்கப்படலாயின. இப்பிரதேசத்தின் கேந்திர நிலையமாக மண்முனை பிரபல்யமடைந்தது. இதனால் தான் மண்முனையை மையப்படுத்தி மண்முனை வடக்கு, தெற்கு, மேற்கு, தென்மேற்கு எனப் பலவாறு அழைக்கலாயினர். எனவே மண்முனையின் தென்மேற்குப் பகுதியில் அரச நிருவாகம் அமைந்துள்ளது. ஒல்லாந்தர் புளியந்தீவில் 1658ம் ஆண்டு காலப்பகுதியில் கோட்டை கட்டும் வரையில் மண்முனை சிறப்புற்று விளங்கியது.

எனவே மண்முனை தென்மேற்குப் பிரதேசத்தின் தொன்மை வரலாற்றினை நோக்குமிடத்து

## ஆ வரலாறு

இவ்வாவியின் பல இடங்களில் களப்பு நிலைகள் உள்ளன. அந்நியர் இவ்வாவியினூடாகப் பிரயாணம் செய்யும் போது அவர்களின் ஓடம் மட்டமான களப்பில் தகைவு பெற்ற போது அவர்கள் அக்களப்பினை பிரதிபலித்துக் கூறியதாவது "மட்டுக்கு மட்டடா மட்டக்களப்படா", என்ற பண்டைய வரலாற்றுக் கதையினை அடியொற்றியே மட்டக்களப்பு எனும் பெயர் வரக் காரணமாயிற்று. இக்களப்பின் தென்மேற்குத்திசையில் பரந்த நிலப்பரப்பே படுவான்கரைப் பிரதேசம். இப்பகுதி குறிஞ்சி, முல்லை, மருதம் நிலங்களையுடைய பரந்த நெல்வயல்களைத் தன்னகத்தே கொண்டது.

குணசிங்கன் கவிபிறந்து 3500 வருட காலப்பகுதியில் மட்டக்களப்பினை ஆட்சி செய்து வருங்காலப்பகுதியில் கலிங்க தேசத்தில் ஒறிசா நாட்டினை அரசுபுரியும்

குகசேனனின் புத்திரி உலகநாச்சி புத்ததாதுவையும், சிவலிங்கத்தையும் தந்தை குகசேனனிடமும் சகோதரன் உலகநாதனிடமும் விடைபெற்றுக் கொண்டு தம்பி சிவநாதனோடு வர்த்தகப்படகிலேறி மணிபுரத்தினை வந்தடைந்து பின்னர் விஷய துபிவத்தில் மேகவர்ணனைக் கண்டு குலம் கோத்திரம் யாவும் விளங்கப்படுத்தி புத்தருடைய தசனத்தினை கொடுத்தாள். அவன் அதனைப் பெற்று இன்புற்று அவளை நோக்கி உமக்கு யாது வேண்டுமென வினவ அவள் கூறினாள் இப்பிரதேசத்தில் காடடர்ந்த குடி வாழ்வில்லாத பகுதி ஒன்றினை ஈயும்படி வேண்டினாள். அதனை செவிமடுத்த அரசன் மேகவர்ணன் மட்டக்களப்பினை அரசுபுரியும் தனது சிநேகிதன் குணசிங்கனுக்கு ஒரு திருமுகம் வரைந்து அவளிடம் கொடுத்தான். அதன் சாரம் மட்டக்களப்பு, உன்னரசகிரி, இவைகளில் குடிவாழ்வில்லாத பகுதி ஒன்றினை இவளுக்கு நிந்தமாக ஈயும்படி குறிப்பிட்டி ருந்தான். பின்னர் உலகநாச்சிக்கு இரத்தின மாலையொன்றினையும் சன்மானமாகக் கொடுத்து மட்டக்களப்பிற்கு அனுப்பி வைத்தான்.

உலகநாச்சி மட்டக்களப்பினை அடைந்து குணசிங்கனிடம் திருமுகத்தினைக் கொடுக்க அவனும் அதை வாசித்துப் பார்த்து சாரமறிந்து சந்ததியுரிமை கொண்டாடி மட்டக்களப்பிற்குத் தென்பாகம் அம்பிளாந்துறையினை அண்மித்த வளர்ந்த காடு செறிந்த பகுதியினை நிந்தமாக ஈந்து தனதாட்களை அனுப்பி காடுகளையழித்து மாழிகை உண்டாக்கி உலகநாச்சியினைக் குடியமர்த்த அவளும் சிலகாலம் வாழ்ந்த பின்னர் தனது தம்பி சிவநாதனைத் தந்தையிடம் அனுப்பி 100 குகக் குடும்பங்களையும், 30 சிறைக்குடும்பங்களையும் அழைத்து தமக்கருகிலிருத்தி ஆலயமமைத்து சிவலிங்கத்தை ஸ்தாபித்து வழிபட்டு வரலானாள்.

மேலும் ஒறிசாவிலிந்து அநேகமான குகக்குடும்பங்களை அழைத்து அப்பிரதேசத்திலுள்ள காடுகளை அழிப்பித்து அக்குடும்பங்களை குடியமர்த்தி மணல் முனை என நாமம் சூட்டி அப்பகுதிக்கு அரசியாய் வாழும் காலத்தே களப்பு முனைக்குத் தென்பாகமாயுள்ள காடுகளைத் திகடன் என்பான் அழிப்பிக்கும் போது திகடன் கொக்குநெட்டி மரத்தினை வெட்டினான். அதிலிருந்து உதிரம் வெளிப்பட்டது. வெட்டு வாயினைத் தனது உடைதுணியினால் கட்டி மறைத்து விட்டு உலகநாச்சியிடம் போய் அறிவித்தான்.

உலகநாச்சியும் அவ்விடத்தினைப் போய்ப் பார்க்கும் போது குறிப்பிட்ட மரத்தில் இலிங்கம் இருப்பது கண்டு பிறர்கண்ணுக்குப் புலப்படாதபடியால் உலகநாச்சியும் சிவலிங்கம் எனத் திட்டம் செய்து அண்மித்த காட்டை அழித்து தூசி நீக்கி துப்பரவு செய்து ஆலயமியற்றி இந்தியாவிலிருந்து பட்டர் மூவரை அழைத்து லிங்கத்திற்கு பூசை செய்யும்படி திட்டம் செய்து கழனிகள் திருத்தி வாழும் காலத்தே குணசிங்கனுடன் பிறந்த கிரசன் என்பவனைத் திருமணம் செய்து ஆண், பெண் இரு குழந்தைகளைப் பெற்று வாழ்ந்துவரும் போது இந்தியாவில் தந்தபுரத்திலிருந்து ஆலயத்திற்கு தொண்டூழியகாரரை அழைப்பித்து தமக்கருகாமையில் குடியமர்த்திப் பத்தன் என்பானை அவர்களுக்குத் தலைவனாக்கி இரண்டு சிவாலயங்களுக்கும் தொண்டூழியம் செய்யும்படி ஏற்பாடு செய்தனன்.

கொக்கட்டிச் சோலையில் லிங்க வழிபாடு ஆரம்பமானது கலிபிறந்து 3500 ஆண்டளவில் அங்கு கிரகதம்பிரான் கோயிலுக்குக் கிழக்குத் திசையில் தற்போது மூடப்பட்டிருக்கும் பழைய தீர்த்தக்கிணறு லிங்க வழிபாடு ஆரம்பிக்கப்பட்ட காலத்திலே அமைக்கப்பட்டது ஆலயம் பின்னர் அமைக்கப்பட்டது.

## ஆ பெருமை

மண்முனை தென்மேற்குப் பிரதேசத்தின் பெருமையைக் கூறுங்கால் இப்பிரதேசத்தில் வணக்கத் தலங்களிலேயே மிகப் பழமையும், பெருமையும், மகிமையும் ஒருங்கமைந்த ஸ்ரீ தான்தோன்றி லிங்கம் உருவெடுத்தமர்ந்து பண்டு தொட்டின்றுவரை அடியார்க்கருள்

பாலித்து வருவதே அதியுன்னத பெருமையாகும்.

மேலும் மட்டக்களப்பு வாவி இப் பிரதேசத்துக்கு அரணமைத்து நீர்வளத்தை யும், நீர்வாழ் உயிரினத்தையும் இப்பிரதேசத்து மக்களுக்கு வழங்கி வருகிறது. அடுத்து செந் நெல் விளை வயல் நிலங்களும், செழுமை மிக்க பச்சைபசேல் என்ற புல் நிலமும் இப்பிரதேசத்திற்கு இயற்கையாக அமைந்தி ருப்பதே இயற்கை அன்னையின் கொடையா கும். மேற்குத் திசையிலுள்ள மேட்டுநில மலைத்தொடரில் அருவிகள் ஊற்றெடுத்து வயல் நிலங்களுக்கு நீரை வாரி வழங்கும் காட்சிகளும், கார்மேகங்கள் மாரி பொழிய கானமயில்கள் நடனமாட கருங்குயில்கள் இசைபாட இந்நிகழ்வினைக் காண்போர் மனங்கழிப்புறுங் காட்சிகளும், மறுபுறத்தே வானரங்கள் மரம் தாவ, வண்டினங்கள் மலர் தாவ, கானக்குறவர்கள் கவிபாட, கருமணி நாகங்கள் கதிரவனின் வரவு கண்டு தலை எடுத்தாட, கறவையினங்கள் கான் கன்றுகளு டன் குதிபாயும் இத்தனை அளப்பரிய காட்சிகளையும் தன்னகத்தே கொண்ட பழம் பெரும் பெருமையையுடையது இப்படுவான் கரைப் பிரதேசம்.

## ❧ சிறப்பு

இவ்இலங்கை மணித்திருநாட்டிலே இயற்கையாக உருவெடுத்த இரண்டு லிங்கங்கள் அவை முறை ஒட்டுசுட்டான், கொக்கட்டிச்சோலை தான்தோன்று லிங்கம். இந்நிகழ்வே மனித சமூகமுள்ள வரையில் இப்பிரதேசத்திற்கு அழியாச்சிறப்பாகும்.

இவ்லிங்கமானது இங்கமர்ந்து அன்று தொட்டின்றுவரை அடியார்க்கு அழப்பரிய அருள்களை செய்துகொண்டே வருகின்றது. இதுவே இப்பிரதேசத்தின் அழியாச் சிறப்பாகும்.

கல்லெருது புல்லருந்தி கசடனைக் கதிகலங்க வைத்தது, கழுத்தை அறுத்து கடும்பழிபடுத்தவருக்கு காயத்தினை மாற்றி கழுத்தை ஒட்டவைத்தது, தந்தரோகத்தினால் பீடிக்கப்பட்டு தவங்கிடந்தவர்க்கு கனவில் மருந்து கூறி பிணியினைத் தீர்த்ததும் இவ் இலிங்கப் பெருமானின் சிறப்பாகும்.

## ❧ கலை கலாச்சாரங்கள்

இப்பிரதேசத்து மக்களுக்கான ஓர் தனித்துவமான கலைகள், கலாசார விழுமியங் கள் உண்டு. அவைகளை பண்டு தொட்டின்று வரை அருகி அழிந்தொழிந்து போகாவண் ணம் பேணிப்பாதுகாத்து வருவது இப்பிர தேசத்து மக்களே என்றால் மிகையாகாது. அவைகள் முறையே நாட்டுக்கூத்து, கோலாட்டம், கும்மி, வசந்தன், கரகம், சிலம்பாட்டம், மாடாட்டம், பொய்க்காலா ட்டம் போன்றவைகள்.

## ❧ பாடல்கள்

நாட்டார் பாடல்கள், ஊஞ்சல் பாடல்கள், பள்ளுப் பாடல்கள், தாலாட்டுப் பாடல்கள், (இவை இருபிரிவுகள் அம்மன் தாலாட்டுப் பாடல்கள், சிறுபிள்ளைத் தாலாட்டுப் பாடல்கள் எனப்படும்.) பொலிப் பாடல்கள், மற்றும் காவியங்கள் இது பல பிரிவுகளைக் கொண்டது கண்ணகை அம்மன் கலியாணக் கால் சுற்றுக் காவியம், ஊர்சுற்றுக் காவியம், கண்ணகை அம்மன் காவியம், மாரியம்மன் காவியம், மழைக்காவியம், வதனமார் காவியம், வைரவர் காவியம் போன்றவைகளும், அகவல்கள் மாரியம்மன் அகவல், வைரவர் அகவல், பிள்ளையார் அகவல், ஆகியனவும் மேலும் குரவை, அம்மானை கோலாட்டம், வசந்தன் கும்மி, எண்ணெய்ச் சிந்து விஷ வைத்தியப் பாடல்கள், வைத்தியப் பாடல்கள் போன்றவைகளும் உள.

## ❧ விளையாட்டுக்கள்

இவை முறையே :- கொம்பு முறி விளையாட்டு, கிட்டிப்புள்ளு, யாடி விளையாட்டு, குச்சங்கிடுகிடு, தட்டுக்கோடு, அண்டுமாங்கட்டை, பிள்ளையார் கட்டை, நாயும் புலியும், கீச்சுமாச்சுத்தம்பலம், வார் விளையாட்டு, கண்கட்டிவிளையாட்டு, தாயக் கட்டை, கொத்துப்போட்டு விளையாடுதல், சுரக்காய் முறித்து விளையாடுதல், வட்டக் காவடி, கிளித்தட்டுப் போன்றவைகள் இங்கு காணப்படுகின்றன.

## இப்பிரதேசத்து மக்களின் வாழ்க்கை முறைகள்

இப்பிரதேசத்து மக்கள் பெரும்பாலா னோர் விவசாயிகள். இவர்கள் நெற்செய்கை யிலும் மேட்டுப்நிலப் பயிர்ச் செய்கையிலும் கால்நடை வளர்ப்பிலும் தங்களின் வாழ் வாதார வருமானத்தினைப் பெற்று வாழ்க்கை நடத்தி வருகின்றனர். கிழக்கு மாகாணத்தில் வடகீழ் பருவப் பெயர்ச்சிக் காற்று ஆரம்பிக் கும் காலத்தே பெரும்போக நெற்செய்கை யினை மழைநீரை மையமாக வைத்தே ஆரம்பிப்பதோடு மேட்டுநில சேனைப்பயிர்ச் செய்கையையும் மேற்கொள்வார்கள். மேட்டுநிலப் பயிர்ச் செய்கையிலும், ஆடு, மாடு, கோழி வளர்ப்பிலும் ஆண் பெண் இருபாலாருமிணைந்து செயற்படுவர். ஆறு, குளம், நீரோடை, வயல்களில் மீன்களைப் பிடித்து உணவிற்குப் பயன்படுத்துவதோடு மேலும் கால் நடைகளிலிருந்து பெறப்படும் பால், தயிர், நெய், இறைச்சி, முட்டை, தேன், கிழங்கு வகை இவைகளை அன்றாட உணவிற் குப் பயன்படுத்துவர். அத்தோடு மரக்கறி வகைகளை அநேகமாகத் தாங்களே உற்பத்தி யாக்கி உபயோகிப்பர். இப் பிரதேசத்து மக்கள் விருந்தோம்பலில் முன்னிலையிலுள்ளவர்கள். பசித்திருக்கப் புசிக்கமாட்டார்கள். தம்மை நாடி வருவோரை வரவேற்று நல்விருந்தளித்து அவர்களை வழியனுப்பும் போது ஏதோ தங்களின் இயல்புக்கேற்பக் கொடுத்தும் அனுப்புவார்கள். பாலும் தேனும் கலந்து ஓடும் பழைய நன்நாடு என்று பண்டிதர் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் பாடிவிட்டு மறைந்தாலும் இப்பதம் படுவான் கரைப் பிரதேசத்திற்கே பொருத்தமானது.

## பாரம்பரிய பழக்கவழக்கங்கள்

இப்பகுதியில் வரலாற்று முக்கியத்து வம் பெற்ற மிகவும் தொன்மையான இரு தேசத்துக்கோயில்கள் உள்ளன. அத்தோடு கிராமங்கள் தோறும் ஆண்தெய்வ, பெண் தெய்வ, சிறுதெய்வ வழிபாட்டுத் தலங்களும் உள. தேசத்துக் கோயில்களில் குடி ரீதியாக விழா எடுப்பார்கள். கிராமங்கள் தோறும் பல குடிப்பிரிவினர் வாழ்ந்து வருவதால் ஒரு குறிப்பிட்ட குடியினர் ஒரு திருவிழாவினை இணைந்து செய்யும் போது கிராமங்களுக்கு இடையேயுள்ள வேறுபாடுகள், பிணக்குகள் எல்லாம் சுமூகநிலைக்கு வருவதற்கும் அத்தோடு கிராம மக்கள் எல்லோரும் ஒன்றிணைந்து தேரோட்ட காலங்க ளில் தேரினை இழுக்கும் போது அங்கே ஒருமைப்பாடு ஏற்பட தேசத்துக் கோயில் வழிவகுக்கின்றது.

எனவே பிரதேச ரீதியான ஒருமைப் பாடு கிராமங்களுக்கிடையே உள்ள சமரச உறவுமுறையினை ஏற்படுத்த தேசத்துக் கோயில் வழிவகுக்கின்றது. கிராமத்துக் கோயில்களில் விழாக்காலங்களில் தெரு(வீதி) ரீதியான வேறுபாடுகள், குடும்பரீதியான பிணக்குகள் யாவும் ஒன்றிணைந்து ஆலயங்க ளில் விழாவெடுக்கும் போது பகைமைகளை சுமூக நிலைக்குக் கொண்டுவர கிராமத்துக் கோயில்கள் வழிவகுக்கின்றது. இவ்வாலயங்க ளில் தீமிதித்தல், கம்பமேறுதல், பள்ளயங் கொடுத்தல், தெய்வமாடுதல், சங்கொலி, தவில் ஒலி, சிலம்பொலி, குரவையொலி, மேளம் அடித்தல் போன்ற மங்கலகரமான ஒலிகளை வணக்கஸ்தலங்களில் பயன்படுத்துவர்.

## உறவு முறைகள்

இப்பிரதேசத்தின் உறவுமுறைகள் யாவும் மாமன் மருமக்கள் தாயின் முறையி லும், திருமண முறையிலும் அமைந்துள்ளது. ஆண் மக்கள் உடமைகளை பராபரிக்கலாம். ஆனால் அச் சொத்துக்கள் பெண் சகோதரர் களுக்கு முறைப்படி உரித்தாகும். அதன் பின்னர் அவ்வுடமைகள் அவரின் பிள்ளைக ளுக்கே உரித்தாகும். மட்டக்களப்புப் பிரதே சத்திலும், படுவான்கரைப் பிரதேசத்திலும் திருமணங்கள் ஆண், பெண் சகோதரர்களின் பிள்ளைகளுக்குள்ளே பெரும்பாலும் நடைபெறும். இவ்வழமையால் இவ்வுறவு முறை மென்மேலும் உறுதியாகின்றது. மேலும் திருமண பந்தங்கள் வெளியாருக்குள்ளும் இடம்பெறும். இதனால் வெளிக்குடும்ப உறவு

முறைகளும் ஏற்பட வாய்ப்பளிக்கின்றது. இப்பிரதேசத்திலுள்ள தமிழருக்கிடையே பெண்வீட்டார் மணமகனை மாப்பிள்ளை கேட்டு மணமகன் குடும்பத்தாரின் சம்மதத்தோடு திருமணம் நடைபெறும். இவை இரு வகைப்படும். அவை முறையே தேசவழமை திருமணம், பதிவுத் திருமணம் என இருவகைப்படும். இத்திருமணங்கள் யாவும் மாங்கல்யம் அணிந்து சிறப்பாக நடைபெறும். பண்டைக்காலத்தில் மணமகனைத் தெரிவு செய்யும் முறை ஆண்மையை மையப்படுத்தியே நடைபெற்றது. அவை முறையே, எருதோடு பொருதி ஜெயித்தல், மூளித்தேங்காய் உரித்தல், குறிப்பிட்ட இலக்கை குறிவைத்து எய்து வீழ்த்துதல், மற்போர் புரிந்து ஜெயித்தல் இவ்வாறான பலேப் பரீட்சைகளின் மூலம் மணமகனின் வீரத்தினை மணமகளே கண்ணுற்று மண மாலை சூட்டி தெரிவு செய்வாள். திருமண நிகழ்வின் போதுதான் மணமகனை மணமகள் காண்பாள். இவ்வாறு திருமணம் நிறைவேறிய பின்னர் நெருக்கமான உறவுக்குள்ளுள்ள ஒரு மூதாட்டி மணமகனையும், மணமகளையும் ஒரு குறுகிய காலத்திற்கு வழிநடத்துவாள். தற்காலத்தில் கல்வி அறிவு வளர்ச்சியடைந்த தன் பயனாக மணமகனை தெரிவு செய்யும் போது கல்வி அறிவு, மணமகனினதும், அவரின் குடும்ப நல்லொழுக்கம், பொருளாதாரம், பொருள் சிக்கனம், இவைகளைப் பின்னணியாக வைத்து மணமகனைத் தெரிவு செய்கின்றனர். அடுத்து "சுற்றத்திற்கழகு சூழ இருத்தல்" என்னும் ஔவைப்பிராட்டியின் முதுமொழிக்கமைய உறவுகளெல்லாம் பெரும்பாலும் குளுமி வாழ்கின்றார்கள். இதனால் அக்குடும்பங்களிற்கு முதியவரின் அறிவுரை கேட்டு வாழ்கின்ற சந்தர்ப்பம் நிறைய உளது.

எல்லாச் செல்வங்களிலும் அழியாச் செல்வம் அறிவுச் செல்வம், பொருளுடையார் பொருளே உடையார், அறிவுடையார் யாதுமுடையார்.

எனவே அறிவுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என அனைவரையும் சிரம் தாழ்த்தி வேண்டி நிறைவு செய்கின்றேன்.

## ஞ துணை நூல்கள்

1. பேராதனைப் பல்கலைக்கழக பேராசிரியர் திரு.எஸ்.பத்மநாதன் அவர்களால் வெயிடப்பட்ட "மட்டக்களப்புத்தேசம்" என்னும் வரலாற்று நூல்.

2. வெடியரசன் வீரநாராயணன் விளங்கு தேவன் வரலாறு.

3. வித்துவான் F.X.C. நடராசா அவர்களால் வெளியிப்பட்ட "மட்டக்களப்பு மான்மியம்" என்னும் நூல்.

சோம்பல் என்பது இளைப்பாறுதல் அல்ல.
அது வேலையை விட அதிகம் களைப்பைத் தரும்.

தன்னை ஒருவராலும் ஏமாற்ற முடியாது எனச் செருக்கோடு இருப்பவனே கண்டிப்பாக ஏமாந்து போகின்றான்.

வ. வினோதன்
முனைக்காடு.



# கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரமும் நாடகத்தன்மை கொண்ட திருவேட்டைத் திருவிழாவும்

சமயச்சடங்குகள் என்பது நன்கு ஸ்தாபிக்கப்பட்ட மரபு விதிகளை அடிப்படையாகக் கொண்ட, நன்கு அவதானிக்கக் கூடிய நடத்தையானதும், விசேடமானதும் சமூகங்களால் வெளிப்படுத்துவதுமான ஓர் விடயமாகும். மனிதன் தன் வாழ்க்கைப் போரில் இயற்கைச் சக்திகளையும் பருவகால மாற்றங்களையும் தன் வயப்படுத்த மனிதன் கையாண்ட சில நடைமுறைகளே சடங்குகளாயின. இச் சடங்குகளே அனைத்துக் கலைகளுக்கும் ஊற்றுக்களாக விளங்குகின்றன. "இசை, செய்யுள், ஓவியம், சிற்பம், நாடகம் என்பன சடங்குகளில் இருந்தே தோன்றியிருக்கின்றன". என ஆய்வாளர் தொம்சன் கூறுகின்றார். புராதான மக்களுடைய சமயக்காரணங்களிலேதான் நாடகங்களின் மூலவேருள்ளது என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்கின்றனர் என்பர் கா.சிவத்தம்பி இக் கருத்து மேல்நாட்டினர் கருத்துக்களாலும் வலியுறுத்தப்படுகின்றது.

அந்தவகையிலே ஈழத்திலே உள்ள ஈச்சரங்களுள் கிழக்கிலங்கையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் இடம்பெறுகின்ற சமயச்சடங்குகள், பூசைகள், விழாக்கள் என்பன சிறப்பாக இடம்பெறுகின்ற ஓர் வரலாற்று பெருமை மிக்க ஆலயமாக இவ்வாலயம் திகழ்கின்றது. இவ்வாலயத்தில் இடம்பெறுகின்ற சிறப்பு மிக்க இரண்டு கரணங்கள் இடம்பெறுவது வழக்கம். அவையாவன, கந்தசஷ்டி விரதத்தின் இறுதிநாளில் இடம்பெறும் "சூரன்போர்" மற்றையது "திருவேட்டைச் சடங்கு" என்பனவாகும்.

இவ்விரு சடங்குகளின் நிகழ்த்துகைகளை உற்று நோக்குகின்ற போது நாடகங்களிற்கென உரித்தான சிறப்பம்சம் பொருந்திய பண்புகள், மூலக்கூறுகள் என்பவற்றைக் கொண்டமைந்து காணப்படுவதனை அவதானிக்க முடிகின்றது. அதேவேளை சடங்கின்

அடியாகவே நாடகம் தோன்றியிருக்கின்றது என்ற உண்மையும் எமக்கு புலனாகின்றது.



அந்த வகையிலே இவ்வாலயத்தில் இடம் பெறுகின்ற தனித்துவமான ஓர் சடங்காகவும் சிறப்பு வாய்ந்த சடங்காகவும் கொள்ளப்படும் திருவெட்டை (சூகர வேட்டை) சடங்கினை நோக்குகின்ற போது இச்சடங்கும் நாடகத்தன்மை ததும்பியதாகவும் பகதி, அழகியல், இரசனை கொண்டமைந்த ஒரு காரணமாக காணப்படுகின்றது. இவ்வாலயத்தின் வருடாந்த உற்சவத்தின் பகல் தேரோட்டம் இடம்பெறும் அன்று இரவு தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் இருந்து சிவன் விக்கிரகத்திற்கு நன்கு பட்டாடைகள், மணிமாலைகள் என்பவற்றால் அலங்காரம் செய்து அடியார்கள் பல்லக்கில் வைத்து ஏந்திக்கொண்டு அண்மையில் உள்ள முனைக்காட்டு கிராமத்தில் உள்ள வீரபத்திரர் ஆலயத்திற்கு கொண்டு செல்வர். அதன் பின்னால் இறைவன் வேட்டையாடுவதற்குரிய வேலாயுதத்தை பல்லக்கில் ஏந்திய வண்ணம் செல்ல பக்தர்களின் “அரோகரா” கோசங்களும், மேளம், தவில், நாதஸ்வரம் போன்ற வாத்தியங்களின் ஒலிகளும் புடைசூடி திருவேட்டை சடங்கு இடம்பெறும் இடத்திற்கு கொண்டு செல்வர்.

சூகரவேட்டை இடம்பெறும் நிகழ்விடம் நன்கு அலங்கரிக்கப்பட்டு நான்கு பக்கமும் பக்தர்கள் அமர்ந்து பார்க்கும் வண்ணம் விசாலமாக காணப்படும். நிகழ்விடத்தில் இறைவனை வாயிலின் அருகே அமர்த்தி விட்டு அவ்விடத்தில் தான்தோறீஸ்வரருக்குரிய பூசை இடம்பெறும். பின் பூசகர்கள் வில், அம்பு, வேல் ஏந்திக்கொண்டு பன்றிகளை வேட்டையாடுவது போன்று அபிநயித்துக் காட்டுவர். இங்கு பன்றிகளை வேட்டையாடுவது என்பது ஆணவமலத்தை அழிப்பதை குறீயிடாகக் காட்டுகின்றது. இச்சடங்கு பக்தியையுண்டு பண்ணுகின்ற அதேவேளை நாடகத்திற்குரிய சிறப்பம்சங்களையும் தன்னகத்தே கொண்டு காணப்படுகின்றது. இந்நிகழ்வினை பார்க்கின்ற போது நாடகம் பார்ப்பது போன்று ஓர் உணர்வினை ஏற்படுத்தி விடுகின்றது. இந்நிகழ்வில் நாடகம் சார்ந்த பண்புகள் காணப்படுவதனை உணரமுடிகின்றது.

இச்சடங்கு நிகழ்த்துகின்ற நிகழ்விடத்தினை எடுத்து நோக்கினால் மட்டக்களப்பு தமிழ் மக்களிடையே காணப்படுகின்ற வடமோடி, தென்மோடி கூத்துக்கள் ஆடப்படுகின்ற வட்டக்களரி அமைப்பினை ஒத்ததாகும். வளைத்து வர தடிகள் நடப்பட்டு சுற்றிவர கயிறுகள் சுற்றிக் கட்டப்பட்டு நிகழ்த்துவோர் உள்ளே செல்வதற்கு மட்டும் ஓர் வாயிலும் கொண்டமைந்ததாக கூத்துக்களரியை அலங்கரிப்பது போன்று குருத்தோலைகளால் அலங்காரம் செய்யப்பட்டு மேலே கூரை போன்று வண்ணமயமான சரங்கள் கட்டப்பட்டு காணப்படும்.

இந்நிகழ்வினை காணவந்திருக்கும் பக்தர்கள் கூத்து பார்ப்பது போன்று சுற்றிவர அமர்ந்திருந்து சுதந்திரமாகவும் விரும்பிய இடங்களில் இருந்தும் இச் சடங்கினை பார்வையிடுவர். நாடகம் என்பது ஏதோ ஓர் விடயத்தினை பார்வையாளர்களுக்கு சொல்ல வேண்டும். அந்த வகையிலே வேட்டைத் திருவிழா சடங்கின் போது சிவபெருமான்

ஆணவமலத்தை அழித்து ஆன்மா ஈடேற்றம் தருவதனை பன்றிகளை வேட்டையாடுவது போன்று குறியீட்டுத் தன்மையாக காட்டப் படுகின்றது. நாடகத்தின் முக்கிய பண்புகளில் ஒன்றான வேட உடை, ஒப்பனை என்பன காணப்படுகின்றன. இவ் வேட உடை, ஒப்பனை என்பன வேட்டைத் திருவிழா சடங்கிலும் காணப்படுகிறது.

இச்சடங்கின் போது மிருகங்களாக சில சிறுவர்களை வேட உடை, ஒப்பனை செய்வித்து மிருகங்களை போல செய்து அபிநயித்துக் காட்டுவர். ஒவ்வொரு சிறுவர்களும் தமக்கு போடப்பட்டிருக்கும் வேட உடை ஒப்பனைக்கு ஏற்ப மிருகப் பண்புகளை வெளிப்படுத்துவர். இங்கு நடிப்பு என்னும் நாடகத்தின் அடிப்படை மூலக்கூறு கையாளப்படுவதனைக் காணமுடிகின்றது. நாடகத்தின் கூறுகளாக காணப்படும் பாடல், இசை என்பன இச்சடங்கில் பயின்று வருவதனைக் காண முடிகின்றது. இச் சடங்கில் இறைவன் வேட்டையாடச் செல்லும் போது சில பாடல்கள் பாடப்படும் "முப்புரத்தை நீறெனவே எரித்த கோலம் முயலகனை நெறுநெறென மிதித்த கோலம்..." என பாடல்கள் பாடப்படும்.

பாடல்களின் பொருளை உரைநடை வடிவில் மற்றைய ஒரு பூசகர் கூறுவார். பின் அங்கே அமர்ந்து இருக்கும் மேளகாரரும், நாதஸ்வரக்காரரும் பாடல்களை தமது இசைக்கருவி மூலம் வெளிப்படுத்த பூசகர் வில், அம்பு, ஏந்திக் கொண்டு வேட்டையாடு வது போன்று இலகுவான ஓர் அசைவு கொண்ட ஆடலுடன் வேட்டைக்கு செல்வர். இதனூடாக நாடகத்தில் கூத்துக்களில் இசைக் கருவிகளின் இசைக்கு ஏற்ப அபிநயம் செய்து காட்டப்படும் தன்மை காணப்படுகின்றது.

நாடகத்தில் காட்சி, சூழல் என்ப வற்றை காட்டுவதற்கும் நடிகனிடத்தில் நடிப் பினை தூண்டுவதற்கும் காட்சி அமைப்புக் கள், காட்சிபொருட்கள், மேடைப் பொருட் கள், என்பவற்றினை பயன்படுத்துவர். அதேபோன்று திருவேட்டைச் சடங்கின் போது காட்சி அமைப்புக்காக காடுகள் போன்றும், புதர்கள் போன்றும் மரக்கிளை களை களரியினுள் நட்டிருப்பர். இவை மிருகங்கள் போன்று நடிக்கும் சிறுவர்களின் நடிப்பிற்கு மேலும் துணைசெய்கின்றது. அதே போன்று நாடகங்களில் கைப் பொருட்கள் பயன்படுத்தப்படுவதென்பது மிக முக்கிய மான விடயமாகும். நடிகனின் நடிப்பினை மேலும் அதிகரிப்பதற்கும், இயல்பான நடிப்பினை கொண்டு வருவதற்கும், கைப் பொருட்கள், அரங்க பொருட்கள் உறுதுணை புரிகின்றன. அந்த வகையிலே வேட்டைத் திருவிழாவின் போது வேட்டையாடும் ஐயர் வில், அம்பு, ஈட்டி வேல் என்பனவற்றை கொண்டு வேட்டையாடுவது போன்று அபிநயம் செய்வதனைக் காண முடிகின்றது.

நாடகம் என்பது ஓர் கூட்டுக் கலை வடிவமாகும். இங்கு பலதரப்பட்ட கலைஞர் கள் ஒன்றிணைகின்றனர். பல்வேறுபட்ட கலைஞர்களின் கூட்டு உழைப்பே நாடகமா கும். இதே தன்மை வேட்டைத் திருவிழாவி லும் காணக் கூடியதாக உள்ளது. இசைக் கலைஞர்கள், ஒளியமைப்பாளர்கள், பார்வை யாளர்கள், பாடகர்கள், நடிகர்கள், நெறியா ளர்கள் உடை, ஒப்பனையாளர்கள், அரங்க விதானிப்பாளர்கள் என பல கலைஞர்கள் வேட்டைத்திருவிழாவில் ஒன்றிணைவதனைக் காணலாம். இவ்வாறாக கொக்கட்டிச்சேலை தான் தோன்றீஸ்வரர் ஆலயத்தில் வருடாந்த உற்சவத்தின் இறுதி நாள் இரவு இடம் பெறுகின்ற திரு வேட்டைத் திருவிழாவில் நாடகத்திற்கான தனித்துவம் வாய்ந்த சிறப்பம்சங்கள் பொதிந்து கிடப்பதனைக் காண முடிகின்றது.

# மண்முனை தென் மேற்குப் பிரதேசத்தின் சில கலை கலாசாரப் பாரம்பரியங்கள், மரபுகள் சம்பிரதாயங்கள், வழமைகள் - அன்றும் இன்றும்



- சபாபதிப்பிள்ளை சந்திரசேகரம் J.P
இளைப்பாறிய அதிபர்
முதலைக்குடா

மண்முனை தென்மேற்குப் பிரதேசத்தில் வாழ்ந்து வருகின்ற தமிழ் மக்கள் காலங்காலமாக சில கலை கலாசார பாரம்பரியங்களைத் தமது வாழ்க்கையில் பேணி வாழ்ந்து வருகின்றனர். இப்பிரதேசம் தொழில் ரீதியில் ஒரு விவசாயப் பிரதேசமாகும். இதனால் இப்பிரதேசத்தில் வாழ்ந்து வருகின்ற மக்கள் கைக்கொண்டுவரும் கலை கலாசார அம்சங்களோடு ஏதோ ஒரு வகையில் கமத்தொழில் சம்பந்தமான நடைமுறைகள் பின்னிப் பிணைந்திருக்கின்றன. இங்கு நிலவி வருகின்ற கலை கலாசாரப் பாரம்பரியங்களில் சில காலவோட்டத்தில் மாற்றங்களுக்கு உட்பட்டு வருகின்றபோதும் ஒருசில மாற்றங்களுக்கு உட்படாமலும் காணப்படுகின்றன.

## கமத் தொழில்

கமத்தொழிலைப் பொறுத்த வகையில் நெற்செய்கை பசு, எருமை, ஆடு போன்ற கால்நடை வளர்ப்பு, சோளம் பயறு, உளுந்து, போன்ற மேட்டு நிலப் பயிர்ச் செய்கை போன்றனவும் சில மரக்கறிப் பயிர்களும் முக்கியத்துவம் பெறுகின்றன. இவை எல்லாவற்றிலும் நெற் பயிர்ச் செய்கையே மிகப் பிரதானமானதாகும். பண்டைய காலந் தொட்டு நெற் செய்கையானது இயற்கைச் சூழலோடும் இறை நம்பிக்கையோடும் கைக் கொள்ளப்பட்டு வந்துள்ளது.

## நாள் விதைப்பு

சிறு பொங்கல் செய்து பிள்ளையாருக்குப் படையல் செய்து, தொழில் செய்யும் போது இடையூறுகள், விக்கினங்கள் வராதிருக்கவேண்டுமென வணங்கி நல்ல சுபநேரம் பார்த்து, அந்தநேரத்தில் வயலில் நெல் விதைக்கும் வழக்கம் இருந்து வந்தது. நாள் விதைப்புச் செய்வதற்காக வயலில் பொருத்தமான இடத்தில் சிறிய மேடை ஒன்று அமைத்து, அதில் சிறந்த விதை நெல்லை விதைப்பார்கள். வீட்டிலிருந்து விதைக்கின்ற நெல்லின் ஒருபகுதியை பக்குவமாக மூடியுள்ள ஓலைப்பெட்டியில் இட்டு அந்த நெல்லுடன் வெற்றிலை, பாக்கு, பழம், பூ, திருநீறு, சந்தனம், குங்குமம் போன்ற மங்கலப் பொருட்களோடு பொன், வெள்ளி, நாணயம் ஆகியவற்றை அப்பெட்டியுள் இட்டு வெள்ளைச் சீலையினால் சுற்றிக் கட்டுவித்து வயலுக்கு எடுத்துச் செல்வார்கள். பூசனைகள் முடிந்தபின் விதைப்பதற்குப் பயன்படுத்தப்படும் மண்வெட்டியின் பிடிக்கு மலர்மாலை கட்டிய பின்னர் விதை நெல் பெட்டியைத் திறந்து விவசாயி தமது தலைமேல் வைத்து இரண்டு கைகளினாலும் பெட்டியிலுள்ள நெல், மங்கலப் பொருட்கள் முதலியவற்றை எடுத்து நாற்று மேடையில் தூவுவார். இவ்வாறு 3 முறை தூவியபின்னர் பெட்டியை தலையிலிருந்து இறக்கி மேலும் தேவையானளவு நெல்லைத்தூவிய பின் பொன், வெள்ளி, நாணயம் போன்றவற்றை எடுத்துப் பெட்டியில் வைத்துவிட்டு மண்வெட்டியால் மேடையைக் கொத்தி நெல்லை மண்ணுடன் கலந்து விடுவார். அக்காலத்தில் தொழிலோடு சம்பந்தப்பட்ட எச்செயலாயினும் இறைவனின் ஆசி வேண்டிக்கொண்டே செய்து வந்தனர். தற்காலத்தில் இயந்திரப் பயன்பாடு பரவலாக வந்த பின்னர். இம்முறையில் நாள் விதைப்புச் செய்வது அருகிவருகின்றது.

## நாகதம்பிரான் பொங்கல்

வயலில் உள்ள பயிரை கால் நடைகள், பன்றி முதலிய மிருகங்கள் சேதம் செய்யாமல் இருப்பதற்கும். பயிருக்கு நோய்கள், பீடைகள் தாக்காமல் இருப்பதற்காகவும், நேர்த்தி செய்து நாகதம்பிரானுக்கு வயலில் பொங்கலிட்டு வணங்குவது, சம்பிரதாய பூர்வமாக விவசாயிகளால் கைக்கொள்ளப்பட்டு வந்தது. அக்காலத்தில் பயிருக்கு, நோய், பீடைகள் அரிதாகவே இருந்தது. தற்காலத்தில் ஒருசில விவசாயிகளே நாகதம்பிரானுக்கு வயலில் பொங்கல் பூசை செய்து வணக்கம் செலுத்துகின்றனர்.

## கதிர் கண்ட பொங்கல்

நெற் பயிரில் கதிர் வர ஆரம்பித்ததும் வயலில் பொங்கலிட்டு இறைவனுக்குப் படைத்து நன்றி தெரிவிப்பதோடு அப்பயிர்ச் செய்கையிலிருந்து நல்ல அபரிதமான விளைச்சல் கிடைக்கப்பெற வேண்டுமென வேண்டி விவசாயிகள் வணங்குவர்.

## புதிதெ நத்தல்

நெற்கதிர் முதிர்ச்சியடையும் பருவத்தில் ஒரு பகுதி நெற்கதிர்களைக் கொய்து கற்றையாகக் கட்டி நல்ல தினமும் நேரமும் பாரத்து, வீட்டுக்கு எடுத்துச் சென்று வீட்டு வளவுக்குள் எடுப்பதற்கு முன் ஒரு பெட்டியில் முதற்போகத்தில் அறுவடை செய்யப்பட்ட நெல் பாக்கு, பழம், பூ, சந்தனம், குங்குமம், விபூதி, பொன், வெள்ளி, பண நாணயம் முதலியவற்றை எடுத்து, பெட்டியை வெள்ளைச் சீலையால் கட்டி விவசாயி தலைப்பாகை கட்டி பெட்டியை வீட்டுக்குள் இருந்து படலை வரைக்கும் சென்று பாயில் குத்து விளக்கை வைத்து ஏற்கெனவே படலையருகில் தொங்க விடப்பட்டிருக்கும் புதிர்க் கற்றையை பெட்டியைத் திறந்து உள்ளே வைத்துக்கட்டி தலைமேல் வைத்து மிகவும் பயபக்தியுடன் சுவாமியறைக்குள் கொண்டு சென்று பெட்டியை திறந்து வீட்டினுள் முன்னராகவே ஏற்றி வைக்கப்பட்டிருக்கும் விளக்குத் தீபத்தில் சில புதிய நெல்மணிகளை வைத்து வணங்கி வேண்டுதல் செய்து கொள்வார். குத்து விளக்கு இலட்சுமி அம்பாளுக்கு அடையாளமாக இருப்பதால் நெற்பயிர் அறுவடைசெய்து விளைவு எடுத்தலின் போது சிறந்த அபரிதமான

விளைவுகிடைக்க வேண்டுமென வேண்டுதல் செய்வதே இதன் நோக்கமாகும்.

## புதிர்ப் பொங்கல்

நன்கு முதிர்வடைந்த நெற்பயிரில் ஒரு பகுதி புதிருக்காக அறுவடை செய்யப்பட்டு வயலில் புதிதாக பெறப்பட்ட அரிசியைக் கொண்டு புதிர்ப் பொங்கல் செய்யப்படும் அத்தோடு வயலின் மேட்டு நிலப்பகுதியில் பயிரிடப்பட்ட சோளம், மரவள்ளி ஆகியனவும் புதிதாக அறுவடை செய்யப்பட்டு அவித்து புதிர்ப் பொங்கலோடு சுவாமிக்குப்படையல் செய்து வழிபாடு செய்த பின் அயலில் இருக்கின்ற கமக்காரர்களுக்கும் பகிர்ந்தளித்து உண்டு மகிழும் வழக்கமிருந்தது. விநாயகருக்கும், காவல் தெய்வமான வைரவர் சுவாமிக்கும் புதிய விளைபொருட்களைப் படையல் செய்வது வழக்கமாக இருந்து வந்தது. ஆயினும் தற்காலத்தில் இந்த நடைமுறைகள் அருகிவருகின்றன.

## களவட்டிப் பொங்கல்

அறுவடைசெய்தல், சூடு மிதித்தல் போன்ற வேலைகளுக்கு இயந்திர சாதனங்கள் பாவனைக்கு வருவதற்கு முன்னர் விளைந்த நெற்பயிர் கைகளினால் அறுவடை செய்யப்பட்டு, (அருவி வெட்டும் கத்தி பயன்படுத்தப்படும்) வயலில் உப்பட்டி என அழைக்கப்படும் கதிர்கற்றைகள் வெய்யிலில் உலர விடப்பட்ட பின்னர் கட்டுகளாகக் கட்டப்பட்டு சூடு வைக்கப்படும் இடமான களவட்டி என அழைக்கப்படும் இடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு வெட்டுக்கூட்டம் என அழைக்கப்படும் அறுவடைக் குழுவினால் சூடு குவிக்கப்படும். அக்காலத்தில் எருமை / கடா மாடுகளைக் கொண்டு சூடு மிதித்தல் (சூடுபோடுதல் எனப் பொதுவாக அழைக்கப்பட்டது) நடத்தப்பட்டு நெல் காற்றின் உதவியோடு தூற்றி எடுக்கப்பட்டு வைக்கோலினால் அமைக்கப்படும் பட்டறையில் பாதுகாப்பாகச் சேமித்து வைக்கப்பட்டு விவசாயியின் வீட்டுக்குக் கொண்டு செல்லப்படும். ஒரு களவட்டியில் பல சூடுகள் வைக்கப்படும். ஒரு களவட்டியில் வைக்கப்பட்ட எல்லாச் சூடுகளும் மிதிக்கப்பட்டு நெல் எல்லாம் ஏற்றப்பட்டு சகல வேலைகளும் கூலி கொடுப்பனவுகளும் வழங்கப்பட்ட பின்னர் பூமாதேவிக்கு நன்றி தெரிவிக்கும் நோக்கமாகவும், பயிர்ச் செய்கையின் போது விக்கினங்கள் வராது காப்புச் செய்த விநாயகப் பெருமானை வணங்குவதற்காகவும் களவட்டியில் செய்யப்படும் பொங்கல் களவட்டிப் பொங்கல் என அழைக்கப்பட்டது. அத்தோடு களவட்டியில் சூடு மிதிக்கும் வேலை நடைபெறுகின்ற ஒவ்வொரு இரவிலும் காவல் தெய்வமான வைரவர் சுவாமிக்கு ரொட்டி சுட்டு படையல் செய்வதும் வழமையாக இருந்து வந்தது. பொங்கல் பிரசாதம் அயலவர்களுக்கு எல்லாம் பரிமாறி மகிழ்வது மரபாக இருந்து வந்துள்ளது. நவீனமான அறுவடை செய்யும் இயந்திர சாதனம் வந்ததனால் இக்காலத்தில் களவட்டிப் பொங்கல் செய்வது அரிதாகிவிட்டது.

## பட்டிப் பொங்கல்

இப்பிரதேசத்தில் நெற்செய்கையுடன் பசு, எருமை, ஆடு போன்ற கால்நடை வளர்ப்பும் முக்கியத்துவம் பெறுகின்றது. கால்நடை இனங்கள் கூட்டமாக வளக்கப்படும் போது அது 'பட்டி' என்று இப்பிரதேச மக்களால் அழைக்கப்படுகின்றது. அவை 'பசு மாட்டுப்பட்டி, எருமை மாட்டுப்பட்டி, ஆட்டுப்பட்டி என அழைக்கப்படுவது மரபு. இந்தக் கால்நடை இனங்களின் பெருக்கம் சுகநலன், பால் உற்பத்திப் பெருக்கம், அவற்றுக்கு ஏற்படக் கூடிய நோய் நொடிகள் தடுப்பு, இவற்றுக்கு வேறு காட்டு மிருகங்களினால் ஏற்படும் பாதிப்புக்கள் தவிர்ப்பு ஆகிய நோக்கங்கள் கருதி வருடா வருடம் இக்கால் நடைகள் இரவு வேளையில் அடைத்து வைக்கப்படும். 'காலை'க்கு அருகில் பட்டிப்பொங்கல் செய்து இறைவனின் அருள் பெற்றுக் கொள்ளப்படுவது இப்பிரதேசத்தில் மரபாக இருந்து வருகின்றது. வருடா வருடம் தைப்பொங்கல் தினத்திற்கு மறு நாள் இப்பொங்கலை கால்நடைப் பட்டிக்குச் சொந்தக்காரர் செய்து வருகின்றனர். முறையாகப் பொங்கல் செய்து

இறைவனுக்குப் படையல் செய்து பட்டியின் நலன் கருதி வேண்டுதல் செய்வர். அத்தோடு சிறிய பட்டியாக இருந்தால் எல்லா பசுவினங்களுக்கும் பூமாலை கட்டி கழுத்தில் கட்டி நெற்றியில் விபூதி, சந்தனம், குங்குமம் போன்ற மங்கலப் பொருட்களைத் தரித்து (முன்னராகவே மாடுகளை நீராட்டிய பின்னர்) அவற்றுக்கு பொங்கல், பழம் உண்பதற்குக் கொடுத்து வணங்குவர். பசுக்களை இலட்சுமி தேவியின் அம்சமாகக் கருதுவதால் செல்வம் பெருக்கும் நோக்கத்திற்காகவும் இந்த உபசாரம் செய்யப்படுகின்றது. ஆனாலும் கால் நடைப்பட்டிகள் மிகப் பெரியதாக இருந்தால் 'தலையாரி' பசு அல்லது எருமைக்கு இப்பூசையும் உபசாரமும் செய்யப்படும். எனவே கால்நடை வளர்ப்பு வெற்றிகரமாக நடைபெற்று நற்பயன் பெற்றுக் கொள்வதற்காக 'பட்டிப் பொங்கல்' நெடுங்காலமாக விவசாயிகளால் மேற் கொள்ளப்பட்டு வருவது பாரம்பரியமாகும்.

## கலை

இப்பிரதேசத்தில் வாழ்ந்து வருகின்ற மக்கள் பண்டு தொட்டு கலை ஆர்வம் மிகுந்தவர்களாகக் காணப்படுகின்றனர். நாட்டுக்கூத்து, வசந்தன் போன்ற கலைக் கோலங்கள் இப்பிரதேச மக்களால் பயிலப் பட்டு ஆடப்பட்டு அனுபவிக்கப்பட்டு வருகின்றமை நோக்கத்தக்கது. முன்னரே குறிப்பிடப்பட்டவாறு இப்பிரதேசமக்கள் முக்கியமாக விவசாயிகளாக இருப்பதால் இருபோக விவசாய நடவடிக்கைகளுக்கு இடைப்பட்ட ஓய்வு காலங்களில் இக்கூத்துக் கள் பயின்று அரங்கேற்றம் செய்வதற்கு வாய்ப்பாக அமைந்தது. ஓய்வு நேரத்தைப் பயனுள்ளவகையில் செலவிடுவதற்கும் இது வாய்ப்பாக அமைந்து வந்திருக்கின்றது.

## பாரம்பரிய நாட்டுக்கூத்து

மட்டக்களப்பு பிரதேசத்தில் பொதுவாகப் பயிலப்பட்டு வந்த மரபு ரீதியான நாட்டுக்கூத்து, மண்முனை தென் மேற்குப் பிரதேசத்திலும் இடம் பெற்று வந்துள்ளது. விவசாயம் செய்வதற்கு உடல் வலு இன்றியமையாதது. நாட்டுக் கூத்தில் இடம் பெற்றிருக்கின்ற ஆட்டங்கள் ஆடுவோருக்கு நல்ல உடற்பயிற்சியைப் பெற்றுக் கொள்வதற்கு உதவிவந்துள்ளது. நாட்டுக் கூத்துக்களிலே இடம்பெறும் கதைகள் பெரும்பாலும் புராண, இதிகாசங் களைச் சார்ந்தனவாக இருந்தமையால் மக்கள் மனங்களிலே அறக்கருத்துக்கள் நிலை பெறச் செய்வதோடு, ஒழுக்கம், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு போன்ற சமூக நலனுக்கான சிந்தனைகளும் பதியப்படுவதற்கு ஏற்புடைய தாக அமைந்து வந்தன. இப்பிரதேச மக்களால் "வடமோடி" "தென்மோடி" ஆகிய இரண்டு கூத்து வடிவங்களும் பயிலப்பட்டு வந்துள் ளமை நோக்கற்பாலது. அக்காலத்தில் 10-12 மணித்தியாலங்களுக்கு தொடர்ந்து ஆடப் படும் கூத்துக்கள் ஆடி அரங்கேற்றம் செய்யப் பட்டன. மாலை வேளையில் ஆரம்பமானால் விடியற்காலை முடிவடையக் கூடிய கூத்துக்கள் தயாரிக்கப்பட்டன.

நாட்டுக் கூத்துக்கள் நன்றாகப் பயிலப்பட்டு வெளியரங்கில் 'வட்டக் களறியில்' அரங்கேற்றம் செய்யப்பட்ட பின்னர், திருவிழாக்காலங்களில் ஆலய முன்றலில் அமைக்கப்படும் வட்டக் களறியில் ஆடப்படுவதும் இப்பிரதேசத்தில் மரபாக இருந்து வருகின்றது. இப்பிரதேசத்தின் பிரதான தேசத்துக் கோயிலாக அமைந்துள்ள கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய முன்றலில் பண்டு தொட்டு பல்வேறு நாட்டுக் கூத்துக்கள் ஆடப்பட்டு வந்துள்ளன. சினிமா, தொலைக்காட்சி நாடகங்கள், தொடர் நாடகங்கள் ஆகிய பொழுது போக்குக் கலைவடிவங்கள் வந்துள்ள இக்காலகட்டத்திலும் கூட இவ்வாலயத்தில் திருவிழாக்காலங்களில் நாட்டுக் கூத்துக்கள் ஆடப்பட்டு வருகின்றன. ஆயினும் நாட்டுக் கூத்தினை முழுமையாகப் பார்த்துக் கேட்டு அனுபவிக்கின்ற மனப்பாங்கு படிப்படியாகக் குறைவடைந்தே வருகின்றது என்பது வெளிப் படை. தற்காலகட்டத்தில் முழு நீளமான நாட்டுக் கூத்துக்களைப் பொறுமையோடு

இருந்து பார்த்து அனுபவிப்பதற்கான மன நிலை குறைவடைவதற்கு தற்காலத்தின் இயந்திர மயமான பரபரப்பான வாழ்க்கை முறையே முக்கிய காரணியாக அமைகின்றது. சனத்தொகை பெருக்கமடைய, வளங்கள் அருந்தலாக இருக்கின்றமையால் வாழ்க்கை போட்டிமயமாக உள்ளதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. எனவே தற்காலத்தில் நாட்டுக் கூத்துக்கள் சிறிய பகுதிகளாகத் தயார்படுத்தப்பட்டு மேடைகளில், புதிய ஒப்பனை, ஒளியூட்டல், நுட்பங்களுடன் மேடையேற்றப்படும் நிலமை காணப்படுகின் றது. எதிர்காலச் சந்ததியின் பயன்பாட்டுக்கா கவும் இக்கலை வடிவம் எதிர் காலத்தில் அழிந்து விடாதிருப்பதற்காகவும் முழுநீள நாட்டுக் கூத்துக்களை மரபுகள் பிறழாது தயாரித்து ஆவணப்படுத்தி வைக்க வேண்டி யது முக்கியமாகும்.

இப்பிரதேசத்தில் அமைந்துள்ள முதலைக்குடா, மகிழடித்தீவு, முனைக்காடு, கொக்கட்டிச்சோலை ஆகிய கிராமங்களில் மரபு ரீதியான நாட்டுக்கூத்துக்கள் பல பயிலப்பட்டு ஆடி அரங்கேற்றம் பெற்றன என அறியமுடிகின்றது. தருமபுத்திர நாடகம், அல்லி நாடகம், வீரகுமாரன் நாடகம், சூர சம்ஹாரம், வள்ளி அம்மன் நாடகம், பவளக்கொடி நாடகம், அலங்கார ரூபன் நாடகம், வாள பீமன் நாடகம், பதினேழாம், பதினெட்டாம் போர் ஆகியன இப்பிரதேச மக்களினால் ஆடி அரங்கேற்றம் செய்யப் பட்ட மரபு ரீதியான பல நாட்டுக் கூத்துக்க ளில் சிலவாகும். நாட்டுக் கூத்துக்களை சிறந்த முறையில் பயிற்றுவிக்கக் கூடிய திறமைமிக்க அண்ணாவிமாரின் குறைவான தொகையும் இக் கலைவடிவம் அருகி வருவதற்கு முக்கிய காரணமாகும்.

## வசந்தன் கூத்து

மண்முனை தென்மேற்கு பிரதேசத் தில் பேணப்பட்டு வந்த ஆடற்கலைகளில் வசந்தன் கூத்தும் முக்கியத்துவம் பெறுகின் றது. மரம் செடிகள் பூத்துக் குலுங்கும் வசந்த காலத்தில் ஆடப்படுவதால் இப்பெயர் வந்தது போலும், இக்கூத்தானது பெரும்பாலும் 10-15 வயதினையுடைய இளம் பையன்களைப் பயன்படுத்தியே ஆடப்பட்டுவந்துள்ளது. ஒவ்வொருவரும் இரு கோல்களைக் கையி லேந்தி அவற்றை ஒன்றுடன் ஒன்று அடித்து ஆடுவர். இக் கூத்தானது பழகப்பட்டு வைகாசி மாதத்தில் வருடா வருடம் நடைபெறும் கண்ணகியம்மன் சடங்கு நடை பெறுவதற்கு முன்னர் அரங்கேற்றம் செய்யப்பட்டு அதன் பின்னர் கண்ணகி அம்மன் சடங்கு நடைபெறும் காலங்களில் அம்மன் ஆலய முன்றலில் ஆடப்பட்டு வருவது மரபாகும். இக்கூத்தில் பல விதமான ஆட்டங்கள் இடம் பெறுவதனால் ஆடும் பிள்ளைகளுக்கு நல்ல உடற்பயிற்சி கிடைக்கப் பெறுகின்றது. விவசாய நடவடிக்கைகளோடு பின்னிப் பிணைந்து இப்பிரதேச மக்களின் வாழ்க்கை அமைந்துள்ளமையினால் இம்முறையில் கிடைக்கப் பெறும் உடற்பயிற்சி அவர்களது வாழ்க்கையில் விவசாயத்தை உடலுறுதி யோடு மேற்கொள்வதற்கும் உறுதுணையாக அமைகின்றது.

இப்பிரதேசத்தில் அமைந்துள்ள முதலைக்குடா கிராமத்தில் கொம்பு முறி விளையாட்டு நடைபெற்ற காலத்திலிருந்து முதன் முதலாக வசந்தன் கூத்து ஆடும் வழக்கம் ஏற்பட்டதாக இப்பிரதேசத்தின் முதிர்ந்த சிரேஷ்ட பிரஜைகளின் மூலம் அறியக் கூடியதாகவுள்ளது. அதனைத் தொடர்ந்து மகிழடித்தீவு, முனைக்காடு ஆகிய கிராமங்க ளில் கொம்புமுறி விளையாட்டு ஆரம்பிக்கப் பட்டதிலிருந்து வசந்தன் கூத்து ஆடும் வழக்கமும் ஏற்பட்டது. தொடர்ந்து இப் பிரதேசத்தின் ஏனைய கிராமங்களிலும் வசந்தன் கூத்து ஆட்டம் பரவியதாக அறிய முடிகின்றது.

பிள்ளையார் வசந்தன், களறி வசந்தன், குவாய் குயிலே வசந்தன், அம்மன் பள்ளு வசந்தன், முசிறு வசந்தன், வேளாண்மை வெட்டு வசந்தன், அனுமான் வசந்தன் போன்ற பல விதமான வசந்தன் ஆட்டங்கள் இதில் இடம் பெற்றிருந்தன. மத்தள ஒலியும் ஒவ்வொரு வசந்தனுக்கேற்ற பாடல்களும், ஆட்ட அமைப்பும் ஆடுவோருக்கான உடை அலங்காரமும் சேர்ந்து பார்ப்போரின்

இரசனையைத் தூண்டுவதாக அமைந்திருக்கும் ஆயினும் புதிய பொழுது போக்குச் சாதனங்களின் வருகையின் பின் இக்கலையின் முக்கியத்துவம் குறைந்து இக்கலை அருகி வருகின்றது. இக்கலையைப் பயிற்றுவிப்பதற்கேற்ற அண்ணாவிமார் குறைவாக இருப்பதும், இதற்கான நேரத்தை ஒதுக்கிக் கொள்வதில் உள்ள இயலாமையும், பிறகாரணிகளாகும் எனினும் பண்டைய மரபுரீதியான இக்கலையை எதிர்காலச் சந்ததியினரின் பயன் கருதி வீடியோப்பதிவு செய்து பேணவேண்டியது கலைஞர்களின் கடமையாகும்.

## கொம்பு முறி விளையாட்டு

கண்ணகை அம்மன் வழிபாட்டுடன் சம்பந்தப்பட்ட கலைக்கோலத்தில் இதுவும் முக்கியத்துவம் பெறுகின்றது. இப்பிரதேசத்தில் அமைந்துள்ள முதலைக்குடா கிராமத்தில் ஆரம்பத்தில் நடைபெற்றதாக அறிய முடிகின்றது. அதனைத் தொடர்ந்து முனைக்காடு மகிழடித்தீவு, கொக்கட்டிச்சோலை ஆகிய கிராமங்களிலும் கொம்பு முறிவிளையாட்டு நடை பெற்றுவந்ததை அறியக் கூடியதாக இருக்கின்றது. தாய் வழியில் குடி மரபு அமைந்திருப்பதைப் போன்று 'வாரம்' தகப்பன் வழியில் அமைந்திருக்கின்றது. கிராம மக்கள் முழுவதும் 'வடசேரி', 'தென்சேரி' என பிரிந்து இவ்விளையாட்டு நடைபெற்று வந்திருக்கின்றது. அக்காலத்தில் கிராமங்களில் வடசேரி, தென்சேரி எனப் பிரிந்து நின்றே போட்டி மனப்பான்மையுடன் நாட்டுக் கூத்துக்களும் பயிலப்பட்டதாகவும் அறிய முடிகின்றது.

வடசேரிக் கொம்பு பிள்ளையார் உரிமையாகவும், தென்சேரிக் கொம்பு அம்மன் உரித்தாகவும் பாவனை செய்யப்பட்டு இக் கலாச்சார விளையாட்டு நடைபெற்று வந்திருக்கின்றது. கொம்புகளாக நார்த் தன்மையும் வலுவும் கொண்ட மரவேர்கள் பயன்படுத்தப்பட்டு வந்தன. கொம்புகள் ஒன்றுடன் ஒன்று கொழுவப்பட்டு. கயிற்றுடன் பொருத்தப்பட்டு இழுக்கப்படும் போது நிலைத்திருக்கும் கொம்பு வெற்றி பெற்ற கொம்பாகவும் முறிந்த கொம்பு தோல்வியுற்ற கொம்பாகவும் கொண்டு இந்த நிகழ்வு நடை பெற்றுவந்தது. நிலைத்திருக்கும் கொம்பு எந்தச் சேரிக்கு உடையதோ அந்தச்சேரி வெற்றி பெற்றதாகக் கொள்ளப் பட்டது. அதாவது தென் சேரிக்குரிய கொம்பு நிலைத்திருந்தால் தென்சேரி வெற்றி பெற்றதாகக் கொள்ளப்படும். கொம்புகளை ஊர்வலமாக எடுத்து ஆலய முன்றலுக்குக் கொண்டுவருதல், அவற்றுக்குப் பூசை செய்தல், கொம்புகளைப் பூட்டுதல், இழுத்தல் எனப்பல செயற்பாடுகள் நடைபெற்று இந்த நிகழ்வு நடைபெறும். காலப்போக்கிலே கடுமையான போட்டி காரணமாக இதனோடு சம்பந்தப்பட்டு சண்டைகள் சச்சரவுகள் ஏற்படத் தொடங்கிய காரணத்தால் இக்கலாச்சார நிகழ்வு படிப்படியாகக் கைவிடப்பட்டு தற்காலத்தில் நடை பெறுவதில்லாமல் போய் விட்டது. கொம்பு முறி விளையாட்டு என்னும் கலாச்சார நிகழ்வு பற்றிய அறிவு எதிர்காலத்தில் அற்றுப் போகாமல் இருப்பதற்காகவும், எதிர்காலச் சந்ததியினர் இது பற்றி அறிந்து கொள்வதற்காகவும், மண்முனைதென்மேற்குப் பட்டிப்பளை பிரதேச செயலகத்தின் அனுசரணையுடன் திரு. கந்தையா சிவநாதன் அவர்கள் பிரதேச செயலாளராகச் சேவையாற்றிய காலத்தில் இந்தக் கலாச்சார நிகழ்வு முறையாக ஒழுங்கமைக்கப்பட்டு பிரதேச மக்களின் கூட்டு முயற்சியுடன் முதலைக்குடா - முனைக்காடு கிராமங்களின் எல்லையில் சிறப்பாக நடத்தப்பட்டு வீடியோப்பதிவு செய்து ஆவணப்படுத்தப்பட்டது குறிப்பிடத் தக்கதாகும்.

'கொம்பு' என்ற பெயருடன் இந்த நிகழ்வினை ஒட்டி வெளியிடப்பட்ட மலரில் கொம்புமுறி விளையாட்டு சம்பந்தமான சகல விதமான விளக்கங்களும் தரப்பட்டுள்ளன. மேலதிக விளக்கங்களும் நுட்பங்களும் பற்றி தெரிந்து கொள்ள விரும்பும் ஆர்வலர்கள் அம்மலரினைப் படித்துப் பயன்பெறலாம்.

## மரபு ரீதியாகச் சூடுபோடுதல்

நெற் செய்கையில் பயன்படுத்தப்படுவதற்கு நவீன உழவு இயந்திரம் பாவனைக்கு வருவதற்கு முன்னர் நாட்டுக்கலப்பையைப் பயன்படுத்தி மரபு ரீதியான முறைகளைக் கொண்டு நெல் பயிரிடப்பட்ட காலத்தில் நெற்பயிர் மனித சக்தியைக் கொண்டு அறுவடை செய்யப்பட்டு சூடு வைக்கப்பட்டு (நெற்கதிர் குவிக்கப்படுதல்) எருமை இன மாடுகளைக் கொண்டு 'சூடு போடுதல்' (சூடு மிதித்தல் / சூடு அடித்தல்) செய்யப்பட்டு வருகின்ற 'பொலி' காற்றின் உதவியினால் தூற்றப்பட்டு 'நெல்' வேறாக்கி எடுக்கப்பட்டது.

அக்காலத்தில் சூடுபோடுதல் இறை நம்பிக்கையுடன் ஆசாரமான முறையில் செய்யப்பட்டது. அவ்வாறு சூடுபோடும் வேலைகள் செய்யப்பட்டால்தான் நெல் விளைவு அபரிதமாக கிடைக்கும் என்ற நம்பிக்கை அக்கால விவசாயிகளிடத்தில் இருந்தது. இக்காலத்தில் பயன்படுத்தப் படுகின்ற செயற்கை உரங்களும், நோய், பீடை நாசினிகளும் அக்காலத்தில் பயன் படுத்தப்படவில்லை. மாட்டுப் பசளைகளும் இலைகுழைப் பசளைகளும் மட்டுமே பயன்படுத்தப்பட்டன. நோய், பீடைகள் ஏற்பட்டால் ஆலயத்திலிருந்து தீர்த்த நீர் கொண்டு வயலுக்குத் தெளிக்கப்பட்டது. இரவுவேளையில் வயலில் ஏற்படும் பூச்சி இனங்கள் அழிக்கப்படுவதற்காக 'சுடுவான்' என்று அழைக்கப்பட்ட தீ எரித்தல் முறை பயன்படுத்தப்பட்டது. காவல் செய்பவர் தங்குவதற்கான காவற்பறனுக்கு அருகில் பொருத்தமான இடத்தில் சுமார் 3-4 அடி உயரத்தில் சிறிய பறன் அமைத்து அதன் மேல் மண் பரப்பி தீ மூட்டப்படும் தினமும் மாலையிலிருந்து விடியற்காலை வரைக்கும் சுடுவானில் தீ எரிக்கப்பட வேண்டுமென்பது அக்காலத்துக் கட்டுப்பாடாக இருந்தது. பன்றிகளின் தாக்கத்திலிருந்து நெற்பயிரைப் பாதுகாப்பதற்கும் சுடுவான் உதவியாக இருந்தது.

அக்காலத்தில் மழையின்போது ஒழுக்கு ஏற்பட்டு பழுதடையாதவாறு சூடுகள் மிகவும் நல்லமுறையில் வைக்கப்பட்டு வைக்கோலால் மூடி வேயப்பட்டிருக்கும். இக்காலத்தைப் போன்று சூடு வைத்ததும் சூடுபோடுவதில்லை சூடு வைத்து பாதுகாப்பு வேலி கட்டி சூடுபோடும் வரை வேளாண் மைக்காரன் காவல்காக்கவேண்டும். பல மாதங்கள் கழித்தும் சூடுபோடும் வழக்கம் இருந்தது ஒரு சூட்டுக் களவட்டியில் பல சூடுகள் வைக்கப்படும். காவல் காத்துக் கொள்வதற்கும் இது உதவியாக அமையும்.

ஒரு களவட்டியில் சூடுபோட ஆரம்பிக்கும் தினத்தில் (நல்ல நாள் நேரம் பார்த்து சூடு போடுதல் நடைபெறும்) விநாயகருக்குப் பொங்கல் வைத்து வேலைகள் ஆரம்பிக்கப்படுவது மரபாகும். இதனைத் தொடர்ந்து 'அரக்கு'ப் பதித்தல் நிகழ்வு நடைபெறும். மண்வெட்டி ஒன்றில் வைக் கோல் பிடிகட்டி சூடுபோடும் களவட்டியின் நடுப்பகுதியில் பதிக்கப்படும். இது உறுதியாக இருப்பதற்காக முதிரைக்கம்பு கூனி அடிக்கப்படும். இதன் பிறகு சூட்டில் ஏறித் தேங்காய் ஒன்று உடைத்து கற்பூரம் எரித்து விநாயகரை வணங்கிய பின் கதிர்கற்றையை எடுத்து வடமுகமாக நின்று களவட்டியில் நெல் உதிர்த்திய பின் சூட்டில் ஒரு பகுதியை 'வேலைகாரன்' கம்பின் உதவியுடன் சூடு போடும் வேலையாட்கள் தள்ளி எடுப்பர். சில வேலையாட்கள் தள்ளப்பட்ட உப்பட்டியை உயரமாகக் குவிப்பர். இவ்வாறு குவிக்கப்ப டுவது 'போரேற்றுதல்' எனக் குறிப்பிடப் படும். இதன் பின்னர் எருமை மாட்டுத் தொடுவை (பெரும்பாலும் கடாக்கள்) இப்போரில் ஏற்றப்படும். மாட்டுத்தொடுவை ஏற்றப்படும் போது பின்வரும் பாடல் பாடப்படுவது மரபாகும்.

"தாயே பொலி, தம்பிரானே பொலி, பூமி பொலி, பொன்னின் களமே, மாதாவே தாயே, வளர் பூமியே நிறை களம் பொலி பொலி பொலியே"

இது பொலிப் பாடல் எனப் பொதுவாகக் குறிப்பிடப்படும். ஏற்றப்பட்ட மாட்டுத் தொடுவையின் தலையாதி மாடு (அரக்குமாடு) களத்தின் மத்தியில் நின்று சுழல

ஏனையை மாடுகள் கதிர்க்குவியலின் மேல் சுற்றிச் சுற்றி நடந்து செல்வதற்காக ஒருவர் பலவிதமான பொலிப் பாடல்களைப் பாடியவாறு பின்னால் நடந்து சாய்த்துக் கொண்டிருப்பார்.

சூடுபோடும் போது மரபு ரீதியான பல சொற்கள் பயன்படுத்தப்பட்டு வேலை யாட்களுக்கிடையே உரையாடல் நடை பெறும். பின்வருவன பயன்படுத்தப்படும் சொற்களாகும்.

| சொல் | | மரபுச்சொல் |
|---|---|---|
| வைக்கோல் | - | பொலிக் கொடி |
| கைப் பெட்டி | - | குஞ்சிவாயன் |
| மரைக்கால் | - | கணக்கன் |
| கடகம் | - | பெருவாயன் |
| சாக்கு | - | தோல்பை |
| நீர் | - | வெள்ளம் (கலங்கல்) |
| எருமைக்கடா | - | வாரிக்காலன் |
| வேலைக்காரன் கம்பு | - | வேலையாளன் |
| நித்திரை செய்தல் | - | மின்னிகட்டுதல் |

செயற்பாடுகளுக்குப் பெரும்பாலும் 'பெருகு' என்னும் மரபுச் சொல் பயன் படுத்தப்படும். உதாரணம்:- உணவருந்து என்பதற்கு சாப்பாடு பெருகு, நீர் அருந்து / எடு என்பதற்கு வெள்ளம் பெருகு என்று வழங்கப்படும்.

பொலிப்பாடல் பாடுவதால் மாடுக ளும் வேலை செய்பவர்களும் களைப் புத் தெரியாமல் வேலை செய்வதற்கு உதவும் என்பதாலும் இப்பாடல்களில் 'பொலி' என்னும் சொல் அதிகமாக பயன்படுத்தப் படுவதால் நெல் மணிகள் பெருகி கூடிய விளைவு கிடைக்கும் என்னும் நம்பிக்கை இருப்பதாலும் பாடப்படுகின்றன. படிப்படி யாக கதிர் அடிபட பொலிக்கொடி வேலை காரன் கம்பின் உதவியால் 'வாட்டி' எடுக்கப் பட்டு விடியற்காலையில் 'பொலி' குவிக்கப்படும். குவிக்கப்பட்ட பொலிக் குவியலைச் சுற்றி வைக்கோலினால் செய்யப் பட்ட 'புரி' என்னும் கயிற்றினால் 'காவல்' செய்யப்பட்டு, வேலைக்காரன் கம்புகளை குவியலின் மேல் சரிவாக வைப்பர். களவட்டி யில் ஓரிருவராவது நித்திரை செய்யாமல் இருப்பர். நித்திரை செய்தால் பூதப்பிசாசுகள் பொலியை எங்கள் கண்ணுக்குத் தெரியாமல் அள்ளிச் சென்று விடும் என்பது ஐதீகம்.

களவட்டியைக் காவல் செய்வதற் காகக் காவல் தெய்வமான வைரவர் சுவாமியை தினமும் 'றொட்டி' சுட்டு அதற் காகத் தயாரிக்கப்பட்ட வைரவர் பந்தலில் வைத்து வணங்குவர். களவட்டி முடிவடையும் போது களவட்டிப் பொங்கல் செய்து பூமாதேவிக்கும் விநாயகருக்கும் நன்றிக் கடன் செலுத்துவதோடு வைரவர் சுவாமிக்கும் வேள்வி செய்வர். பிற்பகல் வேளையில் பொலி தூற்றுவதற்குப் பொருத்தமாகக் காற்று வீசுகின்றபோது 'அவுரி' கட்டி அதன் மேல் நின்று ஒருவர் தூற்ற மற்றும் உள்ளவேலை யாட்கள் நெற்பொலியைக் கைப்பெட்டியால் கட்டிக் கொடுப்பர். மேலும் சிலர் நெற் குவியலிலிருந்து தூசு, கட்டைகளை அகற்றிச் சுத்தப்படுத்துவர். சுத்தப்படுத்தப்பட்ட நெல் வைக்கோலாலும் வைக்கோல் புரியினாலும் அமைக்கப்படும் 'பட்டறை'யில் போடப் பட்டு பாதுகாப்பாக வைக்கப்படும் அக்காலத் தில் களவட்டியில் சூடுபோடும் வேலைகள் யாவும் முடிவடைந்தபின், களவட்டியில் கொடுக்கவேண்டிய கொடுப்பனவு நெல் எல்லாம் கொடுத்து முடிக்கப்பட்ட பின்னர் மாட்டு வண்டிகள் மூலம் விவசாயியின் வீட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கும் பட்டறையிலேயே சேமிக்கப்படும். அடுத்த போகத்திற்கு விதைப்பதற்குப் பொருத்தமான விதை நெல் வேளாண்மைக்காரனுக்கு கொடுப்பதற்கு வேண்டிய 'படி' நெல் ஆகியவை வயலில் உள்ள 'வாடியில்' - அட்டளையில் சேமித்து வைக்கப்படும்.

உண்மையாக எதையும் தியாகம் செய்யலாம். ஆனால் எதற்காகவும் உண்மையைத் தியாகம் செய்யக்கூடாது.

## கலாசார விழா – 2012 கன்னி முயற்சியின் சுயம்பு முதல் மலர் வெளியீட்டு நினைவுத் துளிகள்









# விருந்தோம்பல்

சோலையூரான்

வாங்க வாங்க விருந்துக்கு
விருந்தும் இங்கு மருந்தாகும்
சோறு கறி சொதியெல்லாம்
சும்மா ஒரு பேருக்கு
ஆசை அன்பு பாசம் தான்
அதுக்குள்ள இருக்கும் நேசம்தான்

குளத்து மீனும் குத்தரிசும்
குமுட்டிக் கடையல் குறையாது
கேட்கும் போதே வாயூறும்
பார்த்த உடனே பசியாறும்
சாராயம் இல்லாத சபையுண்டோ
விருந்தெண்டால் வேற கதையுண்டோ



சோறு போடும் கர்ணர்கள் – இங்கு
சுளை சுளையாய் இருக்கின்றார்
3,8,31 முந்தி நம்ம வச்ச திதி
ஊருக்கெல்லாம் சோறு போட உருவாக்கிய விதி



ஏரும் சோறும் எடுத்தெடுத்து – எங்க
சனம் கையெல்லாம் – மாரி காலம்
முடிஞ்சி வாற வறண்ட நிலம் போலாச்சு
வயல்ப் பக்கம் போய்ப் பாரு
வாய் நிறைய "வாங்க" சொல்லி
வயிறு நிறைய சோறு போடும் – சோறு
எண்டாச் சும்மா இல்ல
சுவையும் அன்பும் சேர்த்துப் போடும்
கோயில் திருவிழாக்கள் கொஞ்ச நஞ்சம் இங்கில்ல
கூடிச் சனம் நிண்டு கொண்டாடி மகிழ்ந்திடுமே
அன்னதானச் சோறு தின்ன அடிபுடியும் நடக்குமங்க
தயிரெடுத்து குடுத்தாத்தான் தாகம் அடங்குமங்க

குழந்தைப் பருவத்திலே கூடிவரும் விருந்தோம்பல்
கூட்டாஞ்சோறாக்கி குழந்தைகள் விளையாடி
குடும்பம் நடத்தும் கொண்டாட்டம் பார்க்கலாமே

கல்யாணம் காட்சியெண்டு கதை வந்தாப் போதுமப்பா
களை கட்டி விடும் வீடு கறி புளியோ காணாது
மாப்பிள்ளை வீட்டுக்கு கால்மாறிப் போகையில
மாமி மச்சினிச்சி மரியாதை விருந்திலதான்

சாப்பாடு முறையிலதான் சபை நிலைமை தங்கியிருக்கும்
கூப்பிட்டுக் கூப்பிட்டு சாப்பாடு தந்தாங்க
குந்தி இருக்க வச்சு குடுத்தாங்க ரெண்டுதரம்
உனக்கு அங்க பரவால்ல நான் போன சபையிலதான்
ஒரு புளகோட சொதி எடுத்துப் போட்டன் – இதக்
கூடிக் கதைக்கையிலும் கொறிக்க ஒரு சாப்பாடு

மாமி மக சமைஞ்சாலும்
மாமாட அப்பா சரிஞ்சாலும்
புள்ளைக்குப் புள்ள பொறந்தாலும்
பொங்கல் புதுவருஷம் எண்டாலும்
போற செலவோட செலவா
கூட கொஞ்சம சோத்தப் போடு
எங்க பக்கம் இதுதான் முறை
ஆத்தக் கடந்து அங்கால போனா
அளவுச் சாப்பாடு அதுவும் லைன்லதான்

எங்கள் பரம்பரையைத் தெரியுமா உங்களுக்கு
விருந்தோம்பல் செய்தே வெற்றி பல பெற்றவர்கள்
சிறுத் தொண்டர் குணம் தெரியுமோ உங்களுக்கு
பிள்ளை வரம் கொடுக்கும் ஐயனுக்கு
தன்பிள்ளை தலைவெட்டி மாவிருந்து கொடுத்த நாயன்
பின்னும் இளையான் குடிமாறன்
தன் வீடெரித்து சோறெடுத்து
வெற்றி பெற்றவன்தான்

ஒரு கோப்பைச் சோற்றினிலே
நிலவொளியின் ரசம் விட்டு
என்புள்ள என்புருஷன் என் வீட்டுச் செல்ல நாய்
என்றெண்ணிக் கொடுக்கின்ற
ஒரு உருண்டைச் சோற்றினிலே
உறவு நிலைச்சிருக்கும் அது பிடிச்சிருக்கும்

விருந்தோம்பல் பண்பிங்கே வெறிச்சோடிப் போகாது
வெறிச்சோடிப் போய்விட்டால் படுவான் மண் வாழாது.

கலாசார விழா – 2013
திறந்த பிரிவு கவிதை போட்டியில்
1ம் இடம்பெற்றது

அ.தேகதாஸ்
முத்தமிழ் கலாமன்றம்
முதலைக்குடா.

# படுவான் கரையும் பண்பாட்டுக் கோலமும்

என்னவென்று சொல்வது எங்கள்
பண்பாட்டு வாழ்வு பற்றி
கலைகள் வழிந்தோடும் தங்க மண்
பாரம்பரியம் வேரூன்றும் மூத்த மண்

ஆறு கொண்டு பிரிப்பதால்
எங்கள் மண்ணுக்குப் பெயர் படுவான்கரை
படுவான் தான் . . . .
பண்பாட்டின் தொடுவான்

வசந்தமாடும் வசந்த மண்
கூத்தைக் குழிதோண்டிப் புதைக்காமல்
கூவிக் கூவி ஆடும் அழகு மண்
இறையருள் நிறைந்த இன்ப ஊற்று இது

பண்பாடு வேரூன்றி நிற்க
உயிர்நாடி இரண்டு உண்டு
எங்கள் தான்தோன்றி அப்பன்
தாந்தாமலை முருகன் உறையும் இடம்

கட்டித் தயிர் கொண்டு
கலாசார நிகழ்வு தன்னில்
வகைவகையாய்ச் சமைத்தெடுத்து
பந்தி போடும் பண்பாட்டு மண்

நாம் என்றும் உழுதுகொண்டே வாழ்வோம்
ஊர் ஊராய் கூடி உண்போம்
உறவு கலந்து இணைவோம்
உயர உயர எழுவோம்



# படுவான் கரை மக்களும் பழமை பேசுகின்ற சொற்களும்

திரு. செ. முருகுப்பிள்ளை,
ஆசிரியர்
அரசடித்தீவு வடக்கு.

மட்டக்களப்புத் தமிழகம் கிழக்கு மேற்காக நீண்டு போய்க் கிடக்கின்ற வாவியினால் இரண்டாகப் பிரிக்கப்பட்டுக் கிடப்பதால் கிழக்கை அண்டிய பிரதேசம் எழுவான் கரை என்றும் மேற்குத் திசையை உட்படுத்திய பிரதேசம் படுவான்கரை என்றும் வழங்கப்பட்டு வருவதே மரபாகக் கொள்ளப் பட்டாலும் கதிரவன் உதயமாகின்ற பகுதி எழுவான் கரை என்றும் அது அஸ்தமிக்கும் பகுதி படுவான்கரை எனவும் கூறுகின்ற ஐதீகக் கதைகளும் இன்றும் வழக்கொழிந்து போகா வண்ணம் மட்டக்களப்பு மண்ணில் நின்று பேசப்படுகின்றன. என்பதில் மாறுபட்ட கருத்துக்கள் இருக்க முடியாது. பண்டைய தமிழ் மக்களுடைய வாழ்க்கை நெறிமுறை களையும் பண்பாட்டு விழுமியங்களையும் மறைந்தொழிந்து போகாவண்ணம் இன்று வரையும் கட்டிக்காத்து நிற்கின்ற ஒரு பிரதேசம் என்பதில் படுவான்கரை மக்கள் பேருவகை கொள்ளாது இருக்க முடியாது. தாய்தந்தை யரை குறித்து வழங்கப்படுகின்ற **அம்மா, அப்பா** என்கின்ற சொற்கள் படுவான் கரை மண்ணில் **"அப்பன், அம்மை"** என்று வழங்கப் பட்டு வருவதை இன்றும் காணலாம்.

திருநாவுக்கரசு சுவாமிகள் திருத் தாண்டகப் பாடல் ஒன்றிலே "அப்பன் நீ, அம்மை நீ, அன்புடையமாமனும் மாமியும் நீ" என்று பாடுகின்ற பாமாலையிலே இடம்பெற்று இருப்பது பெருமைப் பட வேண்டிய ஒரு விடயமாகின்றது. இதே போன்று **"பையப்பைய"** என்கின்ற சொல்கூட பல சந்தர்ப்பங்களில் இப்பிர தேசத்தில் பேசப்பட்டு வருவதை நாம் காணமுடிகின்றது. குறிப்பாக பாரமான பொருட்களை உயரமான இடங்களில் இருந்து இறக்கும் போதும், படிக்கட்டுகளிலும் ஏணிகளிலும் இருந்து சிறிய குழந்தைகள் இறங்கி வருகின்ற போதும் பெரியோர் இச் சொற்களை வழக்கொழிந்து போகாத வண்ணம் இன்றும் பயன்படுத்தி வருவதைப் பண்பாடற்ற கொச்சைத் தமிழ் என்று கூறுகின்ற ஒரு சாராரும் இருக்கத்தான் செய்கின்றனர். ஆனால் அப்பழம் சொல்லா னது **"மெல்ல மெல்ல"** என்ற கருத்துப் படவே பேசப்பட்டு வந்திருக்கின்றது. என்பது புலனாகின்றது. இச் சொல்லா னது கொன்றை வேந்தன் என்கின்ற நூலில் ஒளவையார் ஓர் இடத்தில் "பையச் சென்றால் வையந்தாங்கும்" எனவும் "காளையொடு பையவியலிப் பாவை யென்ன வென்னாய்த் தொடி மடந்தை"

என்கின்ற ஐங்குறு நூறு கொல்லிபாவை (389) ஆவது அடிப் பாடலிலும் "பையவே நாமரை யாமத் தென்னோ வந்து வைகி நயந்ததுவே" என மாணிக்கவாசகர் தனது திருக்கோவையார் (164) பாடலிலும், பெருங்கதையில் "பைந் தொடிப்பணைத்தோள் பையவீசி" எனவும் பல இடங்களில் பழந்தமிழ் சொற்களாக இடம்பெற்று வந்திருப்பதை காணமுடிகின்றது. இதே போன்று மட்டக் களப்புத் தமிழகத்தில் படுவான்கரைக் கிராமங்களை அண்டிய மக்கள் தங்களுடைய படலையை அல்லது வீட்டுக் கடப்பினை **'உழலை'** என்ற பெயரால் அழைத்து வந்த சொல்லானது கலித்தொகை நூலிலே (106) பாடலொன்றில் "அழல்வாய் மருப்பினால் குத்திய உழலை மரத்தைப்போல் தொட்டன". என்றும் பெருங்கதையடி ஒன்றில் இச்சொல் "நல்லாப் படுத்த நடுகலுழலையும்" என்ற தொடரில் இடம் பெற்றுள்ளது. இங்கு கற்களிலே துளையிட்டு மூங்கில்களைப் புகுத்தி வைத்திருந்த உழலைகளை பற்றி குறிப்பிடப் பட்டுள்ளமையினைக் காண முடிகின்றது. இதே போன்று தான் **"கொள்ளை"** என்ற சொல் வழிபறிக் கொள்ளையையும் கூட்டத்தையும் குறிப்பதாக கருதப்பட்டு இருந்தாலும் படுவான்கரை மக்கள் மொழியிலே **அதிகம்** என்ற சொல்லைக் குறிப்பதற்காக பயன்படுத்தப் பட்டு வந்திருப் பதனைக் காணமுடிகின்றது. கொள்ளையா? வேண்டுமா? கொள்ளையாச் சாப்பிட்டீர்களா? என்ற கூற்றுக்களில் இருந்து கொள்ளை என்ற சொல் **அதிகம்** என கருத்துப் புலப்படுத்தி நிற்கின்றது. இச் சொற்கள் பழந்தமிழ் இலக்கியமான **"கொள்ளை மாமத்த நால்வாய்க் குஞ்சரம்"** என பாகவதத்திலும் கொள்ளைப் பெரு மொழி என தணிகைப் புராணத்திலும் இடம்பெற்று இருப்பதைக் காணலாம்.

இதே போன்று **எலுவா?** என்கின்ற சொல் கூட மட்டக்களப்பு மொழியிலே படுவான்கரை மண்ணின் வாசனையைத் தொட்டு நிற்கின்ற சொல்லாக இன்றும் வழங்கப்பட்டு வருகின்றது. **அல்லவா?** என்ற பொருள் படவே வழங்கப்பட்டிருக்க வேண்டும். அப்படி எலுவா? இந்தப் பிள்ளைகள் கொஞ்சம் பின்னடைவாகத்தான் இருக்கின்றனர் எலுவா? இச்சொல் கூட **"எலுவசிறா அர்"** எனக் குறுந்தொகை (129) இலும் **"யாரை எலுவ"** என்கின்ற நற்றிணைப் பாடல் (295) இலும் இடம் பெற்றிருப்பது போன்று **ஏலா, ஒண்ணா** என்ற சொற்கள் கூட பயன்படுத்தப்படுகின்ற பெருமை படுவான்கரை மண்ணுக்குத்தான் உண்டு என்பதில் மாற்றுக்கருத்து இருக்க முடியாது என்றுதான் நினைக்கின்றேன்.

**தாசியே கேளும் சதாரமெனும்மோர்**
**தையலிருக்கின்றாளாம் - அவளைக்**
**கொண்டுவர உன்னால் ஏலுமானால்**
**இந்தக் குட்டையை எடுத்தேகு**
**வாதிட்டவனை வெல்லவே ஏலா**
**வகை மோசம் வந்து விடும்**

என்கின்ற ஊஞ்சல் பாடல் ஒன்றில் கூட ஏலும் என்பது இயலும் அல்லது முடியும் என்ற கருத்துப்படவும் ஏலா என்பது இயலாது அல்லது முடியாது என்கின்ற கருத்துப்படவும் இடம்பெற்றிருப்பதை காணமுடிகின்றது. இதே போன்று

**தேடித் தேடொண்ணாத் தேவனை என்றுள்ளே**
**தேடிக் கண்டு கொண்டேன்** எனவும்
**மாலும் நான்முகனும் அறியொண்ணா**
**பாலின் மொழியானொரு பங்கனை**

என்று நாவுக்கரசு சுவாமிகள் தனது தேவாரமொன்றிலும்

**தெருவால போகாவொண்ணா**
**தேன் போல மணக்கிறது**

என நாட்டுப்புற இலக்கியப் பாடல் ஒன்றும் நயம்பட இச்சொற்களை பழந்தமிழ் இலக்கியத்தில் எடுத்தியம்பி இருப்பதைக் காணமுடிகின்றது. இதே போன்று **கா** என்கின்ற மிகப்பழமை கொண்ட விளிப் பெயர்ச் சொற்களும் மட்டக்களப்பு தமிழகத்தில் படுவான்கரை மக்களால் இன்றும் பேசப்படும் சொற்களாக இருந்திருக்கின்றன.

**புள்ள லெக்கா புள்ளலெக்கா உன்ர**
**புருஷன் எங்க போனது கா**
**கல்லூட்டுத் திண்ணையில**
**கதைபழகப் போனது கா**
**என்னில் அழகியோ கா**
**ஏந்து கொண்டைக் காரியோ கா**
**பல்லால் அழகியோகா மச்சான்**
**பார்த்தெடுத்த செங்குரங்கு**

என்கின்ற பாடலில் வரும் **கா** என்கின்ற அசைச்சொல் ஆயிரக்கணக்கான நாட்டார் பாடல்களில் இடம்பெற்றிருப் பதைக் காண முடிகின்றது. இச் சொல்கூட வயதிலே ஒத்த முதியவரையும், அதே வயதின ரையும் பெண்கள் அன்பின் மிகுதியால் அழைக்கின்ற வழக்கு இன்றும் படுவான் கரையில் கூறப்பட்டு வருவதை காணக்கூடிய தாக உள்ளது. இதே போன்றுதான் **இங்கு வை, அங்கு வை** எனப் பொருள் கூறுகின்ற தமிழ் சொற்கள் படுவான்கரைத் தமிழிலே **ஈனவை, அயினவை** என வழங்கப்பட்டிருப் பதை கூட சிலப்பதிகாரத்தில் கூட ஈனோர் என்பது இவ்வுலகின்கண் வாழ்வோர் எனவும், இங்கு வாழ்வோர் எனவும் கூறப்பட்டிருக்கின் றது. எனவே ஈன என்பது இங்கு எனப் பொருள்படுகின்றது. ஈன என்பதற்கு அயின என்பது எதிர் பொருளாக அமைந்திருக்க வேண்டும். இவ்விரு சொற்களும் சிங்கள மொழியில் இயின, அயின என அதே கருத்துப்பட வழங்கப்பட்டு வருகின்றன. இதே போன்று மட்டக்களப்பு தமிழகத்தில் படுவான்கரை மண்வாசனைக்கே உரித்தாக பல சொற்கள் உள்ளபோதும் பல்துறை ஆய்வுகள் என்ற தலைப்பில் வெளிவந்த நூலாதாரங்களையும், கட்டுரையிலே குறிப்பிட்ட இலக்கிய நூற்களையும் நுகர்ந்தன வாக இக்கட்டுரையை தொகுத்திருந்தாலும் படுவான்கரை பிரதேச மண்வாசனையினை சான்றுபடுத்தப்படுகின்ற இன்னும் பல சொற்கள் எம் மண்ணில் இருந்து மருவியும் அழிந்தும் கொண்டு போவதை யாராலும் தடுக்க முடியாதா? என்கின்ற ஏக்கத்தோடு இக்கட்டுரை நிறைவு செய்கிறேன்.

மனிதனை மனிதனாக்குவது
உதவிகளும், வசதிகளுமல்ல.
இடையூறுகளும் துன்பங்களுந்தான்.
(மாத்யூஸ்)

நல்ல நூல்களைப் படிப்பது தலைசிறந்த
மனிதருடன் உரையாடுவதைப் போன்றது.
(தெகார்த்)

## கலாசார விழா – 2012 கன்னி முயற்சியின் சுயம்பு முதல் மலர் வெளியீட்டு நினைவுத் துளிகள்














ஜீவரதி ஜெயசங்கர்
மகிழடித்தீவு - தெற்கு

பாரம்பரியமாகவே சமூகங்களை மையமாகக் கொண்டு ஆய்வு செய்யும் மானிடவியலாளர்களின் மகத்தான தேடல்களில் சமூகக் கட்டமைப்பில் செயல்படும் உறவுமுறை (Kinship) பற்றிய தேடல் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. சமூகக் குழுக்களின் தோற்றப்பாட்டிற்கும், நடத்தையின் ஒழுங்கிற்கும், சமூகப் பிணைப்பிற்கும் (Social bond) முக்கிய பங்கைப் பெறும் உறவு முறையானது சமூக அங்கீகாரம், பண்பாட்டு நடைமுறைகள் மற்றும் நடத்தைக் கோலங்கள் என்பனவற்றுடன் ஒன்றாய் இணைந்து முழுமை பெறுகின்றது. தனியன்களது தொடர்புகள் உறவுமுறை நியமங்களாலே கட்டிக்காக்கப்படுகின்றது. ஒரு குழு இன்னோர் குழுவுடன் இணைவதும் அவர்களினுள்ளே அந்நியர்களை சேர்த்துக் கொள்வதன் வழியும் உறவு முறையின் விரிவாக்கம் அமைகின்றது. இதன் வழியே இன்று உலகளாவிய ரீதியில் உறவுமுறை விதிகளை ஏற்படுத்தி குலம், கோத்திரம், கால்வழி, மரபுக்குழு, குடி, வயிற்றுவார் என பல சிறுகுழுக்களாக பிரிந்து செயற்படுகின்றனர்.

அந்த வகையில் உறவுமுறை என்றால் என்ன? என நோக்குவோமாயின் இரத்த பந்தம், திருமணம், தத்தெடுத்தல் மூலம் தனியன்கள் உறவுநிலையில் இணைக்கப்படுவது எனக் கொள்ளலாம். எனவேதான் உறவுமுறையானது தனித்துவத்தன்மை கொண்டது என போட்டஸ் எனும் அறிஞர் கூறுகின்றார். குறித்த உறவுக்காரன் தனது சமூகமானது ஒழுக்க விதிகளின் அடிப்படையில் உறவுக்காரன் ஒரு எல்லையினுள்ளும் உறவு அற்றவர்கள் இன்னோர் எல்லையினுள்

ளும் என்பதை உணர்ந்து கொள்கின்றான். உறவுமுறை தொடர்பான உணர்வுகள் ஒருவருக்குள் தாமாக எழுகின்றனவே அன்றி வெளிக்காரணிகளின் தலையீட்டினால் உருவாகுவதில்லை. எனவே தான் உறவு முறையானது குறைத்து மதிப்பிட முடியாத தத்துவம் என்கின்றார். இதே போன்று உறவுமுறைக் கற்கையின் தந்தையான மோர்கன் உறவுமுறை பற்றிக் குறிப்பிடும் போது குடும்பம், உறவுமுறையின் அடையாளம் என்றும் கடந்த கால நிகழ்கால உண்மையான இரத்த பந்தங்களின் பிரதி பலிப்பே என்கின்றார். எனவேதான் குடிமரபின் ஊடாக உறவுமுறையானது பட்டிப்பளைப் பிரதேசத்தில் எவ்வாறு பிரதிபலிக்கின்றது என்பதை இக்கட்டுரை விளக்க முற்படுகின்றது.

நம்பிக்கைகள் மரபு ரீதியாக பின்பற்றப்பட்டு வருகின்ற பட்டிப்பளைப் பிரதேச சமுதாயத்தில் உறவுமுறையானது குடிமரபின் ஊடாக சந்ததி சந்ததியாகப் பேணப்பட்டு வருகின்றமை இப்பிரதேசத் திற்கே உரிய தனித்தன்மையாகும். கிராமப்புற வழக்காறுகள், மரபுகள், வாழ்க்கை முறைகள் என்பன இதன் வழியே பின்பற்றப்பட்டு வருகின்றமையும் யாவரும் அறிந்ததே. ஒரு தாய் குழந்தையைப் பெற்றெடுப்பதன் மூலம் தாய் - பிள்ளை உறவு தொடங்குகின்ற அதே நேரம் குடிமரபின் தொடர்ச்சியையும் ஏற்படுத் திக் கொள்கின்றார்கள். பொதுவாகவே மட்டக்களப்புச் சமுதாயம் தாய்வழிச் சமுதாய (Matrilinial Society) அமைப்பாக காணப் படுகின்றமைக்கு குடிமரபு முறையே காரண மாகும். ஒரு தாயின் பிள்ளைகள் அனைவரும் தாயின் குடியாகவே கொள்ளப்படுவர். ஆனால் தகப்பனின் குடிமரபு முறையானது அவரது சகோதரியின் பிள்ளைகள் ஊடாகவே பேணப்படுகின்றது. எனவேதான் பட்டிப் பளைப் பிரதேசத்தை பொறுத்தவரை இங்குள்ள அனைவரும் ஏதாவது ஒரு குடியை சேர்ந்தவராக இருப்பதோடு அவரவர் குடியின் வழியே உறவுமுறையும் பேணப்படுவது சிறப்பம்சமாகும்.

இங்கு காணப்படும் சந்ததி வழிகள் பெரும்பாலும் தாய்வழி வயிற்றுவாராகவே காணப்படுவர். இவ்வழமையின் அடிப்படை யிலே குடிமரபு முறையானது இங்கு தொடர்கின்றது என்று கூறலாம். குடிகள் ஒவ்வொன்றுக்குள்ளும் உப பிரிவுகள் காணப் படுகின்றன. இவ் உப பிரிவை வயிற்றுவார் என எம்மக்கள் அழைக்கின்றனர். இதனை வறுகை, தத்தியார், கத்தறையார், போன்ற பெயர்களா லும் அழைக்கப்படுகின்றனர். ஏனைய தமிழ்ச் சமுதாயங்களில் பரம்பரை, வம்சம், வகையறா போன்ற சொற்களாலும், கால்வழி என தமிழ் நாட்டு மானிடவியல் அறிஞர்கள் குறிப்பிடு கின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இங்கு வயிற்றுவார் என்பது நன்றாக நினைவு படுத்தி பார்க்கக்கூடிய மூதாதையர் வழி தொடர்பு படுத்திக் கூறக்கூடிய உறவுக் குழுக்களையே குறித்து நிற்கின்றது. ஒரு தாய்வழியைச் சுற்றி விருத்தியான பரம்பரையி னர் அனைவரும் அத்தாயின் வயிற்றுவார் என அழைப்பர். அந்த வகையில் கீழ்க் குறிப்பிடும் படிமுறைப் பிரிவுகளின் அடிப்படையிலே இங்குள்ள சமூகக் கட்டமைப்பு காணப் படுகின்றது.

**குழுக்கள் / கூட்டம்**
**(Bands / Group)**
↓
**சாதி / Caste**
↓
**குலம் / Clans / கோத்திரம்**
↓
**குடி**
↓
**வயிற்றுவார்**

இங்கு வயிற்றுவார் என்பது இறுக்கமான ஒரு கூட்டுக் குடும்பமாகவே கருதமுடியும். உதாரணமாக இப்பிரதேச மக்களிடையே **அவன் நம்மட வயிற்றுவார், அவியட வயிற்றுவார்** என்று பேச்சு வழக்கில் கதைப்பதில் இருந்து இம் மக்களி டையே இருக்கும் உறவுமுறையானது ஒரு

தனித்துவ வடிவம் பெறுகின்றமை பெருமைப் படக் கூடிய ஒன்றாகும்.

பட்டிப்பளைப் பிரதேச மக்களைப் பொறுத்தவரை திருமணச்சடங்கு, மரணச் சடங்கு, பூப்புனித நீராட்டு விழா, கோயில் நிர்வாகம், கோயில் சடங்குகள் போன்ற சமூக சமய நிகழ்வுகளில் அவரவர் குடியின் பிரதிபலிப்பும் அதன் இறுக்கத் தன்மையும் எவ்வாறு காணப்படுகின்றது என்பதையும் அதே நேரம் குடிகளுக்கு இடையே அதிகார வேறுபாடும் அந்தஸ்து வேறுபாடும் காணப் பட்டாலும் மக்களால் ஆக்கப்பெற்ற இக் கருவியின் அடிப்படையில் மக்கள் தங்கள் உறவுகளின் ஊடாக தமது வாழ்க்கைத் தேவைகளை எவ்வாறு நிறைவு செய்து கொள்ளுகின்றனர் என்பதைப் பின்வருமாறு ஆராயலாம்.

திருமண நடைமுறைகளைப் பொறுத்தவரை குடிமரபின் செல்வாக்கும் உறவுமுறையின் தனித்துவத் தன்மையும் ஆழமாக வேரூன்றி உள்ளமை குறிப்பிடத்தக்க தாகும். ஒரு குடிமரபுக்குள் உள்ளோர் அனைவரும் இரத்த உறவுடையவர்களாக காணப்படுவர். ஏனெனில் இரத்த உறவின் (Consanguinity) வழியுடையோர் ஒரு மூதாதையர் வழிவருவோர் என்பதால் ஒரு குடிமரபைச் சேர்ந்தவர் அந்தக் குடிமரபிற்குள் திருமணம் செய்ய முடியாது அதாவது மணவுறவு என்பது விலக்காக (Taboo) கருதப்படும். ஒரு குடிமரபிற்குள் உள்ளோர் சகோதரன், சகோதரியாகவும், மாமன், மருமக்களாகவும் இருப்பர். இவர்களுக்குள் திருமணம் நடந்தால் அதைச் சமுதாயம் ஏற்றுக் கொள்ளாது. ஏனெனில் தடை செய்துள்ள உறவுகளுக்கு இடையில் பாலுறவு நிகழ்ந்தால் அது தகாப்புணர்ச்சி (Incest) எனப்படும். தகாப்புணர்ச்சி உறவு எவை என்பது குறித்து ஒவ்வொரு குடிமரபும் தனித்தனியான வரையறையை ஏற்படுத்தி வைத்துள்ளனர். எது எவ்வாறாயினும் ஒரே குடிமரபிற்குள்ளே திருமணம் செய்கின்ற அகமணம் (Endogamy) விலக்கப்பட்டதா கவும் ஒரு குடிமரபினர் வேறு குடிமரபினைச் சேர்ந்த மச்சான், மச்சாள் உறவு கொண் டோரை திருமணம் செய்யும் புறமணம் (Exogamy) சமுதாயத்தால் ஏற்றுக்கொள்ளப் பட்டதாகவும் காணப்படுகின்றது. அந்த வகையில் திருமணத்தை பொறுத்தவரை இம்முறையானது பட்டிப்பளை பிரதேசத்தில் உள்ள மக்களின் உறவுமுறையின் தனித்துவத் தன்மை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அடுத்து சொத்துடமைகளும், அத னைச் சார்ந்த சமூக வழமைகளும் கூட குடிவழி உறவுமுறையின் மூலமே பேணப்படுகின்றமை யானது விசேட அம்சமாகும். தாய் வழி உரிமை முறையினை அப்படையாகக் கொண்ட இச்சமுதாயத்தில் நிலங்கள், சொத்துக்கள் என்பன பெண்ணின் உடைமை களாகவே கருதப்பட்டன. இதனால் சீதனம் என்ற முறையில் சொத்துக்கான முழு உரிமையும் பரம்பரையாக பெண்ணின் வழியாகவே பேணப்பட்டு வருவதோடு ஆண் சகோதரர்கள் அவற்றை பரிபாலனம் செய்பவர் களாக காணப்பட்டனர். இத்தகைய சமூக வழமைகள் இன்றுவரை தொடர்வது குறிப்பி டத்தக்கதாகும். ஏனெனில் ஒரு குடிமரபிற்குள் இருக்கும் சொத்துக்கள் எப்படியும் அக்குடியின் வழியே பராமரிக்கப் படுகின்மை யானது விசேட அம்சமாகும். குடிமரபின் வழி இருக்கும் உறவுமுறையின் இறுக்கத்தன்மை யையும் தனித்துவத்தையுமே இது எடுத்துக் காட்டுகின்றது.

கோயில் சடங்குகளில் குடிமரபின் ஊடாக உறவுமுறையின் தனித்துவம் எவ்வாறு பேணப்படுகின்றது என்பதை நோக்கின் உதாரணத்திற்கு கொக்கட்டிச்சோலை, தான்தோன்றீஸ்வரர் ஆலய வருடாந்த உற்சவ திருவிழாக்களில் குடிமரபின் செல்வாக்கை காணலாம். ஒவ்வொருநாள் திருவிழாவும் ஒவ்வொரு குடியைச் சார்ந்தவர்களுக்கும் வழங்கப்பட்டிருக்கின்றது. இங்கு திருவிழாக் கள் சிறப்பாக நடைபெறுகின்ற அதே நேரம் இன்றைய சூழ்நிலையில் வேலையின் நிமிர்த்தமும், வேறு பல காரணங்களாலும்

இப்பிரதேசத்தில் இருந்து வேறு பிரதேசங்களிலும் வெளி மாவட்டங்களிலும் வசிப்பவர்கள், தங்களது குடித் திருவிழா அன்று ஒன்று சேர்ந்து அதனைத் திறம்பட செய்துமுடிக்கின்றனர். இச்சந்தர்ப்பத்தில் பிரிந்திருந்த உறவுக்காரர்கள், குடியின் வழி ஒன்றுசேர்கின்றனர். ஒற்றுமைப்படுகின்றனர். தங்கள் எண்ணங்கள், உணர்வுகளை தத்தமது சொந்தங்களுடன் பகிர்ந்து கொள்கின்றனர்.

இதுதவிர மரணச்சடங்கின் போது கூரை மூடி வைத்தல், கடமை செய்தல் என்பவற்றில் குடிமுறைப்படி செய்வதையும் பூப்புனித நீராட்டு விழாவில் அவரவர் முறைப்படி கூரை மூடி வைத்தல், மாட்டுக்கு குறி சுடல் போன்ற நிகழ்வுகளில் இம்மக்களின் குடி மரபு பிரதிபலிக்கின்ற அதே நேரம் உறவுமுறையின் இறுக்கத்தன்மையும் தனித்துவத்தன்மையையுமே எடுத்து காட்டுகின்றது.

இன்றைய நவீன தொழில்மயமாக்கப்பட்ட சமூகங்களில் ஒரு தனிக்குடும்பம் (Nuclear - Family) (தாய், தந்தை, பிள்ளைகள்) மாத்திரமே ஒரு உறவுக் குழுவாகவும், தொழில், குடியுரிமை, பொருளாதாரம், அரசியல் ஈடுபாடு ஆகிய செயற்பாடுகளின் வழி குழுக்கள் உறவு முறையை பேணுகின்ற நிலமையுமே காணப்படுகின்றது. ஆனால் மட்டக்களப்பு தமிழ்ச் சமுதாயங்களில் குடிமரபின் செல்வாக்கு காணப்பட்டாலும் கூட பட்டிப்பளை பிரதேசத்தை பொறுத்தவரை மக்களால் ஆக்கப்பெற்ற கருவியான குடிமரபு எனும் ஊடகத்தை அடிப்படையாகக் கொண்டு சமூக உறவுகளின் வழி பாரம்பரிய விழுமியங்கள், நெறிமுறைகள், சடங்குகள், சம்பிரதாயங்களை தலைமுறை தலைமுறையாக பேணி வருவதோடு தங்கள் வாழ்க்கைத் தேவைகளையும் நிறைவு செய்து கொள்கின்றனர். இந்நிலையானது இப்பிரதேச சமூக அமைப்பானது பல்வேறு பண்பாடு சூழமைவுகளின் வழி வேறுபடுத்தலையே காட்டுகின்றது. எனவே தான் உறவு வலைப்பின்னலில் மக்கள் ஒவ்வொருவரும் கூறாக தொடுக்கப்பட்டுள்ளனர். இதுவே முழு சமூக உறவு வலைப்பின்னலின் ஒரு பகுதியாகும். இதனையே Radcliffe brown எனும் அறிஞர் சமூக அமைப்பு என்கின்றார்.

எனவேதான் இப்பிரதேச மக்களின் சமூகக் கட்டமைப்பின் இறுகத்தன்மைக்கும் அதன் சீரான இயக்க செயல்முறைக்கும் குடிமரபும் அதன் மூலமாக உறவு முறையின் தனித்துவத்தன்மையும் பாரிய பங்களிப்புச் செய்கிறது எனலாம்.

சதுரங்க விளையாட்டைப்போல வாழ்விலும் முன் யோசனை வெற்றி பெறுகிறது.

(பாக்ஸ்டன்)

சுறுசுறுப்பாய் உள்ள மனிதன் எப்போதும் மகிழ்ச்சியோடு இருப்பான்.

(ஹென்றி போர்டு).



# படுவான்கரைப் பிரதேசத்தில் கூத்துக் கலையும் அதன் வளர்ச்சியில் பெண்களின் பங்கும்

> "ஒரு காலத்தில் கூத்தை வேண்டா வெறுப்போடு பார்த்த சமூகம் இன்று தமிழர்களின் தனித்துவம் கூத்து என்று ஒப்புக்கொண்டு வெளிநாடுகளிலும் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு அவர்களது கலை மரபிலும் இது புகுத்தப்படுகின்றது."

ஆக்கம்: இ.குகநாதன்
(கி.பல்கலைக்கழகம்)
முனைக்காடு.

**அறிமுகம்:**

ஈழமணித் திருநாட்டில் மீனினங்கள் கவிபாடும் மட்டக்களப்பு மாவட்டத்தின் அழகினை நிர்ணயிப்பது படுவான்கரைப் பிரதேசமாகும். இங்கு கொக்கட்டி நாதனின் தேர் ரதம் ஓடும் பூமியும், தாந்தாமலை முருகனின் அருளும், இயற்கை வளங்களும், எண்ணற்ற சோலைகளும், ஆறுகளும், குளங்களும் இதற்குப் படுவான்கரை என்ற மகிமையைக் கொடுத்து வருகின்றது. சூரியன் மறையும் திசையில் இருப்பதாலும் மற்றும் ஆறுகளை எல்லையாகவும் வைத்தும் படுவான்கரை எழுவான் கரை என்று பிரிக்கப்பட்டதாக நம்பப்படுகின்றது. இப்பிரதேசத்தில் பழமை பெருவாரியாகக் காணப்படுவதனால் இங்கு வாழும் மக்களின் வாழ்வு முறையும் ஒரு தனிச் சிறப்பாக அமையப் பெற்றுள்ளது.

அவ்வகையில் அவர்களது வாழ்வு முறை எவ்வாறு காணப்படுகின்றதோ அது போன்றே கலை சார்ந்த அம்சமும் பழமை முறைப்படி இன்றும் பிரகாசிக்கின்றது. கலை என்று சொல்லும்போது படுவான்கரைப் பிரதேசத்தை பறை சாற்றுவது கூத்துக்கலை என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப் பட்ட ஒன்று. கூத்து என்பது உலகியல் வாழ்வை உணர்ச்சியோடு உருவாக்கி நாட்டு மக்களின் பண்பாட்டின் சின்னமாகவும் பொதுமக்களின் சொத்தாகவும் விளங்குவது கூத்தாகும். நாட்டு மக்களின் உள்ளக்கருத்து, குணச்சிறப்பு, கலைப் பண்பாடு, வாழ்க்கை முறைமை போன்றவற்றை எடுத்து விளக்குவது இக்கூத்துக் கலையே. எம் நாட்டின் பழம்பெரும் கலைகளில் ஒன்றாகவும் தமிழ் மக்களின் பாரம்பரியக் கலையுள் ஒன்றாகவும் இக்கூத்துக் கலை காணப்படுகின்றது.

கூத்தினைப் பிரதேசவாரியாக பல்வேறு ரீதியாகப் பிரித்து நோக்குகின்ற போதும் படுவான்கரைப் பிரதேசத்தில் வடமோடி, தென்மோடிக் கூத்துக்களே பெரிதும் செல்வாக்குச் செலுத்துகின்றது. படுவான்கரைப் பிரதேசத்தில் வாழும் மக்கள் அதிகமானோர் விவசாயச் செய்கையினையே மேற்கொள்ளுகின்றனர். வேலைகள் செய்யும் காலத்தைத் தவிர்ந்து ஏனைய அதிகமான நாட்கள் ஓய்வு நேரங்களாகக் காணப்பட்டது. அதாவது பங்குனி, சித்திரை, வைகாசி , ஆனி

இந்த மாதங்களில் கிராமத்தில் முக்கிய மானவர்கள் சேர்ந்து அண்ணாவியாரைப் பொருத்தம் பேசி பல்வேறுபட்ட கூத்துக்களை ஆடுவர். கூத்து ஆடும் போது மத்தள சத்தத்தினை கேட்டு முழுக்கிராமமுமே சந்தோசமாய்க் காணப்படும்.

படுவான்கரைப் பிரதேசத்தில் கூத்துக் கலை எப்போது வந்தது? யாரால் கொண்டு வரப்பட்டது? இதற்காக பாடுபட்டவர்கள் யார்? என்றெல்லாம் ஆய்வுக்கு உட்படுத்து கின்ற போது கூத்துப் பற்றிய இன்னும் பல புது விடயங்களை அறியக்கூடும். 1940, 1950களில் கூத்து படுவான்கரைப் பிரதேசத்தில் மிளிர்ந்திருக்கிறது என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று முதலில் கன்னன்குடா அதனை அண்டிய பிரதேசங்க ளில் ஏனைய பகுதிகளுக்குச் சென்று கூத்தினைப் பழக்கியதாக பலரது வாய்மூலங் கள் கூறி நிற்கின்றது. இருந்தும் இதன் வருகை இந்தியா என்றே கூறப்படுகின்றது. கூத்தினை ஆசிரியக்கூத்து, தமிழ்க்கூத்து, என்று பிரிப்பர். இவை முறையே வடமோடி, தென்மோடி என்ற வகுப்பைச் சேர்ந்த கூத்தாக மட்டக்களப்பில் ஆடப்படுகின்றது. இக்கூத் துக்களை அகச் சான்று கொண்டு பார்க்கையில் 17ம் நூற்றாண்டுக்கு பிற்பட்டவை என்றே சொல்லத் தோன்றுகின்றது. மட்டக்களப்பின் பழமை வாய்ந்த அனுருத்திர நாடகத்தினை பதிப்பித்த வீ.சி.கந்தையா தமது பதிப்புரை யில் இன்னூல் 16ம் நூற்றாண்டுக்கு பிற்பட் டவை என்றே கூறுகின்றார்.

மக்கள் படுவான்கரை பிரதேசத்தில் படிப்படியாக குடியேற கூத்துக்கலையும் பரிணமித்து செல்கின்றது. பின்பு ஆலய வழிபாட்டுடன் கூத்து பாரிய தொடர்பு கொண்டுள்ளது. ஒரு ஊரில் கோயில் சடங்கு என்றால் அதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பே கூத்துப்பழக ஆரம்பித்து விடுவார்கள். கூத்தினை ஓர் இரு களரி ஆடி சட்டம் கொடுப்பர். இதனைப் பனையோலையில் எழுதிக்கொடுத்த முறைமையே ஆரம்ப காலத்தில் காணப்பட்டு இருக்கின்றது. சட்டம் கொடுத்தல் என்பது நீ இன்ன பாத்திரம் என்று உறுதிப்படுத்துவதுதாகும். அதன் பின்னர் கூத்தினைப் பழகி சதங்கை அணிவர். இது கூத்தில் அடிக்கப்படும் மத்தள இசைக்கு காலைத் தூக்கி வைத்து சலங்கை ஒலியை ஒலிக்க வைப்பதும் ஒரு சலங்கைக் காலில் மற்றைய கால் பட்டு விழுந்து விடாமலும் சலங்கை அணிவது வழக்கம். பின் கிழமைக் கூத்து ஒரு சில களரி ஆடிய பின் அடுக்குப் பார்த்தல் இடம்பெறும். இது கூத்தின் நேரத்தைக் கணிப்பதாய் அமையும். பின்பு அரங்கேற்றம் இடம்பெறும். ஆரம்பகாலத் தில் அரங்கேற்றம் என்றால் மற்றோரை அழைப்பதற்கு வட்டா வைப்பர். பின் காட் என்று சொல்லி நோட்டிஸ் அடித்து தமது உறவினருக்கு கொடுத்து அழைப்பர். அவர் கள் வருகை தந்து காசு மாலை, கொடிச்சீலை, மாலை மற்றும் சால்வை போர்த்து செல்கின்ற முறைமையும் காணப்படும். பின் அரங்கேற்றம் முடிவுற்ற தும் மறுநாள் காலை முக்கியமான போடிமார் கூத்துக் கலைஞர்களின் வீடு வீடாகச் சென்று ஆடுவர். இது வடமோடி, தென்மோடி கூத்தில் காணப்படும் பொதுவானதாகும்.

**கூத்தில் பெண்கள் :**

ஆணாதிக்கத்தின் அடிப்படையில் நிகழ்த்தப்படும் பெண்கள் மீதான பாரபட்சங்கள் பெண்களைத் தனிமைப் படுத்தி செயற்பாடுகளில் இருந்து ஓரங்கட்டி விடும் நிலைமையை சாத்தியமாக்கியதோடு பெண்கள் சார்பான பிற்போக்கு கற்பிதங்களை மரபார்ந்த கருத்தியலாக கற்பிக்க வழிவகுக் கின்றன. ஆரம்ப காலத்தில் பெண்களையே தெய்வமாகப் போற்றினான் மனிதன். பின் உழைப்பின் அடியாகவும், தனது சந்ததியை உருவாக்கும் அடியாகவும், பெண்ணின் உடல் நிலையை வைத்தும் ஆண்களே யாவற்றிற்கும் மேலானவர்கள் என்று உணர்ந்து பெண்களை சிற்றின்பம் கழிக்க மட்டுமே பயன்படுத் தினான். அதிலிருந்து வந்த ஆணாதிக்கம் இன்று வாழ்வியலோடு மட்டுமன்றி கலை சார்ந்தும் காணப்படுகின்றது.

அந்த வகையில் தமிழர்களின் தனித்துவக் கலையான வடமோடி, தென்மோடிக் கூத்திலும் இந்நிலமை காணப்படுகின்றது. இக்கூத்துக்களின் கதையமைப்பு மகாபாரதம், இராமாயணம் போன்ற இதிகாசக் கதைகளையும் அது சார்ந்த துணைக்கதைகளையும் அல்லது புராணக்கதைகள், அரச குலத்துக் கதைகள் போன்ற பல்வேறுபட்டவற்றை இக்கூத்துக்கள் கொண்டிருக்கின்றது. இந்தக் கதையில் கூட பெண்களை ஒரு பகடக்காயாகவும், ஆண்களின் ஆணாதிக்கத்திற்கு பலிக்கடாவாக பெண்கள் காணப்படுகின்றனர். தன்னை ஒரு தனி மனிதன் ஈனம் சொன்னதனால் காட்டுக்கு அனுப்புகிறான் சீதையை ராமன். சந்தேகம் போக்க தீயில் பாயச் சொல்கிறான். ஒரு சபை நடுவே தனது மனைவியான துரோபதையை சூதாட்டத்தில் தோற்கின்றனர் பாண்டவர்கள், சபை நடுவே துயில் உரியும்போது வாயை மூடுகின்றனர், வாய்மொழி காக்க சுயநலம் கருதி கட்டிய மனைவி சந்திரமதியை காசுக்கு விற்கின்றான் அரிச்சந்திரன். இது போன்ற அனைத்துக் கதையமைப்புக்களிலும் பெண்கள் ஒரு பலிக்கடாக்கள்.

கதையமைப்பில் மட்டுமின்றி கூத்தில் பெண்கள் இரண்டாம் பட்சமாகவே பார்க்கப்பட்டனர். அதில் அவர்கள் ஒரு கூலிவேலை செய்பவர்கள் போல் காணப்படுகின்றனர். ஏன் பெண்களைக் கூத்தில் பங்குபற்ற வைக்கவில்லை என்று தேடும் போது பெண்கள் மென்மையானவர்கள் அவர்கள் கூத்தினை விடிய விடிய ஆடுவதற்கு அவர்களது உடல் ஈடுகொடுக்காது என்று எண்ணியும், பெரும்பாலும் கூத்து ஆலயங்களோடு தொடர்புபட்டுக் காணப்படுவதனால் பெண்களின் தீட்டு, துடக்கு என்ற விடயமும் இதற்குக் காரணமாகக் கொள்ளப்படுகின்றது.

ஒரு கூத்து ஆடினால் அதில் பெண்கள் உள்ளார்ந்தும் வெளிப்படையாகவும் பல்வேறுபட்ட பங்களிப்பினை செய்கின்றனர். கூத்துப் பழகுவது தொடக்கம் அரங்கேறும் வரை வெவ்வேறு வகிபங்கினை கொள்கின்றாள். ஒரு கூத்து பழகுவதாய் இருந்தால் தனது கணவனை கூத்து ஆட போவதற்கு தூண்டுபவள் பெண் தன் கணவன் எல்லோருக்கும் முன் அவனை அடையாளப் படுத்த அவளுக்கு கூத்து காரணமாக அமைந்தது. அது மட்டுமன்றி கூத்து விடிய விடிய ஆடப் படுவதனால் அதில் பாடல்கள் அதிகமாய்க் காணப்படும் எனவே அப் பாடல்களை பாடி மனனம் பண்ண மனைவி உறுதுணையாய் அமைந்து இருக்கின்றாள். ஒரு பாடலை கணவன் பாட அதன் மற்றய அடியை மனைவி எடுத்துக் கொடுத்தும் இருக்கிறாள். மேலும் கணவனுக்கு எழுதப் படிக்கத் தெரியாது என்றாலும் மனைவி பாடல்களை எழுதி கொடுத்தும் இருக்கிறாள்.

மேலும் கூத்துப் பழகும் போது பழக்கும் அண்ணாவியாருக்கு ஒரு நாளைக்கு ஒருவர் அல்லது இருவர் சேர்ந்து சாப்பாடு கொடுப்பர் இதனைக் கிராமத்தில் **சோத்து முறை** என்பர். எனவே இதனையும் மனைவி சமைத்துக் கொடுத்திருக்கின்றாள். கூத்து கணவன் ஆடும்போது மனைவி களரிக்கு பக்கத்தில் இருந்தால் கூத்து ஆடும் கணவனுக்கு ஓர் உற்சாகம் தன் மனைவிக்கு முன் சிறப்பாக ஆடவேண்டும் என்பதாகும். ஆகவே மனைவி இங்கு கணவனின் ஆட்டத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றாள். அத்தோடு கணவன் பாடல் படிக்கும் போது குரல் தெளிவில்லாமல் தடுமாறினால் அடிக்கடி போத்தலில் தட்டு ஊறல் செய்து பாதுகாப்பாக வைத்து இருப்பாள் இதனை அடிக்கடி ஊற்றிக் கொடுப்பாள். அது போன்று தண்ணீர், சாயம்போட்ட தேயிலை, சுடு தண்ணி என்பன கொடுத்தும் அவனை ஊக்கப்படுத்துகின்றாள்.

அதுமட்டுமன்றி அரங்கேற்றம் என்றால் ஒவ்வொரு கூத்தரும் தான் என்ன பாத்திரமாக ஆடுகின்றாரோ அதனைக் குறிப்பிட்டு தனது பெயர் எப்போது இடம்பெற இருக்கின்றது என்றெல்லாம் கூறி அழைப்பிதழ் தயாரித்து தமது சொந்தக்காரர் எல்லோருக்கும் கொடுப்பார் இதனைக் காட் அடித்துக் கொடுத்தல் என்பர். இதற்கு மனைவி உதவி செய்வாள் தமது சொந்தக்காரரிடம் சென்று தமது கணவன் ஆடுவதாகவும் கண்டிப்பாக வரவேண்டும் என்றும் கூறுவாள்.

பின்பு அவர்கள் அரங்கேற்றம் என்று வருகின்றபோது அவர்களுக்குச் சமைத்து வந்து தங்குவதற்குரிய ஏற்பாடுகளை பண்ணுவாள். இது பெண்களுக்கு ஒரு சந்தோசத்தைக் கொடுப்பதாக அமைகின்றது.

அது மட்டுமன்றி கூத்து ஆடுகின்ற கணவனுக்கு உடை ஒப்பனையில் பாரிய செல்வாக்கு செலுத்துகின்றாள் அதாவது கணவனுக்கு சீலை உடுத்துவிடல் மற்றும் பெண்களுக்குரிய உடைகளை கொடுத்தல் முடிமயிர், குங்குமப்பொட்டு, மாலை, காப்பு, ஒப்பனை செய்யக்கூடிய பொருட்கள் என்றெல்லாம் பலவற்றை கொடுத்தும் அவர்களை அழகுபடுத்தியும் உள்ளாள் கணவனது கூத்துக்குரிய உடையில் கந்தையாய் கிளிந்து இருந்தால் அதனை தைத்து கொடுத்தல் மேலும் பல்வேறு உதவிகளை செய்கின்றாள்.

கூத்தில் அரங்கேற்றம் செய்யும்போது வட்டக்களரி அமைத்து மேலே கூடாரம் போன்று கட்டுவர் இதற்குப் பெண்களின் சாரிகளையே பயன்படுத்துவர் . எனவே இதற்கு தனது சாரிகளை கொடுத்து உதவு வாள். மேலும் களரியைக் கூட்டித் துப்பரவு செய்தாள். கூத்து வெறுமனே ஒரு கிராமதத் தில் மட்டுமல்ல ஆடுவது ஒரிடத்தில் ஆடினால் ஏனைய கிராமங்களுக்கும் ஆலய திருவிழாவின் போது ஆட வேண்டி இருக்கும் எனவே அவர்களோடு எல்லாப் பொருட் களையும் எடுத்து தானும் சென்று களரிக்கு பக்கத்தில் அமர்ந்திருப்பாள். அத்தோடு வருகின்றவர்கள் தனது கணவனுக்கு மாலை கள் காசுகள் கொடுத்தால் அதனை சென்று வாங்கி தான் வைத்துக்கொள்வாள். இவ்வாறு பல்வேறு பணிகளில் ஒரு பெண் செயற்படுகின்றாள்.

**இன்றைய நிலை :**

கூத்தில் பெண்களை கதையிலும் சரி அழிக்கையிலும் சரி பெண்களை ஒதுக்கி வைக்கின்ற போதும் அவர்கள் பழகுவதில் இருந்து அரங்கேற்றம் வரையும் மிகவும் பாரிய செல்வாக்கினை செலுத்துகின்றாள் என்பது உண்மை. ஆனால் இன்றைய சூழ்நிலையில் கூத்து என்பது பல்கலைக்கழகங்களிலும், பாடசாலைகளிலும் கற்கை நெறியாய் மாறியதனால் கூத்தில் பெண்களுக்கு பெண்களே ஆடுகின்ற தன்மை காணப்படுகின்றது.

படுவான்கரைப் பிரதேசத்தில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் கூத்து மந்த கதியில் காணப்பட்டது. இது ஒரு இருண்ட காலம் என்றும் கூறலாம். ஆரம்ப காலத்தில் ஒரு ஊரில் ஒரு கூத்து, இருகூத்து என்று ஆடுவர். அதன் பின்பு யுத்தம், வறுமை என்பவற்றால் கூத்து மந்தகதியானது. ஆனால் இன்று மீண்டும் பழைய நிலையை நோக்கி செல்கின் றது. பிரதேச செயலகம், மாவட்ட செயலகம், மன்றங்கள், கலைப்பண்பாட்டுத் திணைக்க ளம் என்பன கூத்தினைச் செய்யும் கலைஞர்களை ஊக்குவிக்கும் முகமாக அவர்களுக்குப் பணப்பரிசுகள் வழங்கி போட்டி நிகழ்ச்சியாக மாற்றம்பெற வைத்துவிட்டது. அதுமட்டுமின்றி படச்சட்ட மேடையில் ஆட சொன்னவர்கள் வட்டக்களரி யில் ஆட வழிவகுக்கின்றனர். அண்மையில் பட்டிப்பளை கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியத்தினால் நடாத்தப்பட்ட கூத்துப்போட்டி பாரிய செல்வாக்கினைச் செலுத்தியது. அது போன்று மண்முனை தென்மேற்குபிரதேச செயலகத்தினால் இவ்வாண்டு கலாசார விழாவிற்காக கூத்து விண்ணப்பம் கோரப் பட்டு சிறப்பாகக் கூத்து இடம்பெற்றது. மாவட்ட செயலக கலாசாரப் பிரிவு பல்வேறு போட்டிகளை நடத்தியுள் ளது. படுவான்கரைப் பிரதேசத்தில் ஏறத்தாழ பத்திற்கு மேற்பட்ட கூத்துக்கள் இவ்வாண்டு அரங்கேற்றப்படுகின்றது. எனவே இது எங்கள் கூத்து. மீண்டும் பழைய நிலைக்குச் செல்லு கின்றது என்பதை நினைத்து மனம் சந்தோசப் படுகின்றது. இது போன்று அனைத்து அமைப்புக்களும் எங்கள் சொத்தான கூத்துக் கலையை வளர்ப்பதற்கு அனைத்து நடவடிக் கைகளையும் எடுக்க வேண்டும். அப்போது தான் எங்கள் இருப்பை எம்மால் நிர்ணயிக்க முடியும் என்பது உண்மை.

**கலாசார விழா – 2013 போட்டியில்**
**கனிஷ்ட பிரிவில்**
**முதலிடம் பெற்ற கவிதை**

# ஒன்றுபடுவோம் உயர்வு காண்போம்

**கு.பிரசோன்**
**மட்/கொக்கட்டிச்சோலை,**
**இராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயம்.**

பட்டி பெருகி பால்கறந்து கால்நடந்து
கட்டித் தயிர் விற்று காசெடுத்து கடைசென்று
பெட்டி நிறையப் பொருள் வாங்கி வழிநடந்து
மட்டில்லா மகிழ்வோடு மனையாளும் இலம் புகுவாள்

இளவேனில் காலத்தை இனிதாக்கும் கரகாட்டம்
மரபு தவறாமல் பழக்குவார் பல கலைகள்
குளநரிகள் கூத்தாடி கூச்சலிட்டு கீச் சொலிபோல்
இளசுகளின் இதயராகம் தெருவெல்லாம் கேட்டிடுமே

கண்ணகி அம்மனுக்கு கதவு திறத்தலுடன்
கண்மணிகள் காலத்தைக் கோயிலோடு போக்கிடுவார்
எண்ணிய விளையாட்டை எல்லோரும் ஒன்று கூடி
புண்ணிய பூமிதனை புழுதிமயமாக்கிடுவார்

பலாமரம் கீழிருந்து பாட்டி தாத்தா கதை சொல்ல
கலா அக்கா வந்திடுவாள் கருவாடு விளையாட
துலாக்கிணற்று நீரால் உடல்கழுவி வந்து நாங்கள்
நிலாச் சோறு உண்டு நித்திரைக்குச் சென்றிடுவோம்

காலையில் எழுந்தவுடன் கதிரவன் வந்திடுவான் வானில்
கதிரவன் கதிர்கள் உடலில் பட்டவுடன்
சுறுசுறுப்பாய் வேலையைச் செய்வோம்
பாடசாலைக்கு பரபரப்பாய்ச் சென்று
காலைக்கூட்டத்தில் ஈடுபடுவோம்
அனைவரும் ஒன்று கூடி ஆசானுக்கு மதிப்பளிப்போம்

சி. விஜிதமலர்
முதலைக்குடா

# யதார்த்தம்

நீலத்திரை போன்ற வானம் - ஆங்காங்கே
நிழல் கொடுக்கும் மேகக் கூட்டம்
பேசி வரும் தென்றல் காற்று என
நம்மைப் பிரியப்படுத்தும் இந்தச் சூழல்

பரந்த கடலிலே மீன்கள் போல
பற்பல காட்சி கொடுக்கும் விண்மீன்கள்
இருந்த இருள்களைப் போக்க - நிதம்
எழுந்து வந்திடும் வெய்யோன்

கோணல் மானலான மலைகள் - அதில்
கொட்டும் நீர்களை குளத்திற்கு அனுப்பிடும்
வற்றாத வாவிகள் கூட - இங்கு
வடிவான வடிகான்களை சுற்றிடும் சூழ

பரந்தோர் வெட்ட வெளியில் - பலர்
படுவார்கள் சொல்லொண்ணாப் பாடுகள் பாரு
இவரெல்லாம் வேறு யாரில்லை - எமது
இருப்புக்கு இரைதரும் பொறுப்புள்ள சொத்து

வெயில் நெருப்போடு ஆறுமாதம் - வயல்
உழைப்போடு ஆறு மாதம் - நிதம்
சிரிப்போடு வாழ்ந்த எம்மை - நித்தம்
சீரழித்து இங்கு யுத்தம்.

வளர்ந்து நின்று மழை கேட்கும் மரங்கள்
மலர்ந்து நின்று வாடா வரம் கேட்கும் மலர்கள்
உலர்ந்து மெலிந்து உயிர்ப்பிச்சை கேட்டு
எழுந்து வளர நாணல் எடுக்கும் முயற்சி

இறைவனின் வீடுகள் வடிவான கோயில்கள் - நல்ல
மனிதனின் மனங்களில் இருக்குது வீடுகள்
மறைகளைக் கற்றவர்கள் கூட - இதை
மறுக்காமல் செப்பிவிட்டு வரலாறு சொல்வர்

இளைஞர்கள் பலங்களைச் சோதிக்க இங்கு
இருக்குது பற்பல விளையாட்டுப் பாரு
தொலைந்துபோன பலவற்றை -மக்கள்
அலைந்து தேடும் அவலங்கள் கேளு

விதவித வாகன வருகை -எங்கும்
விபத்துக்கள் கூடி விழிமூடும் பலபேர்
செருக்குடன் வாதாடும் சிலபேர் - இதை
சிந்தித்தால் வருகிறது வாழ்க்கையில் வெறுப்பு

நல்லதோர் சூழல் இங்குண்டு - இதை
நம்பி வாழ்க்கை நடத்துபவர் கண்டு
வெல்ல வழி தேடிக்கொண்டு - உடன்
விவேகத்தை வாழ்க்கையில் கடைப்பிடி இன்று.

# நாகரீக நாட்டு நடப்பு

கு.பேகா
13 கலைப்பிரிவு
மட்/கொக்கட்டிச்சோலை
இ.கி.மி.வித்.



தற்காலம் பார்க்கையிலே தவறுகள் பல உண்டு
பள்ளிக்குச் சென்றவன் பாடசாலை உடையோடு
பள்ளி மதில் பாய்ந்தேறி
புகைப்பதற்குத் தேனீரக்கடை செல்கின்றான்

இன்றைய இளைஞர்களுக்கு
வார இறுதி வந்துவிட்டால்
வனங்கள் தேடி வானவராய்ப் போகின்றனர்
மது அருந்தி வருகின்றனர்

வயதோ பதினாறு பள்ளிக்குச் செல்லும் சிறுமி
வயிற்றில் குழந்தையோடு
தன் தோழி பள்ளிக்குச் செல்கையிலே
மனதிலே வலியுடன் கண்கலங்கி நிற்கின்றாள்

வாழ்ந்து கெட்ட பெற்றோரும்
தன் மகள் வாழ்க்கையை நினைக்கவில்லை
தாங்கள் சுகமாய் இருக்க வயது குறைந்தாலும்
தன் மகளை மணம்முடித்து வைத்தனரே

வீடு வேலைகள் பல இருக்க
மன வேதனை நூறு இருக்க
மணியோ ஆறாச்சி டி.வி முன் இருந்தாச்சி
ஐயோ! எம் வீடு இல்லத்தாள் நிலை இதுதானே

நாகரிகம் என்பர் சோசலிசம் என்பர்
குட்டைப்பாவாடை குதியுயர்ந்த பாதணி
நாலு பேர் பார்க்கையிலே தலை முடி வெட்டிவிட்டு
நளினத்துடன் செல்கின்றனர் இக்காலப் பெண்களுமே

உதட்டுக்குச் சாயம் என்பார்
இரவுக்கு நைட் கிறீம் என்பார்
முகத்துக்குப் பேசியல் என்பார்
ஐயோ! இவள் அழகை இவள்தானோ கெடுத்துவிட்டாள்

ஐயோ! கடவுளே!
இந்த நிலை எப்போது மாறுமோ?
எனக்குத் தெரியவில்லை நீ அறிந்தால்
எனக்குச் சொல்லி விடு
நானும் மனதில் நிம்மதி கொள்கிறேன்.



# மட்டக்களப்பு தமிழகத்தின் பாரம்பரிய கொம்பு விளையாட்டுக் கலை

நாகமணி . சுவாசினி
பிரதேச செயலகம்
ம.தெ.மே.

"மட்டக்களப்பு தமிழகம் சமூக விஞ்ஞான மானிடவியல் ஆய்வாளர்களின் சுவர்க்கம்" என்று பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் கூறியுள்ளார். பண்டைய மட்டக்களப்பு தமிழகம் என்பது இலங்கையின் கிழக்கு, தென்கிழக்கு 35 மைல் நீளமான கடற்கரையையும், இலங்கையின் மொத்தப் பரப்பளவில் பத்திலொரு பங்கையும் கொண்டிருந்தது.

மனித சமூகம் கூட்டாக வாழத் தொடங்குவதற்கு முன்பே விளையாட்டுக்கள் செல்வாக்கு பெற்றிருந்ததாக மானிடவியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். பண்டைய மட்டக்களப்பு இலங்கையின் நெற்களஞ்சியம் எனப் பாராட்டப்படும் அளவிற்கு அங்கு விவசாயம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. விவசாயத்தில் ஈடுபடாத கோடை காலங்களில் பாரம்பரிய விளையாட்டுக்கள் பல பெரிதும் விளையாடப்பட்டதாக அறிய முடிகின்றது. இங்குள்ள பாராம்பரிய விளையாட்டுக்களில் பல தனித்துவங்கள் காணப்படுவதை ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். இன்று பூகோளமயமாக்கலால் எல்லாம் குழம்பிக் கிடந்தாலும், பாரம்பரியம் பேணலும் மட்டக்களப்பில் ஒரு சாராரிடம் காணக் கூடியதாக இருப்பது சிறப்பம்சமாகும். விவசாயத்தில் ஈடுபடாத கோடை காலங்களில் மாலை நேரமானால் பரந்து விரிந்த வெளிகளில் ஆண்கள் வார் அடித்தல், வலைப்பந்து, தட்டிக்கோடு, ஆடும்புலியும் முதலான விளையாட்டுக்களில் ஈடுபட கிராமத்து தெருக்களில் கிட்டி, கிட்டிப்புள், மாங்கொட்டை பாக்கு, முந்திரியங் கொட்டை, பிள்ளையார் கட்டை முதலிய விளையாட்டுக்களிலும் தமது நேரத்தை ஆரோக்கியத்துடன் செலவிட்டனர்.

வீட்டில் இருக்கும் இளம் பெண்கள் மொச்சை, கண்ணாம் பொத்தி, கீச்சுமாச்சுத் தம்பலம் என்பனவும் இவற்றுடன் வீட்டு விறாந்தையில் நாயும் புலியும், தாயம் முதலிய விளையாட்டுக்களை விளையாடினர். இதில் சில விளையாட்டுக்களை ஆண், பெண் இருசாராரும் விளையாடினர். இவற்றைவிட நிலாக் காலங்களில் வீட்டு முற்றத்தில் ஆண், பெண் என்ற வித்தியாசமின்றி ஆடுமறித்தல்,

சுரக்காய் இழுத்தல், கள்ளன் பொலிஸ், வட்டக்காவடி முதலிய விளையாட்டுக்களை விளையாடியதாக அறிய முடிகின்றது.

ஒருசாரார் இவ்வாறான சிறு விளையாட்டுக்களில் தமது மேலதிக நேரத்தை மகிழ்ச்சியுடனும், ஆரோக்கியத் துடனும், ஆளுமைப்பண்புகளை வளர்த் தெடுக்கும் சம காலத்தில் இன்னொரு சாரார் பாரம்பரிய விளையாட்டுக்களான கொம்பு விளையாட்டு, விலைக்கு மாடு கட்டுதல், போரத்தேங்காய் உடைத்தல் மற்றும் மட்டக்களப் பின் தேசிய நடனமாகிய வசந்தன் கூத்து, முதலியவற்றிலும் ஈடுபட்டதாக கலாசூரி வெ.விநாயகமூர்த்தி அவர்கள் குறிப்பிடுகின்றார். இந்த வகையில் கொம்பு விளையாட்டுப் பற்றி நோக்கும் போது இது கண்ணகி அம்மன் விளையாட்டுடன் இணைந்ததாகவே நடத்தப்பட்டதென ஆர்வலர்கள் கருதுகின்றனர். மட்டக்களப்பு மாநிலம், கண்ணகை வழிபாட்டில் பிரபல்யம் வாய்ந்ததாக இன்றும் காணப்படுகின்றது.

கண்ணகி அம்மன் சடங்கு நடைபெறும் கோடை காலமாகிய வைகாசி மாதத்திலே அதிக பிரதேசங்களில் கொம்பு முறி விளையாட்டு நடந்ததாக அறிய முடிகின்றது. கோவலனை நீதி தவறி கொலை செய்வித்த பாண்டிய மன்னனை பழி வாங்கியும், மதுரை மாநகரை எரியூட்டியும் கோபம் தணியாத கற்புக்கரசி கண்ணகியின் சினத்தைத் தணித்து அவளை குளிர்விப்பதற்கு இடையுலக இளைஞர் ஒரு காதல் கலந்த விளையாட்டாக இக்கொம்பு விளையாட்டைச் செய்தனர் எனக் கூறப்படுகின்றது. பண்டைய மட்டக்களப்பின் பாணமை, தம்பிலுவில், காரைதீவு, மண்டூர், களுதாவளை, தேற்றாத்தீவு, மகிழடித்தீவு, முதலைக்குடா, முனைக்காடு, கொக்கட்டிச் சோலை, வந்தாறு மூலை, சித்தாண்டி முதலிய இடங்களிலும், இக்கொம்பு வியைாட்டு பிரபல்யம் பெற்றதாக அறிய முடிகின்றது. இதற்கு ஆதாரமாக தம்பிலுவில், களுதாவளை ஆகிய இடங்களிலும் இன்னும் கொம்புச்சந்தி எனும் பெயரில் ஓர் இடம் உள்ளமையைக் குறிப்பிடலாம்.

கிராமத்திலுள்ள மக்களுக்கு ஏற்படும் அம்மை, சின்னமுத்து, வைசூரி கண்நோய் முதலான கொடிய நோய்களிலிருந்து சுகவாழ்க்கை ஏற்பட்டு வெம்மை தணித்து மழை வளமும் செல்வமும் ஏற்பட வேண்டுமென்பதற்காக இவ்விளையாட்டை மக்கள் கண்ணகை வழிபாட்டுடன் சேர்த்து செய்கின்றனர். பத்தினி வழிபாட்டுடன் இணைந்ததாக சிங்களமக்களும் கொம்பு விளையாட்டு விளையாடியதாக "அம்புவத" எனும் காவியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொம்பு விளையாட்டு ஒரு கிராமத்தில் தொடங்குவதற்கு முன்னர் அக்கிராம மக்கள் இரு சேரிகளாகப் பிரிவர். இதனை வடசேரி தென்சேரி என அழைப்பர். வடசேரி, கோவலனுடைய கட்சி என்றும் (சுவாமி கட்சி) தென்சேரி கண்ணகியினுடைய கட்சி (அம்மன்காட்சி) என்றும் கூறுவர். தமது பிரதேசத்தில் குடியேறியவர்களில் தந்தை வழியில் சேரி (வாரம்) பிரிந்து கொள்கின்றனர். தந்தை தென்சேரியாக இருந்தால் மகனும் தென்சேரியாக இருப்பார். இங்கு ஏற்கனவே வாழ்ந்தவர்கள் மச்சான் முறையை உடையவர்கள் மாற்றுச் சேரியில் இணைந்தனர். இதனால் ஒரு குடும்பத்தில் தந்தையும், பிள்ளையும், ஒரு சேரியாக இருக்க தாய் மாற்றுச்சேரியில் இருப்பது தவிர்க்க முடியாததாகின்றது. தந்தை வழியே இந்த சேரிப்பிரிவில் பிரதானப்படுத் தப்பட்டுள்ளமை மட்டக்களப்பு தமிழகத்தின் தாய்வழி பாரம்பரியத்திற்கு மாறாக உள்ளமையை மானிடவியல், சமூகவியல், கல்வியலாளர்கள் கவனம் செலுத்த வேண்டிய தொன்றாகின்றது.

இவ்விளையாட்டிற்கான கொம்புகள் கரையாகு மரத்திலே பெறப்படுகின்றது. இது இல்லாதபோது வின்னை, விடத்தல் கோணிப்பூறி ஆகிய மரங்களும் உகந்தவையாகவே கொள்ளப்படுகின்றது. இக்கொம்புகள் மரங்களிலிருந்தும், வேர்களிலிருந்தும், மரமும், வேரும் இணைந்தவையாகவே வெட்டியெடுப்பர். கொம்பு விளையாட்டில் அக்கறை உள்ளோர். இவற்றை பொட்டகங்களிலும், நெற்பட்டடைகளிலும் கவனமாக பாதுகாத்து வைத்ததாகவும் அறிய முடிகின்றது.

மட்டக்களப்பு தமிழகத்தில் பாரம்பரிய கொம்பு விளையாட்டுக்கலை ஊர்மக்கள் தீர்மானித்த நாளில் ஆரம்பமாகும்.

**கொம்பு விளையாட்டின் படிமுறைகள்:-**

1. கொம்பு நேர்தல்.
2. கொம்புகளை தெரிவு செய்தலும் அதன் சம அளவை பேணலும்.
3. போர்த் தேங்காய் உடைத்தல்.
4. இரு சேரியாரும் ரடகம் (தேர்) அமைத்தல்.
5. இரு பகுதியினரும் ஊர்வலம் வருதல்.
6. சேரி அல்லது வாரம் பிரித்தல்.
7. கொம்பு வரிதல்.
8. கொம்பு எழுந்தருளி வருதலும் சபைக்கு காட்டலும்
9. கொம்பு பூட்டுதல் ஆடை கட்டுதல் கடைக்கால் கயிறு இடல்.
10. செவ்வாய்க்குற்றி நடல், வடம் கட்டல். கொம்பு தாய் மரத்திலும், செவ்வாய்
11. குற்றியிலும் பிணைக்கப்புடல்.
12. கொம்பு முறியும் வரை இழுத்தல்.
13. வசைபாடல்
14. அம்மனுக்கு வெற்றி சொல்லலும் பால் பொங்கலும்
15. திருக்குளிர்த்தி பாடலும் விழா முடிவுறு தலும்.

முதல் தினத்தில் இரு சேரியினரதும் பிரதிநிதிகள் எதிர் எதிரே தேங்காயை உருட்டி அனுப்புவதன் மூலம் தேங்காயை உடைப்பர். அந்த அணியினர் எதிரணியின் கூடியளவான தேங்காயை உடைக்கின்றார்களோ அந்த அணியே வெற்றி பெற்றதாக கருதுவர். இதற்கு பெரும்பாலும் சிறுவர்களையே பயன்படுத்துவர். போர்தேங்காய் உடைகும் மரபு யாழ்ப்பாணத்திலும் இருந்ததாக "நனவிடை தோய்தல்" எனும் நூலின் மூலம் அறிய முடிகின்றது. இவ்வாறே சிங்கள மக்களும் போர்த்தேங்காய் உடைத்தலை "பொல் கெலிய" என அழைத்ததாக குருநாகல் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட ஏட்டுப் பிரதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. போர்த் தேங்காய் உடைத்தலை தொடர்ந்து முதலில் குறிக்கப்படும் கொம்பு விளையாட்டு கொழுகொம்பு என அழைக்கப்படுகின்றது. இதில் அம்மனின் கட்சியை வெற்றி பெற வைப்பது மரபாக உள்ளது.

அதைத் தொடர்ந்து கூடாரக் கொம்பு எனும் கடல்வகை நிகழ்ச்சிகள் இடம் பெறும். வடசேரியான் கொம்பு செங்கோணத் திலும், தென்சேரியான் கொம்பு செங்கோணத் திலும் சற்று ஒருங்கியதாகவும் கூர்கோணத் திலும் இருப்பது மரபு. இரண்டாவது நாளில் கொம்புமுறித்தல் போட்டி மனப்பாங்கில் விட்டுக் கொடுப்புகள் இன்றி சுவாரஷ்யமாக இடம்பெறும் இருசேரி கொம்புக்களையும் அணைத்துக் கட்டப்படும் கொம்புகள் "பில்லி" எனப்படும். பில்லி கட்டப்பட்ட கொம்பே விளையாட்டுக்கு தகுதியான கொம்பாகக் கணிக்கப்படும்.

ஒரு மரத்தில் பூட்டிய அரிப்பு (சிறுவட்டம்) எனப்படுவதான கயிற்றில் தென்சேரியின் கொம்பு தொடுக்கப்படும். அக்கொம்பில் கொழுவிய வடசேரி கொம்பிலே இன்னுமொரு அரிப்பினை பிணைத்து அதிலே பெரிய வடமொன்றை மாட்டுவர். அவ் வடத்தைப் பிடித்து பலபேர் இழுக்கும்போது இருசேரியையும் சேர்ந்த திறமையானவர்கள் சிலர் தத்தம் கொம்பு களில் பல்வாய் (கொம்பின் தலைப்பகுதி), குச்சி (கொம்பின் வளைந்த இடத்திற்கு நடு ஆணி), முதுகுமரம் (கொப்பின் தலைப்பகுதி), பில்லி, கொம்பின் இருபுறமும் அணையக கட்டிய தடிகள் எனும் உறுப்புக்களை யெல்லாம் முறைப்படி பிடித்துக் கொள்வர். அரிப்பிற் பிணைந்த பெருவட்டத்தினை இருசேரிப் பொதுமக்களும் இழுப்பர். அப்பலருடைய இழுவைப் பொறுப்பினால் இரண்டில் ஒரு கொம்பு முறியும். உடனே வெற்றியீட்டிய பிரிவினர் தமது சேரியின் (வாரத்தின்) பெயரை சொல்லி வெற்றி என்று கூறி ஆடிப்பாடி ஆனந்தமடைவர்.

கொம்பு முறிக்கப்பட்ட பின்னரே மிகவும் சிறப்பான முறையில் பல நிகழ்வுகள் இடம்பெறும். வடசேரி, தென்சேரி ஆகிய இரு கட்சிகளும் அலங்கரிக்கப்பட்ட பூம்பந்தல்களில் தத்தம் கொம்புகளை வைத்து ஊர்வலமாக எடுத்துச் செல்வர். இவ்வேளை அலங்கரிக்கப்பட்ட கண்ணகியம்மன் சிலை

யும் ஊர்வலமாக எடுத்து செல்லப்படும். இச்சந்தர்ப்பத்தில் கண்ணகி அம்மன் காவியம், ஊர்சுற்றுக்காவியம், உடுக்குச் சிந்து என்பன பாடப்படுவது தெய்வீக உணர்வை ஏற்படுத்தும் இதனோடு மகிழ்ச்சியூட்டக் கூடியவகையில் வேடர், குறவர், போர்வீரர் போன்ற வினோத உடைகளிலும் சென்று மக்களை மகிழ்விப்பர், இளைஞர்கள் வசந்தன் கூத்தாடியும், மங்கையர் குரவையிட்டும், கும்மியடித்தும் தமது திறமைகளை வெளிப்படுத்தவர்.

ஊர்வலமாகச் செல்லும் வேளையில் வெற்றி பெற்றவர், தோற்பவரை பற்றி வசை பாடுவதாக அமைந்த பாடல்களைப் பாடுவர் இந்தப் பாடல்கள் ஓசைநயமும், பொருட்சுவையும், கொண்டதாகவும் கருத்தாளம் மிக்கதாகவும் இருந்ததாக பேராசிரியர் சு.வித்தியானந்தன் தமது நாட்டார் பாடல் தொகுப்பில் குறிப்பிட்டுள்ளார்.

"வடசேரியான் கொம்பு எங்கே எங்கே,
மணமுள்ள தாழையின் மேலே மேலே

என வடசேரியார் தனது கொம்பின் மகிமையைப் பற்றிப் பாட தென்சேரியாரோ,

"தென்சேரியான் கொம்பு எங்கே எங்கே
சித்திர தேருக்கு மேலே மேலே"

எனப்பாடுவதையும் காணமுடியும். இவ்வாறான நாலடிப் பாடல்கள் 20 இருந்ததாக பேராசிரியர் சு. வித்தியானந்தன் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு இரவு மழுவதும் ஆடல், பாடல்கள், கலைநிகழ்வுகள் என்பன இடம்பெற்று மறுநாள் காலையில் கண்ணகை அம்மனுக்கு

"ஒரு மா பத்தினி வந்தாள்
உலகேழம் தலையிட வந்தாள் வந்தாள்
என்றும்
தாயே குளிர்ந்தருள்வாய்"

என்று திருக்குளிர்த்தி பாடி கொம்பு விளையாட்டை நிறைவு செய்து, மக்கள் போட்டியை மறந்து மீண்டும் ஒற்றுமையாகவும் சந்தோசமாகவும் தெய்வீக உணர்வுடனும் கொம்பு விளையாட்டினை விளையாடி மகிழ்வது பண்டைய மட்டக்களப்பு இந்துக்களின் கலாசாரமாக இருந்தது. இப்போது, மருவி போய்க் கொண்டிருக்கும் இப்பாரம்பரிய விளையாட்டை காப்பாற்ற வேண்டியது ஆர்வலர்களின் தார்மீகப் பொறுப்பாகும்.

❋ சண்டைக்கு இருவர் தேவை. நீங்கள் அவ்விருவரில் ஒருவராக இருக்காதீர்கள். (ஆவ்பரி)

❋ மன அமைதியோடு இருப்பவனுக்கு என்றும் ஆபத்து இல்லை. (லாவோட்சே)



# பட்டிப்பளைப் பிரதேசத்தில் மருவிச் செல்லும் கூத்துக்கலையும் இதை உயிர்பிக்கும் இளைஞர் சமூகமும்.

வயிரமுத்து. துசாந்தன்
முனைக்காடு

மீன்பாடும் தேனாடு என்று புகழ் பாடும் மட்டக்களப்பு தனில் மண் முனையை மையமாக வைத்து உலக நாச்சி ஆட்சிபுரிந்த தேசமும் வெள்ளையரை துரத்தியடித்த சுயம்பு லிங்கம் வீற்றிருக்கும் தலமும் செம் மொழி பேசி மகிழ்கின்ற சமூகமும் செந்நெல் செழித்து கதிர் பரப்பி காட்சி தரும் இடமும் கொண்ட பிரதேசம் பட்டிப்பளை பிரதேசம்.

நவீனத்துவ மோகத்தினால் பாரம்பரியங்களும் இறை நம்பிக்கைகளும் சீரழிந்து நித்திரை விட்டெழுந்தவுடனே கையிலேயே கையடக்கத் தொலைபேசியும் கண்முன்னே தொலைக்காட்சியும், கணனியும் தோன்றுகின்ற இக்காலகட்டத்தில் பாரம் பரியங்கள் காப்பாற்றப்பட வேண்டும். அது எம் சொத்து என்ற எண்ணம் கொண்டு செயற்படுகின்ற சிறந்த இளைஞர் சமுதாயமும் எமது பிரதேசத்தில் இருக்கின்றமை கண்டு மன மகிழ்ந்து, இவர்கள் எமது பிரதேசத்தில் உள்ள கூத்துக்கலையை வளர்ப்பதில் கொண்டுள்ள ஈடுபாடு பற்றி கூற வேண்டிய தேவையின் அடிப்படையில் அதைக் கூறமுற்படுகின்றேன்.

கூத்து என்பது “குதி” என்ற சொல்லில் இருந்து தோற்றம் பெற்றது எனக் கூறப்படுகின்றது. பாரம்பரிய கலைவடிவில் ஒன்றாகவும் காணப்படுகிறது. அதாவது ஆட்கள் வேடமிட்டு ஒரு கதையை ஆடல், பாடல் மூலமாக நிகழ்த்திக் காட்டுவது.

இது எமது பிரதேசத்தில் வசந்தன் கூத்து, வடமோடி கூத்து, தென்மோடி கூத்து, என்று அன்று தொட்டு இன்றுவரை இதனை பிரிந்து அதற்கேற்ற ஆட்ட முறைகளுக்கு ஏற்ப கூத்தினை ஆடுகின்ற வழக்கமும் எம்மவரிடையே உண்டு. எமது பிரதேச மக்கள் விவசாயத்தையே நம்பி வாழ்கின்றவர்கள், அவர்களது தொழில் இதுவே. இதனால் தங்களுக்கு அதிக நேரம் ஓய்வு கிடைக்கின்றது. இவ் ஓய்வு நேரங்களில் கூத்தினை ஆடி அரங்கேற்றி மகிழ்வது வழக்கம். கூத்துக்கள் புராணக் கதைகளையும், இதிகாசக் கதைகளையும் உள்ளடக்கியதாக அமையப் பெற்றிருப்பதால் இதனை மக்கள் கேட்பதில், பார்ப்பதில் ஆர்வத்துடன் ஈடுபட்டனர்.

ஆனால் தற்காலத்தில் ஏற்பட்டு இருக்கின்ற நவீன மோகத்தின் காரணமாக இதனது தாற்பரியம் குறைவடைந்து செல்கின்றமை மனவேதனையாக இருக்கின்றது. எமது பட்டிப்பளைப் பிரதேசத்தில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் குறிப்பாக 2007-2011 வரையான காலப்பகுதியில் கூத்து எடுப்பது என்பது மிகவும் கஷ்டமான ஒன்றாகக் காணப்பட்டது.

இருந்தபோதிலும் 2012ம் ஆண்டிலும் தற்போது 2013ம் ஆண்டிலும் எமது பிரதேசத்திலுள்ள அமைப்புக்களினது ஆர்வத்தின் பாலும் இளைஞர்களது கடின உழைப்பின் பாலும் தற்போது பிரதேசத்தில் பல இடங்களில் கூத்து உயிர்பெற்று வருகின்றமையை காணக் கூடியதாக உள்ளது. இதை பாராட்ட வேண்டிய தேவையும் எமக்கு உள்ளது. அந்தவகையில் சில அமைப்புக்கள் தங்களால் கூத்தினை ஆடமுடியாமல் விட்டாலும் ஆடுகின்ற கலைஞர்களை பாராட்ட வேண்டும் என்ற நோக்கங்கொண்டு போட்டிகளை நடாத்தி போட்டியில் பங்கேற்ற கலைஞர்களை கௌரவிக்கும் பணியிலும்

ஈடுபட்டுள்ளமை மிகவும் வரவேற்கத்தக்கது. குறிப்பாக பட்டிப்பளைப் பிரதேச கலாசாரப் பேரவை தங்களது கலாசார நிகழ்வை முன்னிட்டு கூத்துப் போட்டிகளை நடாத்தி அதில் வெற்றி பெறுபவர்களை கௌரவித்து வருகின்றனர். அந்த வகையில் சென்ற வருடம் வசந்தன் கூத்து இடம்பெற்றது. இதில் பாடசாலைகளுக்கிடையிலான போட்டியில் மகிழடித்தீவு சரஸ்வதி வித்தியாலய மாணவர்கள் வெற்றி பெற்றதுடன் திறந்த பிரிவில் நாகசக்தி கலை மன்றம் வெற்றி பெற்றது. அதுபோல வட மோடிக் கூத்தில் நாகசக்தி கலைமன்றம் 1ம் இடத்தினையும் வல்லிபுரம் கலைக்குழு 2ம் இடத்தினையும் பெற்றிருந்தது. இங்கு குறிப்பிடத்தக்க ஒரு விடயம் என்னவென்றால் கூத்துக்களில் ஈடுபட்டவர்களில் அநேகமானவர்கள் சிறுவர்களும் இளைஞர்களுமே ஆகும்.

அது போல இவ்வருடம் நடைபெற்ற பட்டிப்பளை பிரதேச கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியத்தின் மண்கமழும் மங்கல விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட கூத்துப் போட்டியில் மூன்று கலைக் குழுக்கள் பங்கேற்றிருந்தனர். அவை முனைக்காடு நாகசக்தி கலைமன்றம் நல்ல தங்காள் சரித்திரமும் அதுபோல மகிழடித்தீவு வல்லிபுரம் கலைக்குழுவினர் குயலவன் நாடகமும், கரவெட்டிக்கலை குழுவினர் அருச்சுனன் தபசு கூத்தினையும் ஆடி இருந்தனர். இப் போட்டியில் முதல் இடத்தை நல்ல தங்காள் சரித்திரம் என்ற கூத்து பெற்றிருந்தது இதில் பங்கேற்றிருந்த கலைஞர்கள் அனைவருமே இளைஞர்களும், சிறுவர்களுமே இவர்களது ஆட்ட முறைகள் மிக சிறப்பாக இருந்ததுடன் இதனை அனைவரும் ஆர்வர்த்துடன் பார்த்ததுடன் அழுதவர்களும் உள்ளனர்.

அதுபோல வல்லிபுரம் கலைக் குழுவினரின் குயலவன் நாடகக் கூத்து மிக சிறப்பான ஒன்று என்பதோடு இதில் ஆடிய கலைஞர்கள், முதியோர்களாவே காணப்பட்டனர். அதுபோல அருச்சுனன் தபசு எனும் நாடகத்தில் பங்கேற்று இருந்த கலைஞர்கள் பெரியவர்களும், இளைஞர்களும் ஆகும்.

இங்கு குறிப்பாக பார்க்கின்ற வேளை கூடுதலாக பங்கேற்றிருந்த கலைஞர்கள், இளைஞர்களாகவே காணப்பட்டமை கூத்துக் கலைக்கு கிடைத்த வெற்றி எனலாம். இங்கு இடம் பெற்றிருந்த கூத்தானது எல்லோரதும் மனதையும் பற்றிக் கொண்டது என்பதுடன் இளைஞர்களது ஆர்வத்தினாலும் அல்லது கடின உழைப்பினாலும் எமது பிரதேசத்தில் பல கூத்துக்கள் ஆடப்பட்டுக் கொண்டிருக்கின்றது. குறிப்பாக அரசடித்தீவில் "துரோணர் வில்வித்தை" என்கின்ற வடமோடி கூத்தும் பண்டாரியாவெளியில் "வள்ளி திருமணம் நாடகம்" தென்மோடிக்கூத்தும் முனைக்காட்டில் அலங்காரரூபன் எனும் தென்மோடிக்கூத்தும், உலகநாச்சி வடமோடிக் கூத்தும் மகிழடித்தீவில் குயலவன் நாடகம் வடமோடி கூத்தும் ஆடப்பட்டுக் கொண்டிருக்கின்றமை மிகவும் போற்றுதற்குரியதும் எமது பிரதேசத்திற்கு கிடைத்திருக்கும் வெற்றியுமே. அத்துடன் பண்டாரியாவெளியில் பழக்கப்பட்ட நொண்டி நாடகம் கூத்தானது இன்று 18க்கு மேற்பட்ட களரிகளிலும் ஆடி அனைவரது வரவேற்பைப் பெற்றிருக்கின்றமை குறிப்பிடத்தக்கதுடன் அதில் கொண்ட ஆர்வத்தின் பயனாக தற்போது வள்ளி திருமணம் இவ்வருடம் பழகிக் கொண்டிருக்கின்றனர். இவ் கூத்துக்களில் ஆடுகின்ற கலைஞர்கள் அதிகமானவர்கள் இளைஞர்களாகவே உள்ளமையுடன் இதனை ஆடவேண்டும் என்று உத்வேகம் கொண்ட கடின உழைப்பால் வெற்றி கொண்டிருக்கின்றவர்களும் இளைஞர்களே. எமக்கு உரித்தான பாரம்பரிய கலைகளை வளர்த்தெடுக்க வேண்டும் என்று இன்றைய காலகட்டத்தில் இளைஞர்கள் கொண்டு உள்ள ஆர்வம் மிகவும் வரவேற்கதக்க ஒன்று என்பதுடன் இவர்கள் தொடர்ந்தும் இதில் ஈடுபாடுகளை வைக்க நாம் அனைவரும் துணைபுரிய வேண்டும்.

பல இளைஞர்களது ஆதங்கமாக இருகின்ற விடயம் தங்களுக்கு கலையை வளர்த்தெடுக்க வேண்டும் என்ற ஆர்வமும் அதற்கான கலைஞர்களும் இருக்கின்ற போதிலும் அதனை தொடர்ந்து கொண்டு செல்வதற்குரிய நிதிப்பற்றாக்குறை மற்றும் அதற்குரிய வாத்தியக்கருவிகள் இல்லாமையினாலும் அதனை முன்னெடுப்பதில் பின்வாங்கி செல்கின்ற நிலைமையும் காணப்படுகின்றது. எனவே இளைஞர்கள் சமுதாயப் பாரம்பரியத்தைக் கட்டிக்காக்க வேண்டும் என்ற நோக்கம் கொண்டு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். அவர்களது பிரச்சினையைத் தீர்த்து அவர்களுடன் இணைந்து செயற்படுவதன் மூலம் இளைஞர் சக்தி இமயம்வரை செல்லும் என்பதை கலையின் வெளிப்பாட்டின் மூலம் நிரூபித்துக் காட்ட முடியும்.



# இப்படியும் ஓர் இடைவிலகல்

க.சிவகுருநாதன்
முதலைக்குடா

ஊக்கத்தோடு நானும்
ஓராம் கிளாசில் சேர்ந்து
கற்கும் ஏக்கத்தோடு – என்
கனவைத் தொடங்கிவிட்டேன்

இப்பகுதி மக்களெல்லாம்
இங்கிலீசுப் பள்ளி என்று அப்பருந்து
சொல்லி வரும்
அழகான பள்ளியிலே
கல்விப் பயிர் வளர்ந்து
என்னைக் கரையேற்ற – பல
ஆசான்கள்
எழுந்து வருவார்கள்
ஏழரை மணிக்கு முன்பு

படிப்பிலே நான் கெட்டிக்காரன்
பலரும் சொல்லுவார்கள்
நடிப்பிலயும் என்னைப்போல
யாரும் நடிக்கமாட்டார்
ஆண்டுக்கோர் படியேறி
தாண்டிட்டே தரம் பத்தை
படிப்பெண்டா கசப்பெண்டு
பல நண்பர் சொன்னாலும்
முடிப்பண்டா என்று நானும்
முழுமூச்சாப் படிச்சு வந்தன்

பள்ளி நேரம் விட்டு
துள்ளி வீடு வந்தால்
சொல்லி அழுதபடி - அம்மா
அப்பாவின் தொல்லைகளை
அள்ளி விதைத்திடுவாள்
காலையிலே எழுந்து
காப்பி கேட்கக் கொடுத்தேன்
காப்பியா? இது காப்பியென்று
கத்தினாரு மனிசனும்தான்

உனக்கென்ன தெரியுமப்பா
நீ பள்ளிக்குப் போன பின்பு
படுக்கையை விட்டு எழும்புவாரு
குடிக்காட்டி முகம் விடியா
எட்டரைக்கு வெளிக்கிட்டா
பன்ரெண்டரைக்கு வந்து
பகல் சோறு கேட்கிறாரு

ஒருமணிக்கு மீண்டும்
உதவாக்களோட கூடி
ஓயாமல் குடிச்சிட்டு
ஊரெல்லாம் திரியிறாரு
பொறுப்பொன்றும் விளங்காத
பொல்லாத மனிசனிந்தாள்
என்று அம்மாவின் குமிறல்கள்
நில்லாது தொடர்ந்து செல்லும்

இடையிடையே
இதற்கெல்லாம் பதிலடியா
நீ படிச்சி உத்தியோகம்
எடுத்திடனும் என்ற
உள்ளக் குமுறலையும்
உரைத்தபடி வாப்பா
சாப்பிட என்றழைப்பாள்

எப்படிச் சோறிறங்கும்
இப்படி ஏன் செய்கிறீர்கள்
என்று சற்றுக் கேட்போம் என்று
இரவு நேரம் காத்திருந்தால்
போதை தலைக்கேறி

பொல்லாத குணத்தோடு
வாடி கதவைத்திற எனக் கூறி
தள்ளாடி வருபவர்க்கு
எதைச் சொல்லிப் புரிய வைப்பேன்

அப்பாவின் இச் செயற்பாட்டால்
உப்போடு கூட உண்பதற்கு உணவில்லை
சனிக்கிழமையில் சந்தையில்
வியாபாரம் செய்பவர்க்கு
உரக்கக் கூப்பிடும் உதவியாய்
நானிருப்பேன்
முடிவில் சில மரக்கறி வகையும்
முந்நூறுரூபாய்ப் பணமும்
கிடைத்ததால்
உழைப்பில் ஒரு வகை ஊக்கம்

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை
நாலாம் சந்தியில் நின்று
வேலைக்கு வரவா என்று
விரும்பி நான் கேட்டால்
ஆளுக்கோர் கதை சொல்லி
அழைச்சித்துப் போவாங்க
பென்பிடித்த கரங்கள்
மரம்வெட்டி, மண்வெட்டி
நொந்தாலும்
அம்மாவின் துயர் எண்ணி
சும்மா நான் இருக்கல்ல

தொடர்ந்து
படிக்கத்தான் முடியல்ல
பாதியிலே விட்டிட்டன்
அப்பாவின் குடிப்பழக்கம்
அம்மாவின் கனவினையும்
என்னோட கனவினையும்
மண்ணோடு மண்ணாக்கி
மனம்நோக வச்சதுதான்.

# நானும் அகதி....



குணரெத்தினம் - உமாரமணன்
பிரதேச செயலகம்,
ம.தெ.மேற்கு,
பட்டிப்பளை.

நானும் அகதி
ஏன்?
கடந்த காலம் சொல்லும்
நான் நடந்து வந்த பாதை
அகதியென்று

படுவான்கரை சிந்திய
வியர்வைத்துளிகளின் மேல்
சவாரி செய்பவர்கள்
ஞாபகம் கொள்ளட்டும்
நானும் அகதியென்று

பட்டிருப்புப் பாலமும்
படகுத்துறைகளும் சொல்லும்
நானும் அகதியென்று

எழுவான் கரையில்
எழுந்த கொட்டில்களும்
முளைத்த நிறுவனங்களும்
சொல்லும்
நானும் அகதியென்று

படிப்பதற்குப் பள்ளியின்றி
பட்ட மரத்தின் கீழ்
படித்ததும் படுத்துறங்கிய
நினைவுகள் சொல்லும்
நானும் அகதியென்று

உண்ண உணவின்றி
உறங்க இடமின்றி
உச்சி வெயிலில்
அரிசிக்காய் அன்னக்காவடிகளாய்
நிறுவனங்களின் முன்
நிவாரணத்திற்கு நீண்ட வரிசையில்
நின்றந்த நாட்கள் சொல்லும்
நானும் அகதியென்று

கடந்த கால நினைவுகளைத் தொலைத்து
நிகழ்காலத்தை நிர்வாணமாக்கிய
என் நினைவுகள் சொல்லும்
நானும் அகதியென்று

பட்டப்பகலில் பச்சைக்கறியும்
இருளின் நடுவில் இரண்டு முடர் நீரும்
காலை நேரக் கடற்கரை முற்றுகையும்
மாலை நேர மஞ்சள் வெயிலும்
மறுக்காமல் சொல்லும்
நானும் அகதியென்று

நாளும் பொழுதும் நாலு முறை
நடந்த கையெழுத்து வேட்டை
நமக்கென்றொரு புதுமுகவரியும்
அடையாள அட்டையும்
அட்டகாசமான அதட்டல்களும்
அழுத்துச் சொல்லும்
நானும் அகதியென்று

கால்ப்படி அரிசிக்கும்
கால்போத்தல் எண்ணெய்க்கும்
கால்கடுக்க காத்து நின்றதை
கூசாமல் சொல்லும் கூப்பன் கடை
நானும் அகதியென்று

நொச்சி மரக்காலையும்
களுவாஞ்சிக்குடி காவல் நிலையமும்
கயிற்று நிரல்களும்
சாப்பாட்டுப் பார்சல்களும்
சத்தியம் செய்யும்
நானும் அகதியென்று

படுவான்கரை ஏற்றிய நெல்லும்
கறந்தனுப்பிய பாலும்
சுமந்த தயிரும்
சுட்ட வேட்டுக்களும்
சுவைத்த தேன் இறைச்சியும்
மழநிறையக் கட்டிய மீனும்
மறக்காமல் சொல்லும்
நானும் அகதியென்று

அன்று வியர்வை சிந்தி
வேளாண்மை விதைத்து
விண்ணவருக்குப் படைத்து
விடுதலை உணர்வுடன்
விரைந்த மண் சொல்லும்
நானும் அகதியென்று

பசுமை பொங்கிய வீரமண்
சருகாய் வெறும் எருவாய்
எனக்குச் சொன்னது
நீ வெறும் வேட்டோசைகளுக்கு
என்னை அகதியாக்கினாயே
அன்று நீ ஓடவில்லை
வரலாற்றில் என்னை
முதல் முறையாய்
என்னை அகதியாக்கினாயே
நீ அகதிதான் நீ அகதியேதான்
சொன்னது காதில்
சொல்லாமல் ஓர் செய்தி.





# மனித வாழ்க்கை விழுமியங்களில் நேரமுகாமைத்துவத்தைப் பேணுவதில் முன்னோர்களின் பங்கும் தற்கால நிலையும்

வே. மகேசரெத்தினம் J.P
அதிபர்(S.L.P.S.2-II, BA, PG, RE
மகிழடித்தீவு.

### - ஒரு சமூகவியல் பார்வை -

காலம் என்கிற களமும் அதைப் பற்றிய கருத்தோட்டமும் தொன்று தொட்டு மனிதகுலச் சிந்தனையை ஆக்கிரமித்து வந்திருக்கிறது. இதனால்தான் தொல்பழங் குடிகளின் முழுமுதற்கடவுளாக சூரியன் இருந்திருக்க வேண்டும். நாம் கூட இன்றும் சூரியனைப் போற்றுகின்றோம். நட்சேத்திரங் கள், கிரகங்கள் எந்த நேரத்தில் உதிக்கின்றன. எப்பொழுது ஒன்றை யொன்று மறைக்கின்றது, எப்போது கிரகங்கள் நேர்கோட்டில் வருகின்றன என்பது முதல் எப்போது பருவமழை ஆரம்பிக்கின்றது எப்போது கோடைகாலம், குளிர்காலம், வசந்தகாலங்கள் போன்ற செயல்கள் வரை எல்லாம் காலத்தின் அடிப்படையில்தான் நடைபெறுகின்றது என்பது பற்றி ஆதியில் மனிதன் அறிந்திருந்தான்.

## மனித வாழ்க்கை விழுமியங்கள்

மனிதன் என்பதன் பொருள் சிந்திப் பவன் என்பது பொருளாகும். விழுமியங்கள் என்பது மனிதன் மனிதனாக வாழ்வதற்கு உதவுகின்ற பெறுமதிமிக்க வாழ்க்கைப் பண்புகளே விழுமியங்கள் எனப்படும். ஆதலால் மனிதனின் பெறுமதி மிக்க வாழ்க் கைப் பண்புகளே மனிதவிழுமியங்கள் எனப்படும்.

மனித விழுமியங்களாவன பிற உயிர்கள் மீது அன்புகாட்டுதல், சேவை செய்தல், உண்மை பேசுதல், நேர்மையாக நடத்தல், துன்பம் செய்யாமை, பொதுச் சொத்துக்களை பாதுகாத்தல், மூத்தோரை மதித்தல், மனவடக்கம் இனியவை கூறல், சூழலைப் பேணுதல், பொதுச் சொத்துக்க

ளைப் பாதுகாத்தல், தானதருமம், நல்ல பழக்க வழக்கங்களைப் பேணுதல் போன்றவை களாகும். நல்ல பழக்க வழக்கங்களைப் பேணுவதில் நேரமுகாமைத்துவமம் ஒன்றாகும்.

## முன்னோர்களின் நேர முகாமைத்துவம்

இயற்கை அன்னையின் செயற்பாடு களுடன் பின்னிப்பிணைந்து ஒருங்கிணைந் ததாகக் காணப்படுவது நேரமாகும். இதற்கு உதாரணமாக அதிகாலையில் நித்திரை விட்டெழும்புவதைக் குறிப்பிடலாம். அதாவது அதிகாலையில் நித்திரை விட்டெ ழும்புவது நல்ல பழக்க வழக்கமாகும். எமது முன்னோர்கள் அதிகாலை நேரமாகி விட்டது என்பதனை அறிவதற்காக சாமக் கோழி கூவுதல், விடிவெள்ளி உதயமாகுதல், காகம் கரைதல், செம்பகம் கத்துதல் ஏனைய பறவையினங்களின் கூச்சல் போன்றவற்றி னூடாக துல்லியமாக முன்னோர்கள் நேரத்தை அறிந்து கூறுவார்கள். இவ்வாறு முன்னோர்கள் நேர முகாமைத்துவத்தைப் பேணுவதில் பங்களிப்புச் செய்தார்கள்.

முன்னோர்கள் பகலில் நேரத்தைக் கணிப்பீட்டு நடப்பதற்காக மரங்களின் நிழல், மனிதர்களின் நிழல், வீட்டுக்கூரை நிழல், பூவிரிதல் போன்றவற்றை அவதானித்து நேரத்தை மதித்து நடந்து கொண்டார்கள். இவ்வாறு முன்னோர்கள் கடிகாரம் இன்றி நேரத்தை கணிப்பீட்டு முகாமைத்துவம் செய்வதில் பங்களிப்புச் செய்தார்கள் முன்னோர்களின் நேரமுகாமைத்துவம் சிறப்பாக இருந்தமையினால்தான் வேலைக ளைச் சிறப்பாகச் செய்யமுடிந்தது.

## நேரம்

நொடி, நாழிகை, மணி, நாள், வாரம், மாதம், ஆண்டு என்பதெல்லாம் மனிதன் வகுத்த கணிதம்தான். ஒரு நாளில் 24 மணிநேரம் எல்லோருக்கும்தான். எனக்கு நேரம் இல்லை என்று கூறுவார்கள் நேரத்தை எப்படிப் பயன்படுத்துவது என்று தெரிந்து கொண்டால் அப்படிக் கூற மாட்டார்கள் "Time is Gold" அதாவது "நேரம் தங்கத்திற்கு சமமானது" என்பதனை முன்னோர்கள் கூறியுள்ளனர். இதன் காரணமாகத்தான் "பணத்தை இழந்தால் குறைந்த இழப்பு, நேரத்தை இழந்தால் எல்லாமே இழப்பு" என்று எமது முன்னோர்களால் ஆணித்தர மாகக் கூறப்பட்டுள்ளது.

தற்கால நவீன உலகில் "ஏழை" என்பதற்கு புதிய அறிமுகம் கொடுக்கப் படுகிறது. அது "எவன் ஒருவன் நேரத்தை வீணாகச் செலவு செய்கிறானோ அவனே ஏழை" ஆகும். இவ்வாறான நிலையில் எவ்வாறு நேரம் செலவாகிறது என்பதனை நோக்கும் போது அதற்கு இரண்டு காரணங்கள் கூறப்படுகின்றன. அவையாவன

1. தேவையான விடயங்களில் நேரத்தைப் பயன்படுத்தத் தெரியாமை
2. தேவையற்ற விடயங்களில் நேரத்தை அதிகம் செலவு செய்வது என்பதாகும்.

அத்துடன் பின்வரும் கருத்துக்களையும் நேரம் பற்றித் தெரிவிக்கலாம்

- ஓய்வு நேரத்தை கண்டு பிடிக்க முடியாத வர் நோய் உபாதைகளில் நேரத்தை இழந்து நிற்பர்.
- பொழுதுபோக்கு என்பது கால விரயம் அல்ல அது உடம்பையும், மனதையும் இளைப்பாற்ற உதவும்.
- நேர உணர்வு இல்லாதவர் பின்தங்க நேரிடும்.

தற்கால உலகில் நேரமில்லை, நேரமில்லை என்று யாரைக் கேட்டாலும் கூறுவார்கள். நேரமில்லாமல் போனது ஏன்? நேரத்தை திட்டமிடாததுதான் காரணமாகும். நேரத்தின் அருமையை உணர்ந்தவர் முன்னேற முடியும்.

## நேரத்தைத் திட்டமிடுவது எப்படி?

- எது உங்களுடைய பொறுப்பு எது உங்களுடைய பொறுப்பாகாது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.
- உங்களுடைய இலக்குப் பற்றி தெளிவாக இருங்கள்.

- எவற்றுக்கு முக்கியத்துவம் என்பதை இனங்காணுங்கள்.
- அன்றைக்கான காரியத்தை அறிந்து கொள்ளுங்கள்
- எது அவசரமானது எது முக்கியமானது என்பதைப் பிரித்தறியுங்கள்.

இவை உங்களுடைய நேரத்தைத் திட்டமிட உதவும். தற்கால நிலையில் மேற்குறிப்பிட்ட அம்சங்களைக் கருத்தில் கொண்டு நேரத்தைத் திட்டமிடல் வேண்டும்.

## நேரப்பங்கீடு

உலகத்தில் விலை மதிக்க முடியாதது நேரம்தான் ஒரு முறை இழந்தால் மீண்டும் பெற முடியாததும் நேரமாகவேதான் இருக்கும்.

ஆங்கிலக் கவிஞர் லாங்ஃபெலோ என்பவர்

கடந்து போன காலத்துக்காக
வருந்திப் புலம்பாதீர்கள்
அது மீண்டும் வருவதில்லை
கையில் இருப்பது
இன்றைய பொழுது
இதுவே உங்களுடையது
நிச்சயமற்றது என்றாலும்
அச்சமின்றி துணிவோடு
அணுகுங்கள் எதிர்காலத்தை.

என்று கூறியுள்ளார். ஆதலால் இக் கவிஞரின் கருத்தில் இருந்தும் தற்கால நிலையில் நேரத்தைப் பயன்படுத்துவது எம்மிடத்திலே தான் இருக்கின்றது என்பதனை நாம் தெளிவாக அறிந்து கொள்ள முடிகின்றது.

காலம் விலையற்றது என்பது போலவே இரக்கமற்றது என்றும் சொல்லலாம் அது யாருக்காகவும் காத்திருப்பதில்லை. நல்லபொழுதை எல்லாம் தூங்கிக்கிடந்தவர்களும், துர்ப்பிரயோகம் செய்தவர்களும் நாட்டைக் கெடுத்ததுடன் தானும் கெட்டனர்.

## தேவையற்ற விடயங்களில் நேரப் பயன்பாடு

உலகில் தற்கால நிலையில் தேவையற்ற விடயங்களான தொலைக்காட்சி, சினிமா, களியாட்டங்கள், கெட்ட நண்பர்களின் தொடர்பு, களவு, கடத்தல், சிறுவர் துஷ்பிரயோகம், புகைத்தல் பழக்கம், மேலதிக தூக்கம், கையடக்கத் தொலை பேசியினை தவறான முறையில் பயன்படுத்துதல் இவைபோன்ற தேவையற்ற விடயங்களைக் குறிப்பிடலாம். இவ்வாறான தேவையற்ற விடயங்களில் நேரப்பயன்பாடு வீணாகச் செலவாகின்றது. தற்கால நிலையில் குறிப்பாக ஒரு சில இளைஞர், யுவதிகளே தேவையற்ற விடயங்களில் நேரத்தை வீண் விரயம் செய்கின்றனர் என்றே கூறலாம்.

## நேரத்தைத் திட்டமிடுதல் அவசியம்.

நேரம் மிகவும் பெறுமதிவாய்ந்தது. அதற்குப் பெறுமதி கூறுவதும் கடினம் நேரத்தைச் சேமிக்கவோ அதை நிறுத்தி வைக்கவோ முடியாது. அதனை இழந்தால் இழந்ததாகவே இருக்கும். தற்காலத்தில் நேரப்பயன்பாட்டினை அதிகரிப்பதற்கு திட்டமிடலில் நுட்ப முறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

**முதலில்**

- இலக்குகளைத் தீர்மானிக்க வேண்டும்.
- திட்டங்களைத் தயாரிக்க வேண்டும்
- அத்திட்டங்களைக் கண்காணிக்க வேண்டும்.
- இவற்றை நெறிப்படுத்த வேண்டும்.
- இறுதியில் மதிப்பீடு செய்யவேண்டும்..

நேரத்தை திட்டமிடுதல் அவசியம் என்பதற்கு ஒரு மாணவன் நேரத்தை திட்டமிட்டு எப்படிப்பயன்படுத்த வேண்டும் என்பதனைக் கூறலாம்.

## மாணவன் நேரத்தைப் பயன்படுத்துவது எப்படி?

ஒரு மாணவனின் பிரதான இலக்கு “பல்கலைக்கழக அனுமதி” என்பதாக இருந்தால் அம்மாணவன் கல்விச் செயற்பாட்டிற்கே அதிகமான நேரத்தை ஒதுக்க வேண்டும். உதாரணமாக குறிப்பிட்ட மாணவன் பின்வரும் பத்து அம்சங்களை கருத்தில் கொள்ள வேண்டும். அவையாவன,

1. நித்திரை விட்டெழும் நேரம்.
2. காலைக்கடன் கழிக்கும் நேரம்.
3. இறை வழிபாட்டு நேரம்.
4. ஆகாரம் உண்ணும் நேரம்.
5. பாடசாலை புறப்படும் நேரம்.
6. பிரத்தியேக கல்விக்கான நேரம்.
7. விளையாட்டுக்கான நேரம்.
8. பிற நடவடிக்கைகளுக்கான நேரம் (ஓய்வு, சுயகடமைகள், வீட்டு வேலைகள், நல்ல நண்பர் தொடர்பு, பெற்றோருடன் உறவு)
9. சுய படிப்புக்கான நேரம்.
10. நித்திரைக்கு செல்லும் நேரம். என்பனவாகும்.

மேற்குறிப்பிட்ட பத்து அம்சங்களுக்கும் தற்கால நிலையில் ஒரு மாணவன் நேரத்தைத் திட்ட மிட்டுக் கொள்ள வேண்டும்.

## நேரமும் காலமும்

எமது முன்னோர்களால் நேரத்தை காலங்களோடு தொடர்பு படுத்தி தமிழ் இலக்கண, இலக்கியங்களில் கூறப்பட்டிருப்பதை நாம் அறியக் கூடியதாக இருக்கின்றன. அக்கால வரையறைகள் பின்வருமாறு

| மாதங்கள் | | காலங்கள் |
|---|---|---|
| ● மார்கழி, தை | - | முன்பனிக் காலம் |
| ● மாசி, பங்குனி | - | பின்பனிக் காலம் |
| ● சித்திரை, வைகாசி | - | இளவேனிக்காலம் |
| ● ஆனி, ஆடி | - | முதுவேனிக் காலம் |
| ● ஆவணி, புரட்டாதி | - | கார்காலம் |
| ● ஐப்பசி, கார்த்திகை | - | கூதிர் காலம் |

என இவ்வாறு அமைந்துள்ளன.

காலம் பற்றிய சிந்தனை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே திருக்குறளைப் போல வேறெந்த இலக்கியமும் கூறவில்லை. "காலம் அறிதல்" ஆட்சித் திறனின் அடித்தளமாய் இருக்கிறது என்பதை வேந்தர்க்கு வேண்டும் பொழுது வள்ளுவர் வலியுறுத்துகின்றார். காலம் அறிந்து செய்தால் கைகூடாதவை ஒன்றுமில்லை. மாதங்களின் ஒழுங்குமுறையில் காலங்கள் வரையறை செய்து எமது முன்னோர்களால் கூறப்பட்டதை தற்காலத்திலும் நாம் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றன.

## நேரமும் நித்திரையும்

ஆரோக்கியமான வாழ்க்கைக்கு நித்திரை மிக முக்கியமானது. "நித்திரை" என்பது உழைத்துக் களைத்த உடலுக்கு மீண்டும் புதுத் தெம்பைப் பெற்றுக் கொடுக்கும் உத்தியாகும். ஒவ்வொருவருக்கும் தேவையான நித்திரையின் அளவு சமமானதா? இல்லை, ஒவ்வொருவருக்கும் தத்தமது வயது, செய்யும் வேலைகளின் தன்மை போன்றவற்றிற்கு அமையவே நித்திரை செய்ய வேண்டிய நேரத்தின் அளவும் வேறுபடும். பிள்ளைகளின் வளர்ச்சியில் நித்திரை முக்கிய பங்கு வகிக்கின்றது. இதனாலேதான் குழந்தைகள் பகற்காலத்தில் கூட நீண்ட நேரத்திற்கு நித்திரை செய்கின்றனர்.

வயதெல்லையும் அவ்வயதெல்லைக்கு உட்பட்டோருக்கு நித்திரை செய்ய வேண்டிய நேரத்தின் அளவும் பின்வருமாறு
7வயது தொடக்கம் 8வயதுக்குட்பட்டவர்கள் 12 மணி நேரமும்
9வயது தொடக்கம் 12 வயதுக்குட்பட்டவர்கள் 11 மணி நேரமும்
13வயது தொடக்கம் 15 வயதுக்குட்பட்டவர்கள் 10 மணி நேரமும்
16 வயது தொடக்கம் 19 வயதுக்குட்பட்டவர்கள் 09 மணி நேரமும்
19 வயதுக்கு மேற்பட்டவர்கள் 08 மணி நேரமும் நித்திரை செய்யவேண்டும் என கூறப்பட்டுள்ளன. ஆனால் தற்காலத்தில் இவ்வாறு எல்லோரும் ஒரு சீரான முறையைக் கடைப்பிடிப்பதில்லை. ஏனெனில் மாறி வரும் நவீன தொழில் நுட்ப யுகத்தில் கல்வி, தொழில், வெளிநாட்டு வேலை வாய்ப்பு போன்றவற்றின் காரணமாக நித்திரை செய்கின்ற நேரத்தின் அளவும் வேறுபடுகின்றது.

## நேரப்பயன்பாட்டில் முன்னோர்களும் நாமும்

ஒரு மனிதனுக்கு நற்பண்புகளான விழுமியங்கள் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் நேரத்தை வாழ்க்கையில் பயன்படுத்துவதாகும். நற்பண்புகளான

நல்லொழுக்கத்தையும், நேரத்தையும் ஒரு மனிதன் கடைப்பிடித்து வாழா விட்டால் அம்மனிதன் ஒருபோதும் வாழ்க்கையில் முன்னேற மாட்டான். இதனால்தான் எமது முன்னோர்கள் இயற்கையோடு இணைந்து நேரத்தைப் பயன்படுத்தி வாழ்ந்தார்கள்.

தற்கால நிலையில் நவீன தொடர் பாடல்களின் நிமிர்த்தம் அவசர வேலை உலகில் நேரத்தை சரியான முறையில் திட்டமிட்டு செயல்படாத ஒரு நிலையை நாம் காணக் கூடியதாக இருக்கின்றது. ஆனால் "நேரத்தை மதித்தவர் நேர்த்தியாக வாழ்வர்" என்ற கூற்றிற்கு அமைய நேரத்தை திட்டமிட்டு வாழ்ந்தால் சிறந்த முறையில் எமது வாழ்க்கையை வளமுடையதாக மாற்றலாம் நாமும் சமூகத்தில் உயர்ந்தவர்களாக வாழமுடியும் என்பதைத் தெளிவாகக் கூறலாம்.

அந்தக் காலத்தில் எமது முன்னோர்கள் நேரத்தைத் திட்டமிட்டுப் பயன்படுத்தியதன் காரணமாக நேரம் மிச்சம் பிடிக்கப்பட்டு மீதியாக இருந்தது. இந்த மீதிநேரத்தினை பாரம்பரியக் கலைகளான நாட்டுக் கூத்து, கும்மி, வசந்தன், கோலாட்டம், கரகாட்டம் போன்ற கலைகளை வளர்ப்பதில் ஆர்வம் காட்டினார்கள்.

அதுமாத்திரமன்றி நாட்டுக் கூத்தினை பொழுது புலரும் வரை 12 மணித்தியாலங்கள் பார்த்து இரசிக்கின்ற கலை ஆர்வமிக்கவர்களாக எமது முன்னோர்கள் இருந்தார்கள். ஆனால் இந்தக்காலத்தில் 3 மணித்தியாலம் ஆடுகின்ற மேடைக் கூத்தாக மாறிவருவது தற்கால நிலையாகும்.

நமது பொருளாதார வளர்ச்சி தேசத்தின் வளர்ச்சியாக ஒவ்வொரு தனிமனித வாழ்விலும் மகிழ்ச்சியாக மாற வேண்டுமானால் காலத்தின் வலிமை, நேரத்தின் முக்கியத்துவம் உணரப்பட்டால் மட்டும் போதாது செயலிலும் காட்டப்படவேண்டும். இது உபதேசமாக இல்லாது உயர்மட்டங்களில் இருந்து அடிமட்டம் வரை ஒரு வாழும் நெறியாக வளர வேண்டும்.

எனவே மேற் கூறியவற்றில் இருந்து மனித வாழ்க்கை விழுமியங்களில் நேரமுகாமைத்துவத்தைப் பேணுவதில் முன்னோர்களின் பங்கும், தற்கால நிலையும் எவ்வாறு உள்ளது என்பதை ஒரு சமூகவியல் பார்வை மூலமாக நோக்க முடியும்.

## உதவிய உசாத்துணை நூல்கள்

1.பேராசிரியர் மா. செல்வராஜா
- கல்வி அபிவிருத்தி முகாமைத்துவம்
2.ஜே.எஸ்.ஏப்ரகாம்
- நேர நிர்வாகமும் சுயமுன்னேற்றமும்
3.தேசிய கல்வி நிறுவகம்
- உடலின் தேவைகள்
4.மட்/சிவாநந்த வித்தியாலயம்
- சிவாநந்தன் சஞ்சிகை - 2004

❀ நீ வெற்றியடைவதை உன்னைத் தவிர வேறு யாராலும் தடுக்க முடியாது. (ப்ரெமர்)

❀ எவர் ஒருவன் தன் கடமைகளைச் சரிவரச் செய்கிறாரோ அவருக்கு உரிமைகள் தானாகவே வந்தடையும். (காந்திஜீ)

## கலாசார விழா – 2012 கன்னி முயற்சியின் சுயம்பு முதல் மலர் வெளியீட்டு நினைவுத் துளிகள்














# மனிதனாகு

அ. அன்பன்
பிரதேச செயலகம்,
மண்முனை தென்மேற்கு,
பட்டிப்பளை.



அம்மை அப்பனோடு கோபம் கொண்டு
தனிமை தேடினான் அன்று குழந்தையாய்
ஆனாலோ, இம்மண் வாசனை அழைத்த
கோலமோ என்னவோ?
சோலையூரில் தான்தோன்றியாய் உதித்த
அப்பனருகே பாசம் மறவாத புதல்வனாய்
தாந்தாமலை உச்சிதனிலேறி குடியமர்ந்து
தினமும் தாய் தந்தை முகம் பார்க்கும்
இளங்குமரன் பார்வை படியும்
புனித பூமியடா எம் மண்
இப் பெருமை தனை காத்திட நீயும்
மனிதனாகு

ஒரு பொழுது கஞ்சோடு
ஓட்ட ஓலை குடிசை மூலைக்குள்
மனையாளோடு குழந்தைகளை தூங்க வைத்து
முற்றத்திலே
நித்திரையிலும் காவல் புரியும் ஆடவன்
விடியும் முன்னமே
பக்கத்தில் அவன் இல்லை எனும்
அவளது ஓலத்தில்
பிஞ்சுகளும் சேர்ந்து துயரால் கதறிட . . .
"நம் பெண்கள் விதவையான கோலங்கள்
எம் மண்ணில் ஆயிரம் ஆயிரமடா"
இனி, இக்கோலம் வேண்டாமடா நீயும்
மனிதனாகு.

யானை மிதித்து எஞ்சிய
நெல்மணிகளைக் காப்பதுபோல்
துணைவன் பிரிவால் மனதால்
அழிந்த தாயவளை
அனாதை இல்லங்களாய் மாறிய
அரவமும் குடி கொள்ளும்
குடிசைகளில் வைத்து
உயிர் வாழ சோதனையிலும்
பசி வேதனை தாங்காமல் அல்லல்படும்
பச்சைத் தளிர்களுக்காய் நீயும்
மனிதனாகு.



மறத்தமிழன் வழியில் வந்த
அறத்தமிழனே!
மறந்து விடாதே எம்மவர் ஓலங்களையும்
அவர் தமக்காய் விட்டுச்சென்ற
கோலங்களையும்
நீயோ பூமியில் வீழ்ந்த துளியடா...
இனி, பாரினில் நீ வாழ்ந்தால்
அருவியானாய் என்றே பார்பேசிட நீயும்
மனிதனாகு.

நிதமும் நித்திரைக்குள் வசமான அடிமையே!
எப்போதுதான் விடுபடுவாய்?
"உனக்கு நடந்தவை விதியென நினைத்து
நடக்காத ஒன்றிற்கு
நீயே விதி எழுதாதே"
ஊரின் நன்மைக்காக உன்னை நீயும் விதையடா...
உன் இறுதி ஊர்வலத்தின் பின்னும்
ஊரே உன் புகழ் பாடிட நீயும்
மனிதனாகு.

வறுமை உனைத் துரத்தித் துரத்தி
கொஞ்சம் கொஞ்சமாய்க் கொன்றாலும்
கலை உணர்வை ரசிப்பாய்
"உனைப் பார்த்து பிறர் சிரித்தாலும்
அவர் நலம் பேணிடக் கவி வடித்தே"
மனம் நொந்தவர்களின்
உள்ளக் கிடக்கைகளை அள்ளி எடுத்து
உன் உணர்வுகள் என்னும்
உயிர் கொடுத்திட நீயும்
மனிதனாகு.

வீர பூமி தனில் தன் நம்பிக்கையோடு
வீர நடைபோடும் பெண்ணினம் கண்டிட
"அதில் நீ தேடும்
பெண்மைக்கு இலக்கணமானவளைக் கண்டிட..."
விடியும் வரை உன் உணர்வுகளாய்
விடிந்த பின் பிறர் ரசிக்கும்
கவிகளாய் மாறிட....
சங்கத்தமிழர் வளர்க்கும் கலை கண்டு
நீயும் படுவான் குயிலாகிட...
கல்லறையிலும் வெதும்பும்
நம்மவர்களுக்காய் நீயும்
மனிதனாகு.

பருவ வயதில் ஓர் நாள் நானும்
பயம் விலக பக்தி ஈர்த்திட
எதையும் பொருட்படுத்தா வாலிபனாய்
ஓடம் ஏற ஆர்வத்தில் எத்தனித்து
நானும் ஆறு தாண்டி
கடைசி வடம் பிடிக்க
தடம் பதித்தேன் சோலையூரில்
வீர சைவர்களின் பக்திகண்டு
மனம் தூய்மை பெற
தினமும் லிங்கோற்பவனை நாடிட நீயும்
மனிதனாகு.



# மண்முனைத் தென்மேற்குப் பிரதேசத்தில் வழங்கும் பழமொழிகளை அடிப்படையாகக் கொண்ட சில பதிவுகள்

த.மேகராசா
அரசடித்தீவு.

## அ. அறிமுகம் :

ஒரு சமூகத்தின் பண்பாட்டு வரலாற்று வேர்களை அறிவதற்கு அச்சமூகத்தில் வழங்கும் வாய்மொழி வழக்காறுகளுக்கு பெரும் பங்குண்டு. நாட்டுப்புற இலக்கிய **மானது மனித சமுதாயம் எதை அனுபவித்ததோ, எதைக் கற்றதோ அதைக் குவித்து வைத்திருக்கும் சேமிப்பு அறையாகும்** என்றார் **எஸ்.பினாசோ** எனும் பேரறிஞர். மக்களின் பழக்கவழக்கங்கள், பண்பாடுகள், நம்பிக்கைகள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு ஏட்டில் எழுதாத இலக்கியமாக வாய்மொழி பரவலாக வழங்கி வருவதே வாய்மொழி இலக்கியமாகும். இது நாட்டார் இலக்கியம், நாட்டுப்புற இலக்கியம், ஏட்டில் எழுதாத இலக்கியம், மக்கள் இலக்கியம் என்றெல்லாம் பல பெயர்களால் அழைக்கப்படுகின்றது. வாய்மொழி இலக்கியத்தை பலரும் பலவாறு வகைப்படுத்தினாலும் அவற்றை நாட்டார் பாடல்கள், நாட்டார் கதைகள், கதைப்பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள் என்று ஒரு பொதுவகையாக அடையாளப்படுத்தலாம்.

பழமொழிகள் என்பதிலுள்ள **பழ** என்ற சொல் அது நினைப்பிற்கு எட்டாத பழங்காலத்திலிருந்தே வழங்கி வருவது என்ற கருத்தியலைத் தருகின்றது. **"பழமொழி என்பது உலகுக்கு உணர்த்தும் உண்மையை ஒரு சிறிய வாக்கியத்தின் மூலம் முழுமையாக இல்லாவிடினும் அதை விளக்கிக் கூறும் போது முழுக் கருத்தும் வெளிப்படும்."** என்று **துர்கா பகவத்** குறிப்பிடுகின்றார். அனுபவத்தினூடாக எழுந்தவைகளே பழமொழிகள். உலகிலுள்ள எல்லாச் சமுதாயங்களும் பழமொழிகளைப் பயன்படுத்துகின்றன. கதைக்கும் போது பொருத்தமாக பழமொழிகளைக் கையாள்வது மக்களின் கைவந்த கலையாகும். குறிப்பிட்ட கருத்தை அழுத்தமாகவும், உறுதியாகவும், உறைப்பாகவும், தெளிவாக விளங்கப்படுத்துவதற்கும் பழமொழிகளைப் பயன்படுத்துகின்றனர். **"பழமொழி பொய்த்தால் பழஞ்சோறு சுடும்"** என்பது மக்கள் மத்தியில் பழமொழிக்குள்ள செல்வாக்கை எடுத்துக் காட்டுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள **படுவான்கரைப் பிரதேசம்** என்றழைக்கப்படும் பெருநிலப் பரப்பில் போரைதீவுப் பற்றுப் பிரதேசத்திற்கும், மண்முனை மேற்குப் பிரதேசத்திற்கும் இடையே மண்முனை

தென்மேற்குப் பிரதேசம் நீண்டு கிடக்கின்றது. குடிமரபு, சடங்குக் கோயில்களின் சம்பிரதாயங்கள், மக்களின் வாழ்வியல் கோலங்கள் எல்லாமே இப்பிரதேசத்திற்கென்று அமைந்த தனித்துவமான அடையாளங்களாகும். பழமையும் நீண்டவரலாறும் மிக்க இப் பிரதேசத்தில் வழங்கும் பழமொழிகள் ஊடாக வெளிப்படும் வாழ்வியல், சமூக விடயங்கள் இக்கட்டுரையில் முன்வைக்கப்படுகின்றன.

## ஆ. பிரதேச அடையாளங்கள்

### I. வழிபாடு :

மண்முனை தென்மேற்குப் பிரதேசத்தில் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம், தாந்தாமலை முருகன் ஆலயம், பண்டாரியாவெளி நாகக்கட்டு போன்ற ஆலயங்களும் அமைந்துள்ள அதேவேளை மாரியம்மன், கண்ணகியம்மன், வதனமார் போன்ற தெய்வங்களுக்கான வழிபாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. தாந்தாமலை, கச்சக்கொடி சுவாமிமலை, குழுவினமடு போன்ற இடங்களில் மாடுவளர்ப்பு அதிகமாக உண்டு. மாடுவளர்ப்பவர்கள் தமக்குரிய தெய்வமாக வதனமாரையே வழிபடுபர். எங்கெல்லாம் கோயில்களை அல்லது வழிபாட்டு நிலையங்களை உருவாக்க முடியுமோ அங்கெல்லாம் வதனமாரை வைத்து வழிபடுவர். இதனால் ஒருவர் மற்றொருவரை ஒரே நேரத்தில் கண்டால் **"வதனமாரைப் போல"** என்று கூறுவர்.

மேலும் கொக்கட்டிச்சோலை சிவன் கோயில் மிகவும் சிறப்பு வாய்ந்தது என்னும் வகையில் போதனையைச் செய்கின்ற ஒருவர் அதற்கு எதிர்மாறாக நடந்து கொண்டால் **"படிக்கின்றது தேவாரம் இடிக்கின்றது சிவன் கோயில்"** என்று கூறுவர். அத்தோடு ஒன்றுமையை உணர்த்துவதற்காக **"ஊர் கூடி இழுத்தால் தேர் நகரும்"** என்ற பழமொழியை பயன்படுத்துவர். இது தேரோட்டம் நிகழும் பிரதேசம் என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

### II. கலைகள் :

கூத்து, வசந்தன், கும்மி, கோலாட்டம் போன்ற மக்கள் கலைகள் உயிர்ப்புடன் வாழும் பிரதேசமாக இன்றும் இப்பிரதேசம் விளங்குகின்றது. கோயிற் சடங்கு காலங்களில் நடைபெறும் நிகழ்வுகளில் மேற்கூறியவாறான கலையம்சங்களின் அறிக்கைகளே கூடுதலாக இடம்பெறும். தவிர பிரதேச கலாசார நிகழ்வுகளிலும் இவை சிறப்பிடம் பெறும். முன்னோர்கள் கூத்துக்கள் ஆடி மகிழ்ந்து மண்ணோடு பிணைந்து வாழ்ந்த வாழ்க்கை நெறியை இன்றைய இளையோரும் தொடர்வது இன்றைய நிலையில் முக்கியமானதாகும். பிரதேச மக்கள் பேசும் போது **"பந்திக்கு முந்தணும் கூத்துக்கு பிந்தணும்"** என்று கூறுவர்.

மேலும் பிரதேசத்தில் இடம்பெற்று வந்த **"கொம்புமுறி"** விளையாட்டுக் கலையை **"வாய்க்கொழுப்பு சீலையால் வழியுது"** எனும் பழமொழி வடசேரி கொம்பு விளையாட்டை நினைவு கூருவதாக உள்ளது.

### III. தொழில்கள்

மண்முனை தென்மேற்குப் பிரதேசத்தில் விவசாயம், மீன்பிடி, ஆடுமாடு வளர்த்தல், விறகு வெட்டி விற்றல் போன்ற தொழில்களே கூடுதலாக மேற்கொள்ளப் படுகின்றன. அரசாங்கத் தொழில் செய்வோர் மிகவும் குறைந்த தொகையினரே ஆவர்.

#### ■ உழவு

உழவுத் தொழிலைச் செய்த முன்னோர் வயலை அறுவடை செய்து பின்னர் அதனை ஒர் இடத்தில் (களவட்டியில்) குவித்து மாடுகளைக் கொண்டு சூடு அடிப்பர். இவ்விடயத்தை எடுத்துக்காட்டுவதாக **"அரக்கு மாடு கிறுகிற மாதிரி"** என்னும் பழமொழி வழக்கத்தில் உள்ளது. ஒரு வேலையைச் செய்கின்ற நேரத்தில் பலரும் பக்கத்தில் நின்றுகொண்டு எதையும் செய்யாமல் கிறுகிக் கிறுகி நிற்கும் போது

இந்தப் பழமொழியைக் கையாண்டு அவ்வேலையை வேகமாகச் செய்வதற்கு கட்டளையிடுவர்.

**"பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது"** என்ற பழமொழி காலத்துக்கு வயலை உழுது பயிர் செய்வதற்கு புதன் நல்லது என்னும் கருத்தினை வெளிப்படுத்து வதாக உள்ளது. இதே போன்றே **"ஆடியில் உழவு தேடி உழு"** என்னும் பழமொழியும் பயிர் செய்யவேண்டிய காலத்தையே சுட்டி நிற்கின்றது. மேற் கூறிய இரு பழமொழி களுமே இப்பிரதேச விவசாய மக்கள் தொழிலைச் செய்யும் போதும் வேறு எக்காரியத்தையும் முன்னெடுக்கும் போதும் நல்ல நாள், நேரம், சாஸ்திரம் பார்த்து செய் கின்ற பழக்கத்தை உடையவர்கள் என்பதைப் புலப்படுத்துகின்றது. **"ஏர் வலிதானால் போரு களம் நிறையும் , ஆழ உழுதினால் அதிக விளைச்சல் உண்டாகும்"** என்னும் பழமொழிகளும் இப்பிரதேசத்தில் முக்கியத்து வம் பெற்று விளங்கும் உழவுத் தொழிலி னையே எடுத்துக் கூறுகின்றது. **"சிறுபிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது"** என்னும் பழமொழி சின்னப்பிள்ளைகள் செய்கின்ற முயற்சிகள் வெற்றியினைத் தராது என்ற கருத்தினை வலியுறுத்துகின்றது. உலகத்தில் சிறுவர்கள் வியக்கத்தக்க சாதனைகளைப் புரிந்து கொண்டிருக்கும் இன்றைய கால கட்டத்தில் இத்தகைய பழமொழிகளைப் பயன்படுத்துவதை தவிர்த்துக் கொள்வது நல்லது.

### ■ மீன்பிடி

**"சின்ன மீனெண்டாலும் சின புறப்படப் பிடிக்கணும்"** என்னும் பழமொழி பிரதேச மீன்பிடித் தொழிலை எடுத்துக்காட்டி நிற்கும் அதேவேளை எதையும் உறுதியாகக் கை நழுவிப் போகாவண்ணம் கையாளப்பட வேண்டும் என்ற கருத்தியலையும் ஊட்டுகின்றது. இப்பிரதேசத்தில் சிறுசிறு குளங்கள் காணப்படுகின்றன. குளத்தில் உள்ள மீன்களில் வரால் (விரால் என்றும் குறிப்பிடுவர்) மீனுக்கு அடுத்ததாக குறட்டை மீனே காணப்படும். அதனால் ஒன்றுக்குப் பொறுப்பான ஒருவர் இல்லாபோது இவ் விடயத்தை அல்லது வேலையை வேறொருவர் செயற்படுத்தினால் **விரால் இல்லாத குளத்துக்கு குறட்டை அதிகாரி** என்னும் பழமொழியைக் குறிப்பிடுவது வழக்கமாக உள்ளது.

## IV. சாதி – குலம்

படுவான்கரைப் பிரதேச மக்கள் பெரும்பாலும் தமது குடும்ப வாரிசாக வரும் பிள்ளைகள் சொந்த ஊரிலேயே வாழ வேண்டும் என்று கருதுவர். அதேவேளை உறவுக்குள், ஊருக்குள் திருமணம் செய்வ தையே விரும்புகின்றனர். திருமணப் பேச்சுக்கள் இடம்பெறும் சந்தர்ப்பங்களில் **"வெளியூர் அழகனைக்காட்டிலும் உள்ளூர் முடவன் நல்லவன்"** என்று குறிப்பிடுவது வழக்கம். மேலும் கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் குடி மரபுகள் பின்பற்றப்படுவது நீண்டகாலமாக இருந்து வருகின்றது. திருவிழாக்களை ஒவ்வொரு குடிமக்களும் சேர்ந்தே கொண்டா டுவர். ஒரு குடியை விட மற்றைய குடி சிறப்பாகத் திருவிழாவைச் செய்யவேண்டும் என்றே கருதுவர். அச்சந்தர்ப்பங்களில் தம் குடி சார்ந்தவர்களை ஒன்று திரட்டுவதற்காக **"சாதியென்றால் சதையும் ஆடும்"** என்று குறிப்பிடுவர். தவிர முரண்பாடுகள் பிரச்சினை கள் வரும் வேளைகளிலும் மேற்கூறிய பழமொழியைக் கையாள்கின்றனர்.

## V. பொருளாதாரம்

யுத்தம் காரணமாகவும், இயற்கை அனர்த்தம் காரணமாகவும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசம் என்பதனால் மண்முனை தென்மேற்குப் பிரதேசத்தில் வழங்கும் பழமொழிகளில் அதன் தாக்கத் தினை அறிந்து கொள்ள முடியும். குறிப்பாக **"பதறப்பதற உழைச்சாலும் படுத்துறங்கப் பாயில்லை"** என்னும் பழமொழி பொருளாதா ரமற்ற வறுமை நிலையை எடுத்துக் கூறுவதாக உள்ளது. இதே போன்றே

"பிச்ச எடுத்தானாம் பெருமாள் அத தட்டிப் பறிச்சானாம் அனுமான்", "கொடுமையாம் கொடுமையாம் என்று கோயிலுக்குப் போனா கோமணத்தக் கேட்டானாம் ஒருவன்" என்ற பழமொழிகளும் பொருளாதார இடர் நிலையைத் தெளிவாக எடுத்துக்கூறி நிற்கின்றன.

## VI. போக்குவரத்து

பிரதேச மக்கள் பிரயாணம் செய்யும் முக்கியமான போக்குவரத்து வழியாக மண்முனையாறு விளங்குகின்றது. ஆற்றைக் கடப்பதற்காக படகுப்பாதையடிக்கு நடந்து செல்பவர்கள் தம்மைக் கடந்து செல்லும் வாகனங்களில் ஏறிச் செல்ல வாகனத்தை ஓட்டிச் செல்பவர்களிடம் கேட்பர். அவ்வேளையில் **ஆறு ஏறும்வரைதான் அண்ணன் தம்பி** என்ற பழமொழியைப் பயன்படுத்துவர்.

## VII. பழமொழிகளில் பெண்கள்

சமூகத்தில் சட்டங்களை, கட்டுப்பாடுகளை, குடும்பப் பொறுப்புக்களைக் கையாளுகின்றவர்களாக ஆண்களே நீண்ட காலமாக இருந்து வந்தனர். இதனால் பெண்கள் அடக்கப்பட்டதோடு இரண்டாம் பட்சமாகவும் நோக்கப்பட்டனர். இத்தன்மையினை பழமொழிகள் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டி நிற்கின்றன. **பெட்டை கோழி கூவி விடியாது, பெண்புத்தி பின்புத்தி** என்று பெண்களின் முயற்சிகள் பலவீனப்படுத்தப்பட்டன. **கொம்மைக்குப் புருஷன் வேணுமெண்டா கூடையில் வச்சி சும** என்னும் பழமொழி பெண்ணினத்தை அவமானப்படுத்துவதாக உள்ளது. இத்தகைய பழமொழிகளையும் **பொட்டக் கோழி, கொமரு, கொம்ம, மான்பாஞ்சான்** போன்ற அடைமொழிகளால் - குறியீட்டுச் சொற்களால் பெண்கள் குறிப்பிடப்படுகின்றமையும் கவனிக்கத்தக்கதாகும்.

## VIII. பிரதேச பேச்சு மொழி

எழுத்து மொழி, பேச்சு மொழி இவை இரண்டிலும் பேச்சு மொழியே உயிர்ப்புள்ள வாழும் மொழி என்று மொழியியலாளர்கள் குறிப்பிடுவர். பிரதேசத்திற்குப் பிரதேசம் மக்கள் பேசும் மொழி மாறுபட்ட தன்மையுடையது. இதனைச் சமூகக் கிளை மொழிகள் என்று ஆராய்ந்துள்ளனர். மண்முனை தென்மேற்குப் பிரதேசத்திற்கும் தனித்துவமான பேச்சுமொழி அடையாளம் உண்டு. இவ்விடத்தில் குறிப்பிடத்தக்க இன்னுமொரு விடயம் ஒரு பிரதேசத்திற்குள்ளும் ஊர்களை வேறுபடுத்தி இனங்காணத்தக்க பேச்சு மொழிச் சொற்கள் உண்டு. சமூக அந்தஸ்தையோ உயர்வு தாழ்வையோ மதிப்பிடுகின்ற கருவி பேச்சு மொழி அல்ல என்பது கவனத்தில் கொள்ள வேண்டியதாகும்.

இப்பிரதேசத்தில் வழங்குகின்ற ஒரு வகையான சொற்களில் சொல்லின் ஈற்று கெட்டு உச்சரிக்கப்படுகின்றன.

**எ/டு:** - வக்கட (வக்கடை), சண்ட (சண்டை), கட (கடை).

ஒரு வகையான சொற்களில் சொல்லின் ஈற்றில் உகரம் சேர்ந்து உச்சரிக்கப்படுகின்றன.

**எ/டு:** அப்பரு (அப்பர்), சுவரு (சுவர்).

சில சொற்களில் சொல்லின் ஈறு மாற்றமடைவதோடு சொல்லின் முன்னெழுத்தும் மாறுபட்டு உச்சரிக்கப்படுகின்றது.

**எ/டு:** பொட்ட (பெட்டை), சென்ன (சொன்ன).

இன்னும் சில சொற்களின் அதன் எழுத்து வடிவம் மாற்றப்பட்டு வேறொரு புது வகையாக உச்சரிக்கப்படுகின்றன.

**எ/டு** :- வச்ச (வைத்த), இஞ்சாரு (இங்கே பார்), பொறகு (பிறகு), கொம்ம (அம்மா), கொப்பரு (அப்பா).

இப்பிரதேசத்தில் வழங்கும் கொப்பர், கொம்ம, கொமர் போன்ற சொற்கள் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் சில இடங்களிலும் காணப்படுகின்றன. ஒரு மொழி இன்னொரு மொழியில் கலப்பது இயல்பாக அமைவது போன்று குறிப்பிட்ட பேச்சு மொழிச் சொற்கள் அக்குறிப்பிட்ட சமூகத்தில்

மாத்திரமின்றி, பிரதேசத்தில் மாத்திரமின்றி வேறு இடங்களிலும் வழக்கத்தில் காணப்படு கின்றன. இது ஆராயப்பட வேண்டியதாகும்.

## இ. முடிவுரை

ஒரு சமூகத்தை விளங்கிக் கொள் வதற்கு அச்சமூகத்தைப் பற்றிய புரிதல் மிக அவசியமானதாகும். மக்களிடையே வாய் மொழித் தரவுகளாக உள்ள இலக்கியங்கள் ஆராயப்படவேண்டியதாகும். அவற்றினூ டாக மக்களின் சடங்குகள், சம்பிரதாயங்கள், உறவுமுறைகள், பொருளாதார நிலைகள், வரலாற்றுச் செய்திகள் போன்ற பல செய்திகளை அறிய முடியும். இக்கட்டுரையில் குறிப்பிட்ட பழமொழிகளை வைத்துக் கொண்டு அப்பழமொழிகளினூடாக வெளிப் பட்டு நிற்கும் பொதுவான சில தகவல்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இது ஆழமாக அறியப்பட வேண்டிய தேவை உள்ளதென்ப தோடு இவற்றைப் போன்று கதைகள், கதைப்பாடல்கள், நாட்டார் பாடல்களும் நோக்கப்பட வேண்டியவையாகும்.

**தகவல் தந்தோர்**

1. திரு.குமாரவேலி, முனைக்காடு.
2. திரு.மு.குணரெத்தினம் (அதிபர்), அம்பிளாந்துறை.
3. திரு.வே.மகேசரெத்தினம்(அதிபர்), மகிழடித்தீவு.
4. திரு.குபேந்திரராஜா (ஆசிரியர்), அம்பிளாந்துறை.

மன்னிக்கும் குணம், ஆற்றல் வாய்ந்தவர்களுக்கு ஓர் அடையாளம்.

(காந்திஜீ)

பலமுறை சிந்தியுங்கள். ஒரு முறை முடிவெடுங்கள்.

எப்பொழுதும் உன்னை நினைத்துச் சுயநலமாக இருப்பதை விட, மற்றவர்களை நினைத்துப் பொதுநலமாகச் சிந்தி. நீ நன்றாக இருப்பாய்.



# நாடகம் தோன்றிய வரலாறு

சி. நிர்மலாதேவி
கலாசார உறுப்பினர்
அரசடித்தீவு - வடக்கு.

**நா**டகம் என்னும் சொல்லுக்கு **விளையாட்டு** என்பது பொருள். அதாவது ஒழுங்கான விளையாட்டு இதனை **ஆட்டம்** என்றும் உலகம் வழங்குகின்றது. தமிழ்ச்சுவை செறிந்த திருவாசகம் என்னும் அருள் நூலில்,

**"நாடகத்தால் உன்னடியார்
போல் நடித்து"**

என்று மாணிக்கவாசகப் பெருமான் ஒரு தொடர் அருளிச் செய்திருக்கிறார். இதில் **நாடகம்** என்னும் சொல் **விளையாட்டு** என்னும் பொருளில் வந்திருக்கிறது. **நடித்தல்** என்பதே அதன் செயல் என்பதும் அத்தொடரில் இருந்து தெரிகின்றது.

நடிப்பில் இரண்டு வகைகள் உண்டு. ஒன்று கருத்துக்களை நடித்தல், இன்னொன்று கதை நடித்தல். கருத்துக்களை நடித்துக் காட்டுவதற்கு **நாடகம்** என்றும் பெயர் சொல்வதுண்டு. சங்ககாலத்தில் இவ்விரண்டுமே **கூத்து** என்னும் பெயரால் வழங்கி வந்தன.

நாடகத்தில் நடிப்புச் சுவையோடு கதைச்சுவையும் அடங்கி இருப்பதனால் எல்லோருக்கும் அது மிக்க இன்பத்தைத் தரும். ஆயினும் அந்நாடகத்திலும் நடிப்புத்தான் உயிர். நடிப்பை நாடகத்தில் இருந்து பிரித்துவிட்டால் அப்போது அதற்கு **நாடகம்** என்னும் பெயரே பொருந்தாமல் போய் விடும். ஆதலால் நாடகத்தைப்பற்றிப் பேசுகின்ற பழைய தமிழ் நூல்கள் முதன்மை யாக நடிப்பைப் பற்றியே மிகுதியாகப் பேசியிருக்கின்றன.

மேலும் பண்டைக்காலம் தொட்டே பழந்தமிழ் நூலுரைகளில் வழங்கி வருகின்ற **நடம், நட்டம், நடனம், நடிப்பு, ஆடல், ஆட்டம், ஆட்டு, கூத்து, தாண்டவம், சொக்கம், கரணம், குறிப்பு, விறல், அபிநயம்** முதலிய பல சொற்கள் கதை தழுவி வராத கூத்தின் பகுதிகளையே பெரிதும் உணர்த்துவனவாயிருக்கின்றன. **நாடகம்** என்னுஞ் சொல்கூட ஒரோயொரு கால் முதன்மை பற்றி நாட்டியத்தை உணர்த்தி நிற்றலும் உண்டு.

**"நாடக மடந்தையர் ஆடு அரங்கு"**

எனும் சிலப்பதிகாரத் தொடரில் **நாடக மடந்தையர்** என்பது நாட்டிய மடந்தையரைக் குறிக்கின்றது. **அரங்கு, ஆடுதல்** என்று வருவனவெல்லாம் நாட்டியக்

கருத்தின்மேல் வருவனவேயாம். மூன்று தமிழ்களுள் ஒன்றாகக் கூறப்படும் **நாடகத் தமிழ்** என்பதும் நாட்டியத் தமிழே. சிலப்பதிகாரத்தின் அரங்கேற்றுக் கதையில் மாதவி அரங்கேறி ஆடினாள் என்று கூறப்பட்டது. நாட்டியக்கலை பற்றியதே என்பது அக்கதையின் இறுதியில் ஆசிரியர் இளங்கோவடிகளே,

**"நாட்டிய நன்னூல் நன்கு கடைப்பிடித்துக்**
**காட்டின ளாதலில்"**

என்று எடுத்துக் காட்டுதலால் விளங்குகின்றது. மேலும் அவ்வரங்கேற்று கதை முழுவதும் உரை முழுவதும் கருத்துப் பற்றி நடிக்கும் நடிப்பின் விளக்கங்களே பெரிதும் விளக்கப்பட்டிருக்கின்றன. ஆதலால் நாடகம் என்பதில் முதன்மையானது நடிப்பு நிகழ்ச்சியேயாம் என்பது இவற்றையெல்லாம் நன்கு விளக்குகின்றது.

உலகத்தில் இந்நடிப்புக் கல்வியே முதலில் தோன்றியது என்று சொல்லலாம். எந்தக் காரியத்தையும் ஒருவரைப் பார்த்து ஒருவர் செய்யும் போது அங்கே நடிப்புத் தோன்றுகின்றது. மனதில் தோன்றுகின்ற கருத்துக்களை மொழியால் தெரிவிக்க முடியாமலிருந்த காலம் மிகவும் பழமையானது. அந்தக் காலத்தில் மனிதர்களுக்குப் பேசத்தெரியாமல் இருந்தது. முகக் குறிப்புக்கள் கை, அசைவுகள் முதலிய சைகைகளினாலேயே ஒருவருக்கொருவர் தம் கருத்துக்களை அப்போது தெரிவித்துக் கொண்டார்கள். அவையெல்லாம் நடிப்பு என்பதில் அடங்கும்.

பின்பு மொழி பேசத் தெரிந்து கொண்ட காலத்திலும் அக்கையசைவுகள், முகக் குறிப்புக்கள் முதலிய நடிப்புக்கள் நிகழாமலில்லை. நிகழ்ந்துகொண்டுதான் இருக்கின்றன. ஒரு பயனுமில்லாமல் இப்படி எப்போதும் நிகழுமா? நினைத்துப் பார்த்தால் நடிப்பினாலே தான் நிறையப் பயனிருக்கின்றதென்பது தெரிகின்றது.

நம் அன்பார்ந்த நண்பனொருவர் தமது கருத்தைத் தெருவித்து நமக்கு ஒரு கடிதம் எழுதினார் என்று வைத்துக்கொள்வோம். கடிதத்தின் வாயிலாக நாம் அவர் கருத்தைத் தெரிவித்துக்கொண்டோம். ஆனால் நமக்கு அப்போது உண்டான இன்பத்தைவிட அந்த நண்பரே நேரில் வந்து அக்கருத்தை அதற்கேற்ற முகக் குறிப்புக்கள் முதலியவற்றுடன் தெருவிக்கும் போது எவ்வளவு மிகுதியான இன்பம் உண்டாகின்றது. காரணம் என்ன? அவர் உள்ளக் கருத்துக்கு ஏற்றபடி அவர் கண்களிலும் இதழ்களிலும் புருவங்களிலும் நெற்றியிலுமெல்லாம் தோன்றுகின்ற பலவகையான முகக்குறிப்புக்களும் பிற கையசைவுகள் முதலியவைகளுமே அல்லவா?

இனி இன்னொரு நிகழ்ச்சியை நாம் நினைவு கூறலாம். நல்ல கதை நூல் ஒன்றை எடுத்து அதில் உள்ள கதையைப் படிப்பதாக வைத்துக்கொள்வோம். அப்போது நமக்கு கதை இன்னதென்று தெரிந்துவிடும். கதையின் சுவையை அறிந்தும் நமது மனம் இன்புறக் கூடும். ஆயினும் அக்கதையைப் போலவே நல்ல முறையில் ஒரு நாடகம் நடப்பதை நாம் பார்க்க நேர்ந்தால் நமக்கு இன்னும் எவ்வளவு மிகுதியான மகிழ்ச்சி உண்டாகும். நேரிற்காணும் நடிப்பன்றோ நமக்கு அத்தனை மிகுதியான மகிழ்ச்சியைத் தருவதாயிற்று.

சிலப்பதிகாரம் தமிழ் மொழியில் இப்பொழுது முத்தமிழ்க் காப்பியமாக விளங்குகின்றது. அதன் ஆசிரியரான இளங்கோவடிகள் ஒரிடத்தில் சிவபிரான் நடிப்பைப் பற்றிக் கூறுகின்றார். அதனை அவர்

**திருநிலைச் சேவடிச் சிலம்புவாய் புலம்பவும்**
**பரிதரு செங்கையிற் படுபறை ஆர்ப்படவும்**
**செங்கண் ஆயிரம் திருக்குறிப் பருளவும்**
**செஞ்சடை சென்று திசைமுகம் அலம்பவும்**

அப்பெருமான் நடனமாடினான் என்று இந்நடிப்புப் பற்றி மிக ஆற்றலாகவும் அழகாகவும் விளக்கிச் செல்கின்றார். கருத்துக் கேற்றபடி ஒழுங்காக அடி பெயர்ப்பதனால் திருவடிச் சிலம்பு கலகலவென என்று ஒலிக்கிறது. கையில் உள்ள தமருகம் என்னும் மேளம் தக்க ஒலி ஒழுங்குகளை உண்டாக்கு கின்றது. அவர் கண்கள் நொடிக்கு நொடி ஆயிரம் ஆயிரம் திருக்குறிப்புக்களை அள்ளி வீசுகின்றன. செஞ்சடை அவிழ்ந்து திசை முழுமையுந் தடவி வருகின்றன. ஆ! பெருமான் திருநடனம் என்ன தாராளமாக, பரவலாக, கண்ணியமாக, காரிய ஒழுங்காக

நடைபெறுகின்றது. அதன் மாட்சிமையைக் காணும் கண்கள்! அல்லவோ கண்கள். உள்ளகக் குறிப்புக்களுக்கேற்ற முகக் குறிப்புக் களும் பிறவுமான நடிப்புக்கள் இதன் கண் எவ்வளவு நன்றாகக் காட்டப்படுகின்றன. இந் நடிப்புக்களைக் காணும்போது உள்ளக் கிளர்ச்சி யும் இன்பமும் ஒழுங்கு எழாமலிருக்குமோ!

சிவபெருமானது இந் நடனத்தை கூத்தச்சாக்கையன் என்னும் ஒரு கூத்தன் அப்பெருமானைப் போலவே கோலம் புனைந்து கொண்டு இயல்பு வழுவாமல் நடித்துக் காட்டச் சேரன் செங்குட்டுவன் என்னும் மன்னர் மன்னன் தன் தேவியுடன் அந்நடிப்பின் திறத்தைக் கண்டு மிகவும் மகிழ்ந்தனன் என்று சிலப்பதிகாரத்தில் இந்தச் செய்தி தொடர்ந்து செல்கின்றது. இதனால் நடிப்புத் திறத்தில் தக்க இன்பப் பயன் இருக்கின்றதென்று நன்றாகத் தெரிகின்றதன்றோ?

இந்த எடுத்துக்காட்டுக்களையெல் லாம் வைத்து நோக்கும் போது மொழி கொண்டு பேசத்தெரிந்து கொண்ட காலத்தி லும் நடிப்பு இருக்க வேண்டியதன் கட்டாயம் நன்கு வெளியாகின்றது. மிகப் பழைய காலத்திலிருந்தே நடிப்பு தொடர்ந்துவர நேரிட்டது. அறிவும், பழக்கமும், ஆராய்ச்சி யும் முதிர முதிர இந் நடிப்புக்கலை சிறந்த முறையில் வளர்ந்து மேலோங்கலாயிற்று. வாழ்க்கையில் இயல்பாகவே பிணிப்புற்று நின்று இவ்வளவு இன்பம் தருகின்ற கலையை இழந்துவிட யாருக்குத்தான் மனம் வரும். தமிழின் ஒரு பிரிவாகவே வைத்து அறிஞர்கள் இதனை ஆராயலாயினர். அதனால் சிறந்த இலக்கண இலக்கியங்களெல்லாம் தோன்றினர். ஏராளமாகத் தோன்றின.

ஆனால் எல்லாக் கலைகட்கும் தமிழில் நூல்கள் மறைந்து போனது போல இந் நாடகக் கலை நூல்களும் நெடு நாட்களுக்கு முன்னேயே இறந்து போயின. உரையாசிரியர் அடியார்க்கு நல்லாரும் தங்காலத்து முன்னேயே இந்நூல்கள் இறந்து போன மையை நினைத்து உள்ளம் உருகியிருக்கின் றார். நாடகத் தமிழைப் பற்றிய குறிப்புக்கள் சிலப்பதிகாரத்திலும் அதனுரையிலும் இப்போது சிலவே நமக்குக் கிடைக்கின்றன. அவற்றைக் கொண்டு பார்த்தாலும் சங்க காலத்தில் இந் நாடகக் கலை என்னவோ விரிவாக ஆராயப்பட்டு வந்ததென்பது நன்றாகப் புலனாகின்றது.

தமிழ் மக்கள் இயற்கையைக் கூர்ந்து அறியும் இயல்புள்ளவர்கள். அதனால் அவர்கள் கலையுணர்வில் மிக்கவரானார்கள். தமிழ் மக்களின் இத் தனித்திறத்தினாலேயே நாடகக் கலை வரவர இவ்வளவு விரிவுக்கு உயர்ந்தோங்கலாயிற்று. நாடகக் கலையை தமிழ் மக்கள் மற்றவர்களிடமிருந்து கற்றுக் கொண்டவரலல்லர். இவர்கள் தம் அறிவு உணர்வின் பழக்கங்களினாலேயே இதனைக் கண்டுணர்ந்து பெருக்கி இன்பமார்ந்தனர். இறைவனே இவர்களுக்குக் கூத்தப் பெருமா னாய் விளங்குகின்றார். பேசத் தெரியாத முதற் காலத்திலேயே இந் நடிப்புக் கல்வி துவங்கினமையால் இதுவே முதலில் தோன்றிய கல்வியாயிருக்கின்றது.

நாடகக் கல்வி மிகவும் நுட்பமானது. அது கருத்துக்கான நடிப்புக்களால் இயக்கிப் புலப்படுத்துவது அச்செயல் எவ்வளவு அருமையானது. அதற்கு எவ்வளவோ நுண்ணறிவும் மிக்க பழக்கமும் வேண்டும். மனத்தூய்மையும் வேண்டும். சிலப்பதிகாரம் என்னும் அரிய நூலினால் மாதவி என்னும் நாடக மாது அறுபத்து நான்கு கலைகளிலும் வல்லவள் என்றும், அவள் ஐந்தாண்டிலி ருந்தே பழகி வந்திருக்கின்றாள் என்றும், தூய மனமுடையவள் என்றும் அறிகின்றோம். அவ்வளவு அறிவும் அக்கலைக்கும் கட்டாய மாகும். ஆதலால் நடிப்புக்கலை மிகவும் பெருமையாகப் பாராட்டுதற்குரியது. நடிப் புக்கு உதவும் நாடக அரங்கும் மிகவும் தூய்மை யான இடத்தில் அமையவேண்டும் என்பது இலக்கணம். இங்ஙனமெல்லாம் பெருமைப் படுவதாயின், அத்தகைய நாட்டியத் திறமைகளைக் காண்பது ஒரு நற்பேறேயாகும்.

**பண்கனியப் பருகிப் பயன்**
**நாடகம்**
**கண்கனியக் கவர்ந்துண்டு**

என்னுஞ் சிந்தாமணிச் செய்யுளில் **பயன் நாடகம்** எனவும் **கண்கனியக் கவர்ந்துண்டு** எனவும் எவ்வளவு மதிக்கத்தக்க தாயிருக்கின்றது.

மூல நூல் : தரம் 09 தமிழ் (1986.10.08) வெளியீடு செய்யப்பட்டது.
இளவழகனார் (1986.10.08) பழந் தமிழர் நாடகம்.

# காலத்தின் கலைகள்

திருமதி. சரஸ்வதிவல்லிபுரம்
இராசையா வீதி,
கற்சேனை,
அம்பிளாந்துறை.

முன் வந்த மன்னனும்
முன் வைத்த சொல்
மண்ணும் களப்பும்
மதிக்கும் வண்ணம்
மட்டுக்கு மட்டடா
காலத்தின் கலைகளாம்

மண் ஏறும் முனையாம் மண்முனையாம்
மகத்தான மகத்துவம் மாகையால்
தோகையரால் தோணியில்
தோன்றிய தொன்மையை
பைங்கிளியும் பாம்பும்
படையாண்ட குளம்
பதித்து வைத்ததுவும் இங்கே

கொக்கு நெட்டியர் வரலாற்றில்
கொக்கட்டிச் சோலையூரும்
தானே தோன்றிய லிங்கமும்
தன் கருணை காட்ட
கண் முன்னால் கருங்கல் மாடு
கதரி எழுந்து புல் திண்ண
ஒல்லாந்தர் ஓடியதுவும் இங்கே

தாவென்று கேட்க
தந்த தாந்தா மலையும்
ஆண்டாள் ஆடகையும்
அற்புதமும் ஆலயமும்
குன்றில் குளங்கோட்டனும்
குவலயத்தில் குதுகளித்த காலம் இங்கேயும்



# கொக்கட்டிச்சோலைப் பதியின் தொன்மை வரலாறு

இ. சாந்தலிங்கம் (J.P)
கிராம உத்தியோகத்தர்,
வண்ணக்கர் / செயலாளர்,
திருத்தான்தோன்றீச்சரரம்,
கொக்கட்டிச்சோலை.

## தெட்சணாபதி என அழைக்கப்பட்ட கிழக்கிலங்கை

கிழக்கிலங்கை, தென்கிழக்கிலங்கை உட்பட்ட கிழக்குப் பிரதேசம் ஆதி மனிதன் வாழ்ந்த இடம் என்பதற்கு பல்வேறு சான்றாதாரங்கள் உள்ளன. உலகின் ஆதிக்குடி மக்களை **"ஒஸ்ரலோயிட்"** இனம் என வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுவர். இந்த ஒஸ்ரலோயிட் இன மக்களின் வழித்தோன்றல்களே கிழக்கிலங்கையில் வாழும் வேட இன மக்கள் என்பதைப் பல வரலாற்றாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இவர்களுள் பிரபல வரலாற்றாசிரியர்களான மஜூம்தார், செலிக்மன், பானர்ஜீ போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

**பார்க்க**

(1)Heritage and life of Ceylon – Majundar P.P.8,40,235

(2) The Veddah By C.G.Sheligman P.P-419,430.

(3) History and Culture of Indian People By Banerjee.

தென்கிழக்கு, கிழக்குப் பிரதேசம் என்பது கதிர்காமம் முதல், திருகோணமலை வரை உள்ள நீண்ட கரையோரப்பகுதியைக் குறித்து நிற்கின்றது. இப்பிரதேசத்தில் திருக்கோணேஸ்வரம், தம்பலகாமம், வெருகல், சித்தாண்டி மாமாங்கேஸ்வரம், கொக்கட்டிச்சோலை, தாந்தாமலை, போரதீவு, மண்டூர், உகந்தை, திருக்கோயில், கதிர்காமம் முதலிய தலங்கள் ஒரே நிலக்கோட்டில் *(Belt)* அமைந்திருப்பதை அவதானிக்கலாம்.

இத்தலங்களுள் பெரும்பாலானவை முருகன் தலங்களாகவும், சிவன் தலங்களாகவும் அமைகின்றன. மேற்கூறிய பழம்பெரும் பதிகளை உள்ளடக்கிய பிரதேசம் **தெட்சணாபதி** என அழைக்கப்பட்டது. (தட்சணகைலாசம் என வழங்கப்படும்

திருக்கோணேஸ்வரத்தையும் இப் பெயர் குறிப்பிடும்).

## மண்முனை இராச்சியமும் கொக்கட்டிச்சோலையும்

கி.பி.3ம், 4ம் நூற்றாண்டளவில் கொக்கட்டிச்சோலையை உள்ளடக்கிய மண்முனை இராச்சியம் புகழ்பெற்றிருந்தது. மண்முனை இராச்சியம் உருவான வரலாற்றை மட்டக்களப்பு மான்மியம் கூறுகின்றது. (பக்42) இவ்வரலாற்றில் இடம் பெறும் கற்பனைகளையும், கதைகளையும் விடுத்து வரலாற்றுத் தகவல்களை மட்டும் நாம் கருத்தில் கொள்வோம். அவ்வரலாறு வருமாறு . . . . .

மட்டக்களப்பில் குணசிங்கன் கலியாண்டு 3500ல் ஆட்சி செய்தபோது கலிங்க ஒரிசா தேசத்தை அரசு புரிந்த குகசேனனுடைய புத்திரி உலகநாச்சி என்பவள் கௌதம புத்தரின் சாசனத்தை தனது நெடுங்கூந்தலுள் மறைத்துக்கொண்டு கைலயங்கிரியில் குகவம்சத்தார் முற்காலத்தில் எடுத்து வைத்திருந்த சிவலிங்கத்தையும் எடுத்துக்கொண்டு தனது சகோதரன் உலகநாதனுடன் வர்த்தகரின் கப்பலேறி இலங்கை வந்து இலங்கை அரசன் மேகவர்ணனிடம் (கி.பி.301 - 382) புத்த சாசனத்தை கொடுத்து அதற்குப் பரிசாக மட்டக்களப்பு மன்னன் குணசிங்கன் மூலம் மண்முனைப் பிரதேசத்தைப் பெற்றாள்.

அப்பிரதேசத்தின் காடு திருத்தி நகரமைத்து கலிங்க தேசத்திலிருந்து குகவம்சக் குடும்பம் 106 சிறைக்குடும்பம் (பணியாட்கள்) 30, தருவித்து மண்முனை பிரதேசத்தை உருவாக்கினாள்.

மேற்படி கதை மகாவம்சத்திலும் கூறப்பட்டுள்ளது. மட்டக்களப்பில் குணசிங்கன் ஆட்சிபுரிந்த காலம் கலி 3500 என மட்டக்களப்பு மான்மியம் குறிப்பிடுகின்றது. இது கி.பி.398 ஆகின்றது. (3500-3102=398), மேகவர்ணன் காலம் கி.பி.301-382 என மகாவம்சம் குறிப்பிடுகின்றது. சில வருட வித்தியாசம் காலக்கணிப்பில் ஏற்பட்ட தவறு என எடுத்துக் கொண்டால் உலக நாச்சியின் இலங்கை வருகை பற்றிய வரலாற்றில் மகாவம்சமும், மட்டக்களப்பு மான்மியமும் ஒத்துப்போவதைக் காணலாம்.

## உலகநாச்சி அமைத்த தான்தோன்றீஸ்வரர் ஆலயம்

கோயில்குளமும், லிங்கேஸ்வரர் ஆலயமும் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரமும் உலகநாச்சியால் அமைக்கப்பட்டது என்பதற்கான குறிப்புக்களும் **மட்டக்களப்பு மான்மியத்தில்** இடம் பெறுகின்றது அக்குறிப்பு வருமாறு.

பின்பு இன்னும் ஒரிசா நகரமிருந்தே அநேகக் குடும்பங்களை அழைத்து காப்பு முனைக்காட்டை அழித்துச் செப்பனிட்டு குடியேற்றி அப்பகுதிக்கு அரசியாகி **மண்முனை** என நாமம் சூட்டி வாழும் காலம் களப்பு முனைக்குத் தென்பக்கமாகவுள்ள காட்டை அழிக்கும் போது திகடன் என்பவன் கொக்கு நெட்டி மரத்தை வெட்ட உதிரம் பாய்ந்தது அதைக் கண்ட திகடன் உலக நாச்சியிடம் போய்ச் சொல்ல உலக நாச்சி அந்த இடத்தைப் போய்ப் பார்த்த போது அந்த மரத்தின் அடியில் ஒரு லிங்கம் மண்ணுள் மறைந்திருக்கக் கண்டு அவ்விடத்தில் ஆலயமமைத்து வடநாட்டு கொல்லடத்தில் இருந்து பட்டர் மூவரை அழைத்துப் பூசை புரியும் படி திட்டம் செய்து ...(பக் 43)

இக்கதையில் மரத்தில் இரத்தம் வந்தது. மறுபேர் கண்ணுக்குப் புலப்படாத லிங்கம் இருந்தது என்ற வர்ணனைகளை ஊடுருவி நோக்கினால் மரத்தின் அடியில் ஆதிகுடி மக்களால் வழிபட்ட லிங்கம் மண்ணுள் புதையுண்டு இருந்தது என்றும் வெட்டிய மரத்தில் சிவப்பு நிறச் சாறு வந்தது என்றும் கொள்ளலாம்.

ஆனால் அந்த லிங்கம் கருங்கல்லால் ஆனது என்பதும் அளவில் மிகப் பெரியது (ஆள் உயரம்) என்பதும் கருத்தில் கொள்ளத்தக்கது. இந்த லிங்கம் திருக்கேதீஸ்சரம், திருக்கோணேச்சரம் ஆலயங்களில் உள்ள லிங்கங்களைப் போன்று இருப்பதும்

சிந்தனைக்குரியது.

எவ்வாறாயினும் கோயில்குளம் லிங்கேஸ்வரர் ஆலயமும், கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயமும் உலக நாச்சியால் அமைக்கப்பட்டது என்பதும் இவை இரண்டிற்கும் இடையே நிலைத்த தொடர்பு இருந்தது என்பதும் மனங் கொள்ளத்தக்கது.

## கொக்கட்டிச்சோலை, கோயில்குளம், தாந்தாமலை

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திற்கும், கோயில் குளம் லிங்கேஸ்வரர் ஆலயத்திற்குமிடையே ஆரம்ப காலம் முதல் நெருங்கிய தொடர்பு இருந்தது. உற்சவ காலங்களில் கோயில்குளம் ஆலயத்தில் இருந்து தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திற்கு வேல் கொண்டு செல்லும் சம்பிரதாயம் இருந்தது. கோயில்குளம் ஆலயம் அழிந்த பின் அவ்வழக்கம் ஆரையம்பதி கந்தசுவாமி ஆலயத்திற்கு மாற்றப்பட்டு உற்சவ காலங்களில் ஆரையம் பதி ஆலயத்திலிருந்து தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திற்கு வேல் கொண்டு செல்லும் வழக்கம் இன்றும் நடைமுறையில் இருக்கின்றது.

கொக்கட்டிச்சோலையிலிருந்து சுமார் *10 (பத்து)* மைல் தொலைவில் தாந்தாமலை என்னும் இடத்தில் ஒரு முருகன் ஆலயம் இருக்கின்றது. இவ்வாலய உற்சவம் கதிர்காம உற்சவம் நடைபெறும் காலத்தில் இடம் பெறுவதனால் தாந்தாமலைப் பகுதியினை சின்னக் கதிர்காமம் எனவும் அழைப்பர். இவ்வாலயத்திற்கு சிங்கள மன்னர்கள் அடிக்கடி வருகை தருவது முன்பு வழக்கம் அதற்கு ஆதாரங்கள் உண்டு. கொக்கட்டிச் சோலை ஆலயத்தின் பொக்கிஷங்கள் இங்குள்ள ஒரு மலைக்குகையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டதனால் தாந்தாமலை தாண்டவ கிரி என்றும் பொக்கிஷமலை என்றும் அழைக்கப்பட்டது.

கொக்கட்டிச்சோலை தான்தோன் றீஸ்வரர்ஆலய நிருவாக பராமரிப்பில்தான் ஆரம்ப காலத்தில் தாந்தாமலை ஆலயம் உட்பட்டு இருந்தது என்பது குறிப்பிடத் தக்கது. அதன் பிற்பாடு அதற்கு ஒரு தனி நிருவாக சபை இலகுவாக்குவதற்காக அமைக்கப்பட்டது என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது. தற்பொழுதும் ஸ்ரீ தாந்தாமலை முருகன் ஆலய பரிபாலன சபைக்கு கொக்கட்டிச்சோலை திருத்தான் தோன்றீஸ்வரர் ஆலயத்தின் மூன்று வண்ணக்குமாரும் ஆலோசகர்களாக இன்றும் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

மாகோன் வகுத்த வன்னிமை நடைமுறை இவ்விரு ஆலயங்களிலும் இன்று வரை கடைப்பிடிக்கப்பட்டு வருவதும் இங்கு நினைவு கூறத்தக்கது.

வரலாற்று ஆய்வு நூல்களில் இருந்து தொகுக்கப்பட்டது

எல்லோருமே உலகத்தை மாற்ற வேண்டும் என்று நினைக்கிறார்களே தவிர ஒருவரும் தன்னை எப்படி மாற்றிக்கொள்ள வேண்டும் என்று எண்ணுவதில்லை.

(லியோ டோல்ஸ்டோய்)



# கட்டாயக் கல்வி

திரு.சௌந் லெனாட் லொறன்ஸோ
பிரதேச செயலகம்,
பட்டிப்பளை.

'அப்பாடா.. அவன் பிடிபடுவான் என்று நான் நினைக்கவே இல்லை.'

ஐந்தாந் தரத்திற் படிக்கும் இந்தப் பெடியன் கன நாளாய்ப் பள்ளிக் கூடப் பக்கம் வரல்ல. கிட்டத் தட்டப் பத்துப் பதினைந்து நாள் அவன் *absent.*

வீட்டிற்குப் போனாலும் இவண்ட ஞாபகம் தான் தலைகாட்டும். இண்டய்க்கு வருவான் நாளய்க்கு வருவான் என்டு பாத்தா ம் ஹூம்.. நேற்று அவனைத் தேடி அவண்ட வீட்டிற்குச் சென்றேன். ஈர்க்குகளால் வேயப்பட்ட ஓலைக் குடிசைக்குள் சில பொருட்கள்; வெறும் எலும்புகளில் தோலைப் போர்த்திய தோற்றத் துடன் தாயார் என வறுமையை அடையாளப் படுத்தும் தடயங்கள்.

'பகிரதன் எங்க? பள்ளிப்பக்கம் ஆளக் காணல்ல'

என்னைக் கண்டதும் கிழிந்திருந்த தன் சோட்டி ஓட்டைகளை மறைக்க பிரயத்த னப்பட்டுக் கொண்டிருந்தார் அந்தத் தாயார்.

'இஞ்சதான் நிண்டான் சேர்..'

நான் வரச் சொன்னென்டு சொல்லி ஆள பள்ளிக்கு அனுப்புங்க..'

அவசரமாய் அங்கிருந்து வெளியேறுகின்றேன்.

அந்தக் கிராமத்திலிருக்கும் ஒரேயொரு பள்ளிக் கூடத்தில் கடமையாற்றும் மூன்று ஆசிரியர்களில் நானும் ஒரு ஆள். மொத்தமாக உள்ள இருபத்தாறு மாணவர்களில் பகிரதனும் ஒருவன்.

பதினொரு மணியிருக்கும், தூதுவர்களாய்ச் சில மாணவர்களை அனுப்பி பகிரதனுக்கு அழைப்பு விடுத்தேன்.

'அவன் வரமாட்டானாஞ் சேர் சைகையால் பஸ் ஓட்டிக் கொண்டு வந்த தூதுவ மாணவர்கள் சொல்லிய பதில் இது.

'பதினாலு வயது மட்டும் கட்டாயக் கல்வி இருக்கிடா அவன் பள்ளிக்கு வராட்டி பொலிசுல புடிச்சுக் குடுப்பன் என்டு சொல்லுங்க.

வீட்டிற்கு வந்ததும் சாப்பிடக் கூட முடியவில்லை. பகிரதனின் வறுமையை எண்ணி வாய்வயிறு பற்றியது.

'ஒருவேளை வறுமையால தான் வராம நிற்கிறானோ வேலைக்கும் போகல்ல. சும்மா தான் நிற்கிறனாம்.. இவன் பள்ளிக்கு வந்தால் கொஞ்சம் உதவி செய்யனும்.

பகிரதனின் எண்ணத்திற்தான் நேற்றைய நாள் கழிந்தது.

இன்று காலை நித்திரையால் எழுந்ததும் பகிரதனை சுற்றிவளைத்துப் பிடிப்பது என கங்கணங்கட்டிக் கொண்டே பாடசாலைக்குத் தயாரானேன்.

எமது பாடசாலையில் *seniors*ஆன 5ம் தர மாணவர்கள் சிலருடன் பகிரத இல்லத்திற்குப் படையெடுத்தேன். எங்கள் படையைக்கண்டு ஓடத்தொடங்கிவிட்டான் பகிரதன். பகீரதப் பிரயத்தனத்திற்குப் பிறகுதான் அவனைப் பிடித்திருக்கிறோம்.

'இஞ்ச வாவண்டா பகி' அவனது பிஞ்சுக் கையை என் உள்ளங்கைகளால் இறுகப் பிடித்துக் கொண்டு பாடசாலை நோக்கி விரைகின்றோம்.

தனியறை..

எனது விசாரணை ஆரம்பமானது, அன்பான கேள்விகளால்

'காலையில என்னடா பகி சாப்பிட்ட நீ?'

'தண்ணிச் சோறு' தயக்கமின்றி வந்தது விடை.

'உங்கட புள்ள எத்தினயாமாண்டு படிக்கிறா?

'நேசரி சேர்''

இன்னும் சில கேள்விகள்..அப்பாடா பதில்கள் சரளமாக வந்தன.

'ஏன்டாம்பி பள்ளிக்க வர மாட்டன் என்டு சொன்னநீ?'

மௌனம்

அவன் கண்களை உற்றுப் பார்த்தேன். வறுமை தொனிக்கவில்லை. மாறாக விரக்தி உணர்வு அவனை ஆட்கொண்டிருந்தது.

'இஞ்ச வாவண்டா செல்லம்' பக்கத்தில் அவனை அணைத்துக் கொண்டேன்.

'உனக்கு என்னடா பகி பிரச்சின? என்னில உனக்கு விருப்பம் என்டாச் சொல்லு. இல்லாட்டி விடு போலியாக அலுத்துக் கொண்டேன்..

அவன் ஏதோ ஒரு பிரச்சனையைச் சொல்ல வருவதை அவனது உதடுகள் உணர்த்தின.

அப் பிரதேச சிறார்களின் பிரச்சனைக்கு தீர்வு சொல்லும் நம்பிக்கைக்குரிய நபர் நானானக விளங்குவதால் துணிந்து அவனது பிரச்சனையை எதிர்கொள்ளத் தயாரானேன்.

'அப்பாவத் தெரியுந்தானே சேர்..?'

செங்கல் லொறியில் கூலியாளாக இருக்கும் அவனது தந்தை குறைவுபடாக் குடிகாரர். பரட்டைத் தலையும், தாடியும், சேங்குப் பல்லுமாக பார்க்கவே அருவருப்பாக ஊத்தை உடுப்புடன் காணப்படும் அவர் என் நினைவில் வந்து மறைந்தார்.

'ஏன் அவருக்கென்ன..? வினவியபடி அவன் முகத்தைப் பார்க்கின்றேன்.

அவன் பார்வையை விலக்கிக் கொள்கின்றான்.

'அண்டய்க்கொருநாள் அவர் குடிச்சுப் போட்டு அம்மங்கோயிலடியில விழுந்து கிடந்திருக்காரு சேர் நம்மட புள்ளய்கள் பள்ளி உட்டுப் போக்குள பாத்தவயளாம், எனக்கு நக்கலடிக்காங்க, அவர் அவர் உடுப்ப உரிஞ்சுபோட்டு'

துடித்த அவன் உதடுகளைப் பற்கள் சிறைப்படுத்தின.

தேம்பியழுதவனை என் நெஞ்சு தாங்கியது. இந்தப் பிஞ்சு நெஞ்சின் பாரத்தை அவன் தகப்பன் அறிவானா..?

ஏக்கம் என்னையும் பற்றிக் கொள்ள,

இவன் பாடசாலைக்கு வராமை தொடர்பாக அதிபருக்கு எழுதிய தகவல் அறிக்கையை கசக்கிக் கொண்டிருந்தன என் கைகள்.

அரிய செயலைச் செய்து முடிப்பது
வலிமையால் அல்ல. விடாமுயற்சியால் தான்.

(ஜேம்ஸ் ஆலன்)



# அஸ்த்தமனத்தின் வாசலில்

மதுவினால் கண்டான் போதை அந்த நொடி
மாறுபட்டது அவன் அவன் வாழ்க்கைப் பாதை
அரசானாகியவன் ஆண்டியானான் பார் தூற்ற
ஆனந்தத் தாண்டவம் ஆடினான் வீதிதனில்

விடிந்தவுடன் ஓடினான் வியர்வை சிந்தினான்
வீடு வரு முன் நீர் வரி கட்டினான்
உலகம் அவனைக் குடிகாரன் என்றது
ஊர்வலம் போல் அசைந்தாடி வந்தான்

மனைவியவள் பாதகனை தோளில் தாங்கி
மாண்புமிகு மங்கையாகப் பறைசாற்றி நின்றாள்
கலியுகம் கண்ட கணவனாகிய அவனே
காலவன் என்பது எவ்வழியும் அறியாள்

வ.ஜெகன்
பட்டதாரி பயிலுனர்,
பிரதேச செயலகம்,
ம.தெ.மே.

நங்கையவள் தன் பசி காத்து
நாயகனுக்கு இலைக்கறி சோற்றினை நீட்டினாள்
அன்னம் அவள் கன்னத்திற்கு விருந்தானது
ஆடவருள்ளே அவமானச் சின்னமாகத் தோன்றினாள்

பல நாள் மனதை மௌனித்திருந்தவள்
பாசத்தால் உணர்விற்கு விலங்கிட்டவள்
வழி அறியாத சுமை தாங்கியானவள்
வாய் திறந்தாள் ஒரு வார்த்தை

உழைத்துத் தந்தால்தானே நா சுவைக்கும்
ஊதுவதற்கு ஆசை குழலின்றி ஓசை ஏது – என்றாள்
முடியை பிடித்தான் தடியால் அடித்தான்
மூலைக்குள் தள்ளினாள் மோளை என்றான்

மறுநாள் காலை மரண ஓலம்
மாலை வந்து குவிந்தது வீட்டினுள்ளே
கணவன் கையில் காப்புகள் பிணைந்தன
காவல் அரன் அவனை அழைத்தது

பசியால் அழுதிடும் கைக்குழந்தை
பாரில் விழுந்தழும் இரு குழந்தைகள்
அஸ்தமனத்தின் வாசலை எட்டிப் பார்த்தனர்
ஆதரவற்று அநாதைகள் நாமம் பெற்றனர்.

# கலாசார விழாப் போட்டி முடிவுகள் - 2013

## பாடசாலை மட்டம்

### கவிதை

#### கனிஸ்ட பிரிவு

முதலாம் இடம் : தி.பிரசோன்
மட்/கொக்கட்டிச்சோலை இராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயம்.

இரண்டாம் இடம் : க.கஜேந்தினி
மட்/ முதலைக்குடா மகாவித்தியாலயம்.

மூன்றாம் இடம் : த.தவரூபன்
மட்/கொல்லநுலை விவேகானந்தா வித்தியாலயம்.

#### சிரேஸ்ட பிரிவு

முதலாம் இடம் : வே.கோசலாதேவி
மட்/ நாற்பது வட்டை விபுலானந்தா வித்தியாலயம்.

இரண்டாம் இடம் : சு.மாதங்கி
மட்/கொக்கட்டிச்சோலை இராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயம்.

மூன்றாம் இடம் : வ.துலோச்சனா
மட்/கொக்கட்டிச்சோலை இராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயம்.

### கட்டுரை

#### கனிஸ்ட பிரிவு

முதலாம் இடம் : ஜீ.கல்கியமுது
மட்/அம்பிளாந்துறை கலைமகள் வித்தியாலயம்.

இரண்டாம் இடம் : தே.டிலோசனா
மட்/அம்பிளாந்துறை கலைமகள் வித்தியாலயம்.

மூன்றாம் இடம் : வி.வினோதா
மட்/ முதலைக்குடா மகாவித்தியாலயம்.

#### சிரேஸ்ட பிரிவு

முதலாம் இடம் : க.தினுசியா
மட்/அம்பிளாந்துறை கலைமகள் வித்தியாலயம்.

இரண்டாம் இடம் : ம.நிலோசினி
மட்/ அரசடித்தீவு விக்னேஸ்வரா வித்தியாலயம்.

மூன்றாம் இடம் : செ.லுஜிதா
மட்/கொக்கட்டிச்சோலை இராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயம்.

## பரதநாட்டியம்

முதலாம் இடம் : மட்/ முதலைக்குடா மகாவித்தியாலயம்.

இரண்டாம் இடம் : மட்/ அரசடித்தீவு விக்னேஸ்வரா வித்தியாலயம்.

## கிராமியப் பாடல்

முதலாம் இடம் : மட்/ நாற்பது வட்டை விபுலானந்தா வித்தியாலயம்.

இரண்டாம் இடம் : மட்/ முதலைக்குடா மகாவித்தியாலயம்.

## பேச்சுப் போட்டி

### கனிஸ்ட பிரிவு

முதலாம் இடம் : **பா. அனுஷியா**
மட்/அம்பிளாந்துறை கலைமகள் வித்தியாலயம்.

இரண்டாம் இடம் : **ர.துனேஸ்ராஜ்**
மட்/ முதலைக்குடா மகாவித்தியாலயம்.

மூன்றாம் இடம் : **க.கலையரசி**
மட்/ பண்டாரியாவெளி நாமகள் வித்தியாலயம்.

### சிரேஸ்ட பிரிவு

முதலாம் இடம் : **க.சாந்தரூபி**
மட்/கொக்கட்டிச்சோலை இராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயம்.

இரண்டாம் இடம் : **வ.கன்னிகா**
மட்/அம்பிளாந்துறை கலைமகள் வித்தியாலயம்.

மூன்றாம் இடம் : **க.கெக்கநிஷா**
மட்/ அரசடித்தீவு விக்னேஸ்வரா வித்தியாலயம்.

# திறந்த பிரிவு போட்டிகள்

## கவிதை

முதலாம் இடம் : **அ.தேகதாஸ்**
முத்தமிழ் கலைக் கலாமன்றம் முதலைக்குடா.

இரண்டாம் இடம் : **கு.மயூரிஉமா**
அம்பிளாந்துறை.

## கிராமியப் பாடல் போட்டி

முதலாம் இடம் : கண்ணகி நுண்கலை மன்றம்.
மகிழடித்தீவு.

# பாடசாலை மட்டம் திறந்த மட்டங்களுக்குப் பொதுவான போட்டிகள்

## வடமோடி கூத்துப் போட்டி

முதலாம் இடம் : நாகசக்தி கலா மன்றம் முனைக்காடு.

இரண்டாம் இடம் : கண்ணகி நுண்கலை மன்றம் மகிழடித்தீவு.

## கிராமிய நடனப் போட்டி

முதலாம் இடம் : நாகசக்தி கலா மன்றம், முனைக்காடு.
முதலாம் இடம் : மட்/ அரசடித்தீவு விக்னேஸ்வரா வித்தியாலயம்.
இரண்டாம் இடம் : மட்/ முதலைக்குடா மகாவித்தியாலயம்.
மூன்றாம் இடம் : மட்/ மகிழடித்தீவு சரஸ்வதி வித்தியாலயம்.

## நாடகம்

முதலாம் இடம் : மட்/ முதலைக்குடா மகாவித்தியாலயம்.
இரண்டாம் இடம் : கண்ணகி நுண்கலை மன்றம், மகிழடித்தீவு.

## வசந்தன் கூத்து

முதலாம் இடம் : மட்/ மகிழடித்தீவு சரஸ்வதி வித்தியாலயம்.
இரண்டாம் இடம் : நாகசக்தி கலா மன்றம், முனைக்காடு.
மூன்றாம் இடம் : முத்தமிழ் கலை கலா மன்றம், முதலைக்குடா.

## கோலமிடல் போட்டி

### பகுதி I

முதலாம் இடம் : **அ. அட்சயன்**
மட்/ அம்பிளாந்துறை கலைமகள் வித்தியாலயம்.

இரண்டாம் இடம் : **பே. அனுஷியா**
மட்/அம்பிளாந்துறை கலைமகள் வித்தியாலயம்.

மூன்றாம் இடம் : **தெ. வினோதன்**
மட்/ அம்பிளாந்துறை கலைமகள் வித்தியாலயம்.

### பகுதி II

முதலாம் இடம் : **கே. டினேஷா**
மட்/கொக்கட்டிச்சோலை இராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயம்.

இரண்டாம் இடம் : **ச. அமிலா**
மட்/கொக்கட்டிச்சோலை இராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயம்.

மூன்றாம் இடம் : **ச. மதுசா**
மட்/கொக்கட்டிச்சோலை இராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயம்.

## சுயம்பு மலருக்கான முகப்பு அட்டை வரைதல்

முதலாம் இடம் : **மா.வதனரூபன்**
கலைப்பூக்கள் கலைக்கழகம், அம்பிளாந்துறை.

இரண்டாம் இடம் : **க.பகீரதன்**
இளங்கதிர் கலாமன்றம், அரசடித்தீவு.

மூன்றாம் இடம் : **கோ.கோவர்த்தனா**
மட்/ மகிழடித்தீவு சரஸ்வதி வித்தியாலயம்.

# தேசிய இலக்கிய விழா - 2013 பிரதேச மட்ட போட்டி முடிவுகள்

## கையெழுத்துப் போட்டி

### பாலர் பிரிவு

முதலாம் இடம் : **ம.சுஜி**
மட்/மகிழடித்தீவு சரஸ்வதி வித்தியாலயம்.

இரண்டாம் இடம் : **கை.விதுஷன்**
மட்/ கொக்கட்டிச்சோலை இராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயம்.

இரண்டாம் இடம் : **த.லுக்ஷிதா**
மட்/அம்பிளாந்துறை கனிஷ்ட வித்தியாலயம்.

மூன்றாம் இடம் : **வ.ஹரிஷனா**
மட்/முதலைக்குடா கனிஷ்ட பாடசாலை.

மூன்றாம் இடம் : **த.கிருஷ்ணகோபன்**
மட்/பண்டாரியாவெளி நாமகள் வித்தியாலயம்.

மூன்றாம் இடம் : **கே.கேதீசா**
மட்/பண்டாரியாவெளி நாமகள் வித்தியாலயம்.

## கவிதைப் போட்டி

### பாலர் பிரிவு

முதலாம் இடம் : **ப.திசைவன்**
மட்/பண்டாரியாவெளி நாமகள் வித்தியாலயம்.

இரண்டாம் இடம் : **த.கவிப்பிரியா**
மட்/முனைக்காடு விவேகானந்தா வித்தியாலயம்.

மூன்றாம் இடம் : **ப.அஜந்தா**
மட்/பண்டாரியாவெளி நாமகள் வித்தியாலயம்.

## கவிதைப் போட்டி

### கனிஷ்ட பிரிவு

முதலாம் இடம் : **பா.பிரஷாமினி**
மட்/முனைக்காடு விவேகானந்தா வித்தியாலயம்.

இரண்டாம் இடம் : **வா.கேசினி**
மட்/ கொக்கட்டிச்சோலை இராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயம்.

மூன்றாம் இடம் : **சி.நிஜதீபா**
மட்/கொக்கட்டிச்சோலை இராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயம்.

## கட்டுரைப் போட்டி

### கனிஷ்ட பிரிவு

முதலாம் இடம் : கோ. கனிமுகிலன்
மட்/கொக்கட்டிச்சோலை இராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயம்.

இரண்டாம் இடம் : தி. கஜானா
மட்/பண்டாரியாவெளி நாமகள் வித்தியாலயம்.

மூன்றாம் இடம் : ப. கஜந்தனா
மட்/பண்டாரியாவெளி நாமகள் வித்தியாலயம்.

## கவிதைப் பாடல்

### கனிஷ்ட பிரிவு

முதலாம் இடம் : கா. ஜெகதரன்
மட்/கொக்கட்டிச்சோலை இராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயம்.

இரண்டாம் இடம் : சு. விமலேஸ்வரி
மட்/முனைக்காடு விவேகானந்தா வித்தியாலயம்.

மூன்றாம் இடம் : ச. பரணியா
மட்/முதலைக்குடா மகா வித்தியாலயம்.

## கவிதைப் போட்டி

### சிரேஷ்ட பிரிவு

முதலாம் இடம் : சு. மாதங்கி
மட்/கொக்கட்டிச்சோலை இராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயம்.

இரண்டாம் இடம் : சு. தவநிதா
மட்/முதலைக்குடா மகா வித்தியாலயம்.

மூன்றாம் இடம் : வே. கோசலாதேவி
மட்/நாற்பதுவட்டை விபுலானந்தா வித்தியாலயம்.

## கட்டுரைப் போட்டி

### சிரேஷ்ட பிரிவு

முதலாம் இடம் : நே. கதிர்சன்
மட்/முதலைக்குடா மகா வித்தியாலயம்.

இரண்டாம் இடம் : க. சாந்தரூபி
மட்/கொக்கட்டிச்சோலை இராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயம்.

மூன்றாம் இடம் : செ. லூகிதா
மட்/கொக்கட்டிச்சோலை இராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயம்.

## கவிதைப் பாடல்

### சிரேஷ்ட பிரிவு

முதலாம் இடம் : சு. மாலினி
மட்/முனைக்காடு விவேகானந்தா வித்தியாலயம்.

இரண்டாம் இடம் : நே. கதிசன்
மட்/முதலைக்குடா மகா வித்தியாலயம்.

மூன்றாம் இடம் : க. சாந்தரூபி
மட்/கொக்கட்டிச்சோலை இராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயம்.

## பாடல் நயத்தல்

### சிரேஷ்ட பிரிவு

முதலாம் இடம் : வெ. கோசலாதேவி
மட்/நாற்பதுவட்டை விபுலானந்தா வித்தியாலயம்.

இரண்டாம் இடம் : சு. மாலினி
மட்/முனைக்காடு விவேகானந்தா வித்தியாலயம்.

மூன்றாம் இடம் : எஸ். ரூபிகா
மட்/கொக்கட்டிச்சோலை இராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயம்.

## பாடல் ஆக்கப்போட்டி

### திறந்த பிரிவு

முதலாம் இடம் : இ. குகநாதன்
முனைக்காடு வடக்கு.

## சிறுகதைப் போட்டி

### திறந்த பிரிவு

முதலாம் இடம் : கு. மயூரிஉமா
அம்பிளாந்துறை மத்தி.

## கவிதைப் போட்டி

### திறந்த பிரிவு

முதலாம் இடம் : கே. சிவகுருநாதன்
முதலைக்குடா.

இரண்டாம் இடம் : கு. மயூரிஉமா
அம்பிளாந்துறை மத்தி.

மூன்றாம் இடம் : க. பகீரதன்
அரசடித்தீவு.

மூன்றாம் இடம் : இ. குகநாதன்
முனைக்காடு.

# கலைஞர்கள் கௌரவிப்பு 2013



திரு. கதிராமப்போடி தம்பிப்போடி.



திருமதி. மாணிக்கம் அழகிப்போடி



திரு. கதிர்காமப்போடி சின்னத்தம்பி



திரு. மகேந்திரன் கேதீஸ்வரன்.



# வாழும் போதே வாழ்த்துவோம்

| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | திரு.கதிராமப்போடி தம்பிப்போடி. |
| முகவரி | : | மகிழடித்தீவு, கொக்கட்டிச்சோலை. |
| பிறந்த திகதி | : | 1920.06.11. |
| கௌரவிக்கப்படும் துறை | : | சோதிடம், மாந்திரீகம், வாகடம். |

1920ம் ஆண்டு பண்டாரியாவெளியில் பிறந்து மகிழடித்தீவில் வசித்து வரும் திரு.கதிராமப்போடி தம்பிப்போடி தனது சிறிய தந்தையைக் குருவாகக் கொண்டு சாஸ்திர சேவையை நுணுக்கமாகக் கற்று 65 வருடங்களுக்கு மேலாக இத்துறையில் ஈடுபட்டு வருகின்றார். இவர் வீட்டுக்கு நிலையம் எடுத்தல், திருமணம், பிறப்பு பற்றிய சாஸ்திரம், கிரகப் பரிகாரங்கள், வாகடம், மாந்திரீகச் செயல்கள் செய்தல் மற்றும் சித்த வைத்தியம், விஷக்கடி வைத்தியம், என்பனவற்றினையும் செய்து வந்தார். இவ்வாறான பல பணிகளை மக்களுக்கு ஆற்றிக்கொண்டிருப்பது இவரின் கலைப்பணிக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். இக்கலை அக்காலம் முதல் இக்காலத்திலும் எல்லோர் மத்தியிலும் செல்வாக்குப் பெற்று நம்பிக்கையுடன் விழங்கும் துறையாகும். இச்சோதிடம், மாந்திரீகத் துறைகளில் தன்னை அர்ப்பணிப்புடன் ஈடுபடுத்திய இவரை கௌரவிப்பதில் மண்முனை தென்மேற்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவை மகிழ்ச்சி அடைகிறன்து.



# வாழும் போதே வாழ்த்துவோம்

| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | திருமதி.மாணிக்கம் அழகிப்போடி. |
| முகவரி | : | தீர்த்தக்குள வீதி, கொக்கட்டிச்சோலை. |
| பிறந்த திகதி | : | 1943.05.10. |
| கௌரவிக்கப்படும் துறை | : | நாட்டு மகப்பேற்று வைத்தியம். |

கொக்கட்டிச்சோலையில் பிறந்து வசித்துவரும் திருமதி.மாணிக்கம் அழகிப்போடி 40 வருடங்களுக்கு மேலாக மருத்துவிச்சியாக அளப்பரிய சேவையாற்றியுள்ளார். வைத்திய வசதிகள் மிகவும் குறைவாகக் காணப்பட்ட காலத்தில் இவரின் பணியானது பல உயிர்களைக் காப்பாற்றியுள்ளது. இவரின் மகப்பேற்று வைத்தியப் பணியில் குழந்தைகள் பலர் பூமியில் புதிதாகப் பூத்துள்ளார்கள். இவர் தனது மருத்துவிச்சிப் பணியினை விருத்தி செய்யும் வகையில் 1996ம் ஆண்டு மென்ரேசாவில் உலக சுகாதார ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் முன்னெடுத்து பல பயிற்சிகளையும் பெற்றுள்ளார்.

இவரின் மருத்துவிச்சி பணியினை பாராட்டும் வகையாக மாவட்ட செயலகம் மற்றும் பட்டிப்பளை பிரதேச கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியம் என்பவற்றின் மூலம் பாராட்டுக்களையும், கௌரவிப்புக்களையும் பெற்றுள்ளார். நாட்டு மகப்பேற்று வைத்தியத் துறையில் தன்னை ஈடுபடுத்திய இவரை கௌரவிப்பதில் மண்முனை தென்மேற்கு பிரதேச கலாசார பேரவை பெருமிதம் கொள்கின்றது.



# வாழும் போதே வாழ்த்துவோம்

| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | திரு. கதிர்காமப்போடி சின்னத்தம்பி |
| முகவரி | : | முனைக்காடு தெற்கு, கொக்கட்டிச்சோலை. |
| பிறந்த திகதி | : | 1942.06.19 |
| கௌரவிக்கப்படும் துறை | : | கூத்து. |

முதலைக்குடாவில் பிறந்து முனைக்காடு தெற்கில் வசித்துவரும் திரு.க.சின்னத்தம்பி அவர்கள் கூத்துக்கலையில் சிறந்து விளங்கும் அண்ணாவியாராவார். சிறுபராயத்தில் கூத்தின் பால் கொண்ட ஆர்வத்தினால் முதன் முதலாக கர்ணன் பாத்திரமேற்று நடித்து இத்துறைக்குள் பிரவேசித்தார். தொடராக பல கூத்துக்களில் நடித்த இவர் இக்கலையை மற்றவர்களுக்கும் பயிற்றுவிக்கும் நோக்கில் கடோற்கயன் போர்க் கூத்தினை ஆட்டுவித்து சிறந்த அண்ணாவியாராக புகழ் பெற்றார். தொடராக ஆஞ்சநேயர் யுத்தம், பராசூரன் போர், குருஷேத்திரன் போர், போன்ற பல கூத்துக்களை நெறிப்படுத்திய ஒரு அண்ணாவியாராகும். இது மட்டுமின்றி கும்மி, கரகம், வசந்தன், கூத்தினையும், பாடசாலை மாணவர்களுக்குப் பழக்கி பல்துறையில் தன்னை ஈடுபடுத்தியவர். இவ்வாறு இப்பிரதேச கலைக்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்து வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லும் இக்கலைஞரை மண்முனை தென்மேற்கு கலாசாரப் பேரவை பாராட்டிக் கௌரவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றது.



# இளம் கலைஞர் பாராட்டு

| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | திரு. மகேந்திரன் கேதீஸ்வரன். |
| முகவரி | : | முனைக்காடு, வடக்கு. |
| பிறந்த திகதி | : | 1989.09.20 |
| கௌரவிக்கப்படும் துறை | : | கூத்து. |

தனது தமையனாரைப் பின்பற்றி கும்பகர்ணன் வதை என்னும் நாட்டுக் கூத்தின் மூலமாக கலைத்துறைக்குள் பிரவேசித்த இவர் அரிச்சந்திர புராணம், ஜராசந்தன் போர், நல்லதங்காள், பகாசூரன் வதை, அலங்கார ரூபன் போன்ற கூத்துக்களில் முக்கிய பாத்திரங்கள் ஏற்று நடித்துள்ளதுடன் தொடராக நடித்தும் வருகின்றார். இவ்வாறு தன்னை இக் கலைத்துறையில் நடிகனாக நிலைநிறுத்திய இவர் தன்னை ஒரு கலை பயிற்றுவிப்பாளராகவும் நிலை நிறுத்திக் கொண்டிருக்கின்றார். அந்த வகையில் நீர்முகன் வதை, தான்தோன்றீஸ்வரர் வரலாறு, கல்விக்கனி, சீரியலால் சீரளிந்த குடும்பம், போன்ற கூத்துக்களையும், கரகம், வசந்தன் கும்மி போன்ற கலைகளையும் பயிற்றுவித்து போட்டிகளில் பங்கு பற்றி மாகாண மட்டம் வரை வெற்றியீட்டச் செய்த பெருமையும் இவருக்கு உண்டு. மேலும் கிராம மட்ட சமூக அமைப்புக்களிலும் பல்வேறு பதவிகளை வகித்து வரும் இவரை பாராட்டிக் கௌரவிப்பதில் மண்முனை தென்மேற்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவை மட்டில்லா மகிழ்ச்சி அடைகின்றது.



# நன்றி நவில்லல்

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு." எனும் வள்ளுவரின் வாக்கிற்கு அமைய பலதரப்பட்ட கலைஞர்களையும், கலைகலாசார ஆர்வலர்களையும், பண்பாட்டு விழுமியங்களையும் கொண்டு மிளிரும் பட்டிப்பளை பிரதேச செயலக கலாசாரப் பேரவையால் நடாத்தப்பட்ட கலாசார விழாவிற்கு முன்னோடியாக நின்று பல்வேறு வழிகளிலும் ஆலோசனை வழங்கி ஆக்கமும், ஊக்கமும் அழித்த பேரவையின் தலைவராகிய பிரதேச செயலாளர் திருமதி. சிவப்பிரியா வில்வரத்னம் அவர்களுக்கும் **"சுயம்பு"** மலர் வெளியீட்டுக்கான நிதியுதவியினை நல்கிய வேள்ட்விஷன் லங்கா பட்டிப்பளை பிராந்தியத்திற்கும், வாழ்த்துச் செய்தி, ஆசிச்செய்தி வழங்கிய அனைத்துப் பெருந்தகைகளுக்கும் சுயம்பு மலருக்குரிய ஆக்க பூர்வமான ஆக்கங்களை வழங்கிய ஆய்வாளர்கள், கலைஞர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் கலாசார விழா போட்டிகளில் பாடசாலைகள் கலந்து கொள்வதற்கு அனுமதி வழங்கிய கோட்டக்கல்வி அதிகாரிக்கும், கலந்து கொண்ட பாடசாலைகள், கலைமன்றங்கள், நடுநிலைமையோடு நடுவனம் புரிந்த நடுநிலையாளர்கள், இவ்விழா சிறப்பாக இடம்பெற நிதி சேகரிப்பில் ஈடுபட்ட கிராமசேவை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பட்டதாரிப் பயிலுனர்கள், மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், ஆலயங்கள் ஏனைய அமைப்புக்கள், பொதுமக்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம்.

மேலும் இவ்விழா சிறப்புற நடைபெற பலவழிகளிலும் பாடுபட்டு உழைத்த பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அலுவலகப் பணியாளர்கள், பட்டதாரி பயிலுனர்கள் கலாசார பேரவை உறுப்பினர்கள், ஏனைய கலைஞர்கள் யாவருக்கும் மற்றும் இந்நூலை அச்சிட்டுத் தந்த வணசிங்கா பிரிண்டர்ஸ் ஊழியர்களுக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

அத்தோடு பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் விழாவைச் சிறப்பிக்க வருகை தந்த அனைத்து அழைப்பு அதிதிகளுக்கும் மற்றும் பல வழிகளிலும் உறுதுணையாக நின்ற அன்பு உள்ளங்கள் அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளை இயம்புவதில் பெருமிதமும், மகிழ்ச்சியும் அடைகின்றோம்.

**நன்றி.**

**செல்வி. நாகராசா வளர்மதி**
**கலாசார உத்தியோகத்தர்.**


நியூ துஷானி
போன் சொப்
&
வீடியோ சென்ரர்
06 மாதம் மற்றும் 01 வருட உத்தரவாதத்துடன்
அனைத்து போன் உதிரிப்பாகங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை
தொ.பே.: 077 7738 656, 075 274 1250
065 225 1130
போன் திருத்துதல்.
போன் பற்றரிகள்
போன் உதிரிப்பாகங்கள்
சைனிஸ் போன்கள்
புதிய, பழைய திரைப்படங்கள்
MP3 மற்றும் Audio CDகள்
அதிரடி ஹொலிவூட் திரைப்படங்கள்
மெமோரி காட்
பென்றைவ்
டிஜிற்றல் பிறிண்டிங்
போன்களுக்கு பாடல்கள் ஏற்றிக் கொடுக்கப்படும்
றிலோட், காட், சிம் (டயலொக், எயார்டல், எடிசலாட்)

அமலதாஸ் மோட்டர்ஸ்






பிரதானவீதி
கொக்கட்டிச்சோலை,
தொ.பே.இல.: 0776728040

**AMALATHAS MOTORS**

Motor Bike Sales

*Honda authorized dealer*

*Stafford Motor Co.(Pvt) Ltd.,*

*Main Street, KokkadichOlai.*

*T.P.: 077 672 8040*


Anchor
Full Cream
Milk Powder
Nestlé
NIDO
FORTIFIED
NIDO
NIDO
NIDO
LUX
Danista Store
Main Street,
Kokkaddicholai,
Batticaloa.
T.P: 0779693864
உரிமையாளர் : R. ஜசாந்தன்






# New Star Phone Shop

***PROPRIETOR T.SURESH***

**MAIN STREET, KOKKADDICHOLAI, BATTICALOA.**

**T.P: 0777 423599**

# R.S. PHONE SHOP



சகல விதமான மொபைல்
போன்களையும் மொபைல்
உதிர்ப்பாகங்களையும் மற்றும்
எல்லாவிதமான போன்களையும்
துரிதகதியில் திருத்திக்
கொடுக்கப்படும். இதற்காக
உடனடியாக நாடவேண்டிய ஒரே இடம்

**பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை** - 10

T.P.:077 9679680, 075 4289534


காலத்தால் அழியாத அசல்
22 கரட் தங்க நகைகளை உங்கள்
எண்ணம் போல் வடிவமைத்து
எண்ணக்கோலங்கள் படைக்கிறது.
அபிரா
நகை மாளிகை
& பென்சி ஹவுஸ்
பிரதான வீதி,
கொக்கட்டிச்சோலை.
அழகு உங்களிடம் அதற்கேற்ற
நகைகள் எங்களிடம்...



வேள்ட் விஷன்
பட்டிப்பளை பிராந்திய அபிவிருத்தி திட்டம்

World Vision

வணசிங்கா பிரிண்டர்ஸ், திருமலை வீதி, மட்டக்களப்பு. தொ.பே.இல.0652227170